உ

ஸ்ரீ குருப்யோ நம :

ஜய சங்கர ! ஹர ஹர சங்கர

# பராசரஸ்ம்ருதி

பிராமண, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர்
முதலானவர்களுக்குக் கலியுக தர்மத்தைப்பற்றி
ஜனனமுதல் இறுதிவரைக்கும்
ஆசாரம், நித்தியகர்மம், ப்ராயச்சித்தம்,
சூதகம் முதலியவற்றை
விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட
பராசரமாதவீய முதலான அநேகவ்யாக்கியானங்களை
யனுசரித்து
பயனுள்ள பல விஷயங்கள் இடம் பெறுகின்றன.



ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாத வேத ஸபா
திருவல்லிக்கேணி : : சென்னை-600 005.

உ

ஸ்ரீ குருப்யோநம:

ஜயஜய சங்கர ! ஹரஹர சங்கர !!

# பராஸரஸ்ம்ருதி

பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்

முதலானவர்களுக்குக் கலியுக தர்மத்தைப்பற்றி

ஜனன முதல் இறுதிவரைக்கும்

ஆசாரம், நித்தியகர்மம், ப்ராயச்சித்தம்,

சூதகம் முதலியவற்றை

விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட

பராசர மாதவீய முதலான

அநேக வ்யாக்கியானங்களை யனுஸரித்து

தேசிகாசாரியரால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

○

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத வேத ஸபா

திருவல்லிக்கேணி : : சென்னை-5.

ஸ்ரீரஸ்து

# முகவுரை

பரம காருணிகனாய் ச்ரிய:பதியான பரம புருஷன் "தாஸபூதாஸ்வதஸ் ஸர்வேஹ்யாதாத்மன: பரமாத்மன:" என்கிறபடியே ஸர்வாத்மாக்களும் தனக்குச் சேஷமாய் தானிட்ட வழக்காயிருக்கிறபடியை அநாதிமாயயா ஸுப்த: என்கிற கணக்கிலே உறக்கம் தலைக்கொண்டு உணராது ஒழியவே அறியாதன அறிவிக்கும் அத்தனை தன் ஸஹஜ ஸம்பந்தங்கொண்டு ரக்ஷிக்க விரகு பார்த்து "ஸாஸனா சாஸ்திர" மென்கிறபடியே தன்னாக்ஞையான வேதத்தைக் கொடுக்க அவைதான் துரூஹமாயும் அனந்தமாயிருந்தமை கொண்டு அல்பக்ஞராய் அல்பகால ஜீவிகளான சேதனர்திறத்தில் பயன் படாததையறிந்து. ததுபப்ரஹ்மண ரூபங்களான ஸ்ம்ருதிகளை மன்வாதிகளிடத்தில் தானும் அநுப்ரவிஷ்டனாய் பஹுமுகமாக ப்ரவர்த்திப்பித்தான். அவைகளில் பரதேவதா பாரமார்த்யவேதியான பராசர பகவான் அருளிச்செய்த பராசரர் ஸ்ம்ருதி மற்ற ஸ்ம்ருதிகள் போலன்றிக்கே கலௌ பாராசரா ஸ்ம்ருதா: என்கிறபடியே கலியுகத்தில் உபயோகப்பட தகுந்ததாகையால் அந்த ஸ்ம்ருதி கீர்வாண பாஷையிலிருப்பதால் ததக்ஞர்களுக்கும் எளிதில் அறிவுண்டாகும் பொருட்டு தமிழில் மொழி பெயர்த்து தாத்பரியம் எழுதப்படுகிறது. இதில் புத்தி மாந்தியத்தால் ஏதேனும் பிழையுளவேனும் பெரியோர்கள் பொறுப்பது கடனேயென்று க்ருபை செய்யப் பிரார்த்திக்கின்றனன்.

## பராசரர் சரித்திரம்

தாவிப்புவனங்கள் தாளிணை சூட்டிய தந்தையுந்திப் பூவிற் பிறந்த சதுமுகனுக்கு ஜயேஷ்ட புத்திரரான வஸிஷ்ட மகாரிஷிக்குப் புத்திரரான சக்தி என்பவரிடத்தில் உதித்த தபோநிதியான பராசர பகவான் தன்னுடைய பிதாவை ஓர் அரக்கன் கொன்ற நிமித்தமாகக் கோபம் கொண்டு ராக்ஷஸரை எல்லாம் ஒழிக்கும் யாகம் செய்கிற வரையில் புலஸ்தியரோடுகூட வஸிஷ்டர் அவ்விடம் வந்து தத்வங்களைச் சொல்லி அவர் கோபத்தை சமிப்பித்து அவ்விருவரும் இவருக்கு ஸ்ம்ருதி புராணங்

களைச் செய்யும் திறமையையும் பரதத்வ நிர்த்தாரணம் பண்ணும் சக்தியையும் வரமளித்தவுடன் இந்த ஸ்ம்ருதியையும் ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலிய மற்ற அநேக க்ரந்தங்களையும் செய்து தமது புத்திரராயும் பரம புருஷ அவதாரரூபமாயிருக்கிற வ்யாஸரை முன்னிலையாகக் கொண்டு ப்ரவர்த்திப்பித்தார். இன்னம் இவருடைய பெருமைகளை விஷ்ணு புராணம் முதலிய இடங்களில் பரக்கக் காணலாம்.

## அவதாரிகை

வேதங்கள் ஒரு புருஷனால் செய்யப்படாததாகையாலும் சப்தங்களுக்கு ஸ்வபாவத்தில் தோஷங்களில்லையேயாகிலும் புருஷ ஸம்பந்த ப்ரயுக்தமாக தோஷ ஸம்பாவனை உண்டாகையால் இவைகளுக்கு தத்ஸம்பந்தாதீனமான தோஷங்களில்லையாகையாலும் அவைகள் அதீயமானங்களேயன்றி அனதீயமான பாகங்களாயிருப்பதாலும் அவ்விரு பாகங்களையும் ஸாக்ஷாத்கரித்து எளிதில் க்ரந்தமாகச்செய்த ஆப்தவாக்யங்களை ப்ரமாணமாக கொள்ள வேண்டுகையாலும் சாக்யாதி க்ரந்தங்களுக்கு "யத்வை கிஞ்ச மநு: அவதத் தத்பேஷஜம்" என்றும் "ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்றும் வைதிக ப்ரஸித்தியில்லாமையாலும் இவைகளே ப்ரமாணதமம் என்பது ஸுஸ்திரம். இந்த ஸ்ம்ருதியில் ஆசார காண்டம் என்றும் ப்ராயச்சித்த காண்டமென்றும் இரண்டு காண்டங்களும் பன்னிரெண்டு அத்தியாயங்களும் முந்நூற்று எழுபத்து எட்டு ஸ்லோகங்களும் அடங்கி இருக்கின்றன. இவற்றில் முற்பட ஆசாரங்களைச்செய்ய வேண்டியபடியால் கூறுமிடத்தில் அவைகள் மூன்று அத்தியாயங்களால் முற்படக் கூறப்பட்டு அவ்வாசாரம் தவறுதலால் ப்ராயச்சித்தம் ஆவஸ்யகமாகையால் அது பிற்பட ஒன்பது அத்தியாயங்களால் கூறப் பட்டிருக்கிறது.

---

ஸ்ரீரஸ்து

# பராசரஸ்ம்ருதியின்

## அட்டவணை

---

விஷயம்


| ச்லோகம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ருஷிகள் வ்யாஸரிடம் சென்று கலியுக தர்மத்தைக் கேட்டது | 1 |
| 2 | ருஷிகளைக்குறித்து எனக்கு ஸம்பூர்ணமாகத் தெரியாது: என் தகப்பனுரைக் கேட்கவேணுமென்று வ்யாஸர் சொன்னது | |
| 3 | ருஷிகளும் வ்யாஸரும்சேர்ந்து போய்பதரிகாஸ்ரமத்தில் பராசரரைப்பார்த்து வணங்கிஸ்துதித்தது | 2 |
| 6 | குசலப்ரஸ்நம்செய்து கொண்டது | 3 |
| 8 | வ்யாஸர், எனக்கு தர்மோபதேசம் செய்யுமென்று பராசரரைக் கேட்டது | ,, |
| 9 | இதுவரையில் தான்கேட்ட தர்மசாஸ்த்ரத்தையநுவதித்தது | ,, |
| 10 | இதுவரையில்கேட்ட தர்மங்கள் யுகாந்தரவிஷயமென்னுதல் | ,, |
| 11 | அந்த தர்மங்கள் கலியுகத்தில் அழிந்து போனபடியால் இப்போதநுஷ்டிக்க யோக்யமான தர்மங்களைச் சொல்லுமென்று கேட்டது. | 4 |
| 12 | நீர்கேட்ட தர்மத்தைச் சொல்லுகிறேனென்று பராசரர் ப்ரதிஜ்ஞை செய்தது | ,, |
| 13 | தர்மநிர்ணயம்செய்கிற ஸ்ம்ருதி கர்த்தாக்கள் யுகங்கள்தோறும் அவதரிக்கிருர்களென்பது | ,, |
| 16 | வேதம்நித்யமென்றும், அதிற்சொல்லிய தர்மங்களை கல்பங்கள்தோறும் மநுஉபதேசிக்கிருரென்னுதல் | 5 |

| சுலோகம் | | பக்கம் |
|---|---|---|
| 17 | யுகங்கள்தோறும் அவ்வவ யுகங்களுக்குத் தக்க படி தர்மங்கள் வெவ்வேறென்னுதல் | 5 |
| | யுகானுஸாரியான தர்மங்களின்னதென்னுதல் | ,, |
| 19 | அந்தந்த யுகங்களிலநுஷ்டிக்கத்தக்க தர்மசாஸ்திரங்களின் விவரம் | ,, |
| 20 | யுகபேதத்தினல் தோஷியுடன் ஸம்பந்தித்தவைகளைவிடும் விவரம் | ,, |
| 21 | யுகபேதத்தினல் தோஷஸம்பர்கத்தின் விவரம் | ,, |
| 22 | யுகபேதத்தினல் சாபங்கள் பலிக்குங்காலம். | 6 |
| 23 | அவ்வவயுகங்களிலுள்ளவர் தானம் செய்து கொண்டிருக்கிற பிரகாரம் | |
| 24 | அந்தந்த தானங்களுக்கு உத்தமமத்யமாதமவ்யவத்ஸ்தை | ,, |
| 25 | கலியில் தர்மம் முதலியவை நஷ்டமாய்ப் போன விதம் | ,, |
| 27 | யுகங்கள்தோறும் சரீரவலிவின்விதம் | 7 |
| 28 | கலியுகத்தில் தர்மங்கள் அற்பமாயினும் பிராமணர்கள் ஆசாரஹீநர்களாயினும் அவர்களை நிந்திக்கக்கூடாதென்பது | ,, |
| 29, 30 | யுகானுஸாரமாகப்பூர்விகர்கள் சொன்ன தர்மங்களை யாலோசித்து இந்த யுகத்திற்குபயோகியாகவ்ருத்தபராசரர்மொழிந்த தர்மங்களைச் சொல்லுகிறேனென்று ப்ரதிஞ்ஞை செய்தல் | ,, |
| 32 | எல்லோருக்கும் ஆசாரம் முக்கியமென்பது | 8 |
| 33 | ஆசாரமுள்ளவன் துன்பமுறுனென்பது | ,, |
| 34 | ஷட்கர்மங்களின் ஸ்வரூபம் | ,, |
| 36 | அதிதிஸ்வரூபநிரூபணம் | ,, |
| 38 | அதிதிபூஜாவிதி | 9 |
| 39 | அதிதியைப் பூஜியாவிடில் தோஷமென்பது | ,, |
| 40 | ஸத்பாத்ரத்தில் தானம்செய்ய வேணுமென்பது | ,, |
| 41 | அதிதியைப் பரீக்ஷைசெய்யக் கூடாதென்பது. | ,, |
| 42 | ஸதாசாரமுள்ளவன் அதிதிவேதாத்யயனம்செய்கிறவன் இம்மூவரும் நித்யம் பூஜிக்கத்தக்கவர்களென்பது. | 10 |

| சுலோகம் | | பக்கம் |
|---|---|---|
| 43 | வைஸ்வதேவத்திற்கு முன் ஸந்நியாஸி பிக்ஷக்குவந்தால் அவனுக்கு பிக்ஷயிடும் விதம் | 10 |
| 44 | பிக்ஷயின் பரிமாணம். | 10 |
| 45 | பிக்ஷயிடும் விதம். | ,, |
| 47 | ஸம்பத்துள்ளவனு மதிதியாவானென்பது. | ,, |
| 47 | வைஸ்வதேவத்திற்கு முன் வந்த ஸந்நியாஸிக்கு பிக்ஷ யிடாமை தோஷமென்பது. | 11 |
| 47 | வைஸ்வதேவம் செய்யாவிடில் தோஷமென்பது. | ,, |
| 49 | அதிதி பூஜையின் பலம். | ,, |
| 51 | போஜநகாலத்திலுள்ள சில நியமங்கள். | 12 |
| 52 | எல்லோரும் பிக்ஷயெடுக்கக்கூடாதென்பது. | ,, |
| 53 | க்ஷத்திரியன் ராஜ்யபரிபாலநம் செய்யும் விதம். | ,, |
| 55 | கப்பம்வாங்குகிற விதம். | ,, |
| 54 | வைஸ்யவ்ருத்தி. | ,, |
| 56 | சூத்ரவ்ருத்தி. | 13 |
| 57 | சூத்திரன் விற்கவேண்டிய வஸ்துக்கள். | ,, |
| 58 | சூத்ரன் செய்யத்தகாத கார்யங்கள். | ,, |


---

## இரண்டாவது அத்தியாயம்


| | | |
|---|---|---|
| 59 | இந்த அத்யாயத்தில் சொல்லப்போகிற தர்மங்களின்ன தென்பது. | ,, |
| 60 | இந்த யுகத்தில்ப்ராஹ்மணன் தன் கர்மங்களை முடித்துக்கொண்டு வ்யவஸாயம் செய்யலா மென்பது. | 14 |
| 61 | வ்யவஸாயம் செய்யும் ப்ராமணன் வ்ருஷபங்களை வைத்துக் கொண்டிருக்கும் விதம். | ,, |
| 62 | பின்பவன் செய்யவேண்டிய க்ருத்யம். | ,, |
| 63 | பயிரிடும்பிராமணன் களத்தில் வந்தவர்களுக்குப் பிச்சையிடவேண்டு மென்பது. | ,, |
| 65 | பிராமணன் விற்பனை செய்யத்தக்க வஸ்துக்கள். | 15 |
| 66 | உழவினல் நேரிடும்பாபம். | ,, |

ஸ்லோகம் பக்கம்

67 அதைதாநத்தினுல் போக்கிக்கொள்ள வேணு மென்பது தனக்கு வந்த தானியத்தை விபாகம் செய்யவேண்டும் விதம். 15

72 க்ஷத்திரியன் பயிரிடலாமென்பது 16

72 வைசியனும் சூத்திரனும் பயிரிடுதல் வியாபாரம் செய்தல் முதலியவைகளைச் செய்யலா மென்பது ,,

73 சூத்திரனுக்குத் விஜசிஸ்ரூஷை முக்கியமென்பது. ,,

மூன்ருவது அந்தியாயம்

76 நான்குவர்ணஸ்தர்களுக்கும் ஆசௌசக்ரமம் 17

86 துர்மரண தேசாந்தர மரணங்களில் 19

88 பல்முளைப்பதற்கு முன்னம்மரித்தால் ,,

90 ஸ்ராவபாதங்களில் ,,

90 ஸ்ராவபாதப்ரஸவங்களின் விவரம் ,,

91 ஸம்ஸ்காரபேதத்தினுலாசௌசபேதம் ,,

92 வயஸைதப்பற்றின ஆசௌசம் 20

93 பிர்ம்மசாரிக்கும் அக்னிஹோத்ரிக்கும் தீட்டில்லை யென்பது

96 ப்ரஸவாசௌசவிஷயம் 21

97 தீட்டுக்கு முன்னெடுத்துவைத்த த்ரவ்யத்துக்குத் தீட்டில்லை யென்பது

100 தீட்டுக்குள் தீட்டுவந்தால் வேறு தீட்டில்லை யென்பது 22

103 யுத்தத்தில் மரித்தவனுக்குத் தீட்டில்லையென்பது ,,

104 யுத்தத்தில் மரித்தவனுடைய ப்ரசம்ஸை

111 அநாதப்ரேதத்தைவகித்தால் தீட்டில்லையென்பது 24

112 பிராம்மணபிரேதத்தை அனுகமனம் செய்த வனுக்குவிதி ,,

114 க்ஷத்திரிய பிரேதத்தைப் பின் சென்றவனுக்கு 25

115 வைச்ய பிரேதத்தைப் பின் சென்றவனுக்கு

116 சூத்ர ப்ரேதத்தைப் பின் சென்றவனுக்கு

116 சூத்திரனுக்கு உபசாரம் சொல்லவேண்டிய காலம்

## ஆசாரஸங்க்ரகம


| | பக்கம் |
|---|---|
| பல்தேய்தல் | 28 |
| ஸ்நாநம்செய்தல் | ,, |
| வஸ்திரம் தரித்தல் | 29 |
| ஊர்த்வபுண்ட்ரம் தரித்தல் | 30 |
| ஸந்தியாவந்தனவிதி | 31 |
| தர்ப்பணம் செய்யும் கிரமம் | 32 |
| மாளயசிராத்தவிதி | 33 |
| சிராத்தத்தில் பிராமணர்களின் நியமம் | 34 |


---

## பிராயச்சித்தகாண்டம்


| சுலோகம் | நாலாவது அத்தியாயம் | |
|---|---|---|
| 1 | தூக்குப்போட்டுக் கொண்டிறந்தவனுடைய துர்கதி | 35 |
| 3 | அவனுக்குத் தீட்டும் கிரியைகளுமில்லையென்பது | ,, |
| 4 | அவனைத் தூக்கினவர்களுக்கும் தகநம் செய்தவர்களுக்கும் பிராயஸ்சித்தம் | ,, |
| 5 | கோபிராமணர்களால் மரித்தவனைத் தூக்கிக் கொளுத்தினவர்களின் பிராயச்சித்தம் | 36 |
| 7 | ஸம்பர்க பிராயச்சித்தம். | ,, |
| 8 | பெண்டுகள் ருதுஸ்நாநம் செய்தபிறகு பர்தாவுடன் சேர வேணுமென்பது | 37 |
| 8 | பர்தாபிழைத்திருக்கும்போது ஸ்திரீ உபவாஸம் முதலிய விரதங்கள் செய்யக்கூடாதென்பது | ,, |
| 8 | கர்பத்தை அழித்தவளைப்பற்றி | ,, |
| 10 | க்ஷேத்திரம் பிரதானமென்பது | ,, |
| 10 | பிள்ளைகளின் விவரம் | ,, |
| 12 | பரிவித்தி பரிவேத்தாக்களின் பிராயச்சித்தம் | 39 |

ஸ்லோகம் பக்கம்
12 பெரியவன் பிரயோஜநமற்றவனுனல் பரிவித்தி தோஷமில்லையென்பது 39
12 தமயனுக்குக் கலியாணமாகாமல் தம்பிக்குக் கலியாணம் கூடாதென்பது
16 பெண்களுக்குப் புநர்விவாகம் 40
19 விதவையான ஸ்திரீ பதிவ்ரதையாயிருந்தால் அநந்தபுண்ணியமென்பது ,,

## ஐந்தாவது அத்தியாயம்

20 நாய் கடித்தவனுக்குப் பிராயச்சித்தம் 41
29 சண்டாளாதிகளினுல் துர்மரணமடைந்தவனை ஸம்ஸ்காரம் செய்தவனுக்கு பிராயச்சித்தம் 43
30 புநர்தாகவிதி
32 அக்னிஹோத்ரியின் புநர்தாக பிரகாரம்

## ஆறுவது அத்தியாயம்

42 பக்ஷிகளைக் கொன்றவனுக்கு பிராயஸ்சித்தம் 46
43 எலி பூனை முதலியவைகளைக் கொன்றவனுக்கு பிராயச்சித்தம்
46 நாற்கால் ஜந்துக்களைக் கொன்றவனுக்கு பிராயஸ்சித்தம்
50 சில்பிசூத்திரன் முதலியவர்களைக் கொன்றவனுக்கு பிராயச்சித்தம் 48
51, 52 வைச்யவதபிராயச்சித்தம், சூத்திரவதபிராயச்சித்தம்
53 சண்டாளவதபிராயச்சித்தம்
55 சண்டாளனுடன் பேசினதற்கு பிராயச்சித்தம் 49
56 சண்டாளனுடன் தூங்கினதற்கும் வழிநடந்ததற்கும் பிராயச்சித்தம்

ச்லோகம் பக்கம்

57 சண்டாளனைப் பார்த்ததற்கும் தொட்டதற்கும் பிராயச்சித்தம் 49

58 சண்டாளன் கிணற்றில் நீர்குடித்ததற்கு பிராயச்சித்தம் 50

59, 60 சண்டாளன் பாத்திரத்திலிருந்த நீர் குடித்ததற்கு பிராயச்சித்தம் 50

62 சண்டாளன் பாத்திரத்திலிருந்த தயிர் நெய் முதலியவை குடித்ததற்கு பிராயச்சித்தம் 51

63 சண்டாள னன்னத்தைப் புசித்தவனுக்கு பிராயச்சித்தம்

65 சண்டாளன் தெரியாமல் வீட்டிலொளிந்திருந்தால் அதற்கு பிராயச்சித்தம்

65,67 சண்டாளனோடு ஸகவாஸம் செய்தவனுக்கு பிராயச்சித்தம் 53

65 வீட்டிற்குள் சண்டாளன் நுழைந்தால் அதற்கு பிராயச்சித்தம்

77 விருணத்தில் புழு வைத்தால் அவனுக்குப் பிராயச்சித்தம் 54

87 மரணகாலத்தில் நிர்பந்திக்கக்கூடாதென்பது

94 மயிர், புழு இவைகளுள்ள அன்னத்தைச் சுத்திசெய்யும்விதம்

96 நாய் முதலியவை பார்த்து போஜநம் செய்யக்கூடாதென்பது 57

101 அதிகமான அன்னத்தைக் காகம் முதலியவை தொட்டால் அதற்கு சுத்திசெய்யும் விதம் 58

102 காகம் தீண்டின நெய் பால் முதலியவைகளை சுத்திசெய்யும் விதம்.

---

## ஏழாவது அத்தியாயம்

106,107 பாத்திரங்களின் சுத்தி கிரமம். 60

110 குளம் கிணறு முதலியவைகளின் சுத்தி கிரமம்.

111 கன்யகாதிலக்ஷணம். 61

ஸ்லோகம் பக்கம்

115 ரஜஸ்வலைகள் ஒருவர்க்கொருவர் தொட்டுக் கொண்டால் பிராயஸ்சித்தம் 62

118 ரஜஸ்வலைகளின் சுத்திக்ரமம் 63

12510130 பாத்ரசுத்திக்ரமமம் 64

139 ஆபத்காலத்தில் தர்மா நுஷ்டாநக்ரமம் 67


---

## எட்டாவது அத்தியாயம்


142143 கோவதம் செய்தவன் பின்பு செய்யவேண்டும் விதம் 68

146 மூர்க்கரைப் பரிஷத்தில் சேர்க்கக்கூடாதென்பது

152153 பரிஷத்தின் ஸ்வரூபம்

146 மூர்க்கர்கள் பிராயச்சித்தம் விதிக்கக்கூடா தென்பது 69

167 ராஜாவின நுமதியினுல் பிராயச்சித்தம் விதிக்க வேண்டுமென்பது 74

169 பிராயச்சித்தம் விதிக்கவேண்டிய இடம்

170 கோவத பிராயச்சித்தம் 76


---

## ஒன்பதாவது அத்தியாயம்


179 பசுக்களைத் தொழுவத்தி லடைப்பதிலும் கட்டு வதிலும் தோஷமில்லை யென்பது 77

180 கோவதத்தில் அவாந்தரபேதம்

182 வதபேதத்தினுல் பிராயச்சித்தபேதம்

182 வதபேதங்களின் விவரம்

187,188 தண்டபிரமாணம்

188 அடித்தபின் எழுந்து புல்தின்ருல் பிராயச்சித் தமில்லை யென்பது 79

189 கர்ப்பம் தரித்த பசுவைக் கொன்றவனுக்குப் பிராயச்சித்தம் 80

ஶ்லோகம் பக்கம்

192 நிபாதநமென்கிற கோவதத்தில் அவாந்திர பேதத்தினால் பிராயச்சித்த பேதம் 80

194 அடிக்கப்பட்டபசு ஆறுமாசம் பிழைத்திருந்தால் பிராயச்சித்தமில்லை யென்பது.

193 தடிமுதலியவைகளினால் அடித்தவனுக்கு பிராயச்சித்தம்.

கோவதத்தில் நிமித்தபேதம்.

206 ஸ்தலபேதத்தினாலும் மரணபேதத்தினாலும் பிராயச்சித்தபேதம்.

221 கோவதத்தைப் பார்த்தவர்களுக்கு பிராயச்சித்தம்.

223 ஒரு கோவை அனேகர் சேர்ந்துகொன்றால் அதற்கு பிராயச்சித்தம். 86

234 கோவதத்தை மறைக்கக்கூடாதென்பது. 88

## பத்தாவது அத்தியாயம்.

236 அகம்யாசமநபிராயச்சித்தம் 89

237 சாந்த்ராயணவிதி.

240 சண்டாளஸ்திரீயைப்புணர்ந்தவனுக்கு பிராயச்சித்தம். 90

243 தாய் உடன்பிறந்தாள் முதலியவர்களைப் புணர்ந்தவனுக்குப் பிராயச்சித்தம். 91

247 தாசி, பசு முதலியவற்றைப் புணர்ந்தவனுக்குப் பிராயச்சித்தம். 92

251 சண்டாளனைப் புணர்ந்தஸ்த்ரீக்குப் பிராயச்சித்தம். 93

254 பலாத்காரத்தினால்புணரப்பட்டவளுக்குபிராயச்சித்தம் 94

257 ஸாந்தபநவிதி. 95

258 வியபிசாரம் செய்தவளுக்கு பிராயச்சித்தம்.

259 பரபுருஷனுடன் சேர்ந்து ஓடிப் போனவள் திரும்பி வீட்டிற்கு வந்தால் பிராயச்சித்தம்.

## பதினொன்றாவது அத்தியாயம்.


| ச்லோகம் | | பக்கம் |
|---|---|---|
| 268 | அமேத்தியம் தின்றவனுக்கு பிராயச்சித்தம். | 98 |
| 269,270 | நிஷித்தாந்நபக்ஷணத்தில் பிராயச்சித்தம். | |
| 272 | பூனைமுதலியவை மோந்த அன்னத்திற்கு சுத்தி செய்யும் விதம் | |
| 273 | ஒரு பந்தியில் சாப்பிடும்போது ஒருவன் ஆபோசனம் செய்தபின் சாப்பிட்டவனுக்கு பிராயச்சித்தம். | 99 |
| 274 | வெங்காயம் முதலியவை தின்றவனுக்கு பிராயச்சித்தம். | 100 |
| 282 | ஆபத்காலத்தில்சூத்ராந்நபோஜனத்தில் பிராயச்சித்தம் | 101 |
| 283 | தாஸாதிகளிடத்தில் தயிர் பால் வாங்கலாமென்பது. | 102 |
| 284 | தாஸாதிகளின் விவரம். | |
| 285 | நீசஜாதியின் பாத்திரத்திலிருந்த தயிர் பால் சாப்பிட்டவனுக்கு பிராயச்சித்தம். | 103 |
| 286 | பஞ்சகவ்யவிதி. | |
| 295 | எச்சில் ஜலத்தைக் குடித்தவனுக்கு பிராயச்சித்தம். | 105 |
| 296 | சவம் கிடந்த கிணற்றின் ஜலத்தைக்குடித்தவனுக்கு பிராயச்சித்தம். | 106 |
| 297 | பரபாகரதன் முதலியவர்களின் வீட்டில் சாப்பிடக்கூடாதென்பது. | |
| 297 | அவர்களின் விவரம். | |
| 298 | பிராமணனையவமானம் செய்தவனுக்கு பிராயச்சித்தம். | 107 |
| 303 | ஸங்கரபிராயச்சித்தம். | |

## பன்னிரண்டாவது அத்தியாயம்


சுலோகம் — பக்கம்

308 வாந்தி, மைதுநம், க்ஷௌரம், துஸ்வப்நம், இவைகளில் பிராயச்சித்தம். 108

311 மலமூத்ராதிபக்ஷணத்தில் பிராயச்சித்தம். 109

312 அக்நி, ஜலம் இவைகளில்விழுந்து மீண்டவனுக்கு பிராயச்சித்தம். 109

313 ஐந்துவிதமான ஸ்நாநம். 110

322 தும்பினுல் வலக்காதைத்தொடவேணுமென்பது 112

334,335 சூத்ராந்நபக்ஷணுதிகள் பிராயச்சித்தம்.

337 ஸௌத்ராந்நபக்ஷணத்தில் பிராயச்சித்தம்.

341 சாப்பிடும்போது பேசக்கூடாதென்பது. 116

343 பந்தியில் சாப்பிடும்போது தான் முன்னே எழுந்திருக்கக் கூடாதென்பது.

346 கிரகஸ்தன் செய்யவேண்டும் கிருத்தியம் 117

349,350 கோசர்மலக்ஷணம். 118

352 பூமியை அபகரித்தவனுக்கு பிராயச்சித்தம்.

353 ரஜஸ்வலை ஒதுங்கவேண்டும் தினம்

354 சண்டாளன் முதலியவர்களுக்கு இவ்வளவு தூரம் ஒதுங்க வேணுமென்பது 119

357 பெண்டாட்டியைப்பார்த்து மாதாவென்று சொன்னவனுக்கு பிராயச்சித்தம்

358 துர்பிராமணன் அன்னத்தை புசித்தவனுக்கு பிராயச்சித்தம் 120

362 கிரகஸ்தன் ரேதஸ்கலநம் செய்து கொண்டால் பிராயச்சித்தம் 121

365 பிரம்மஹத்தி செய்தவனுக்கு பிராயச்சித்தம்

372 கள் குடித்தவனுக்கு பிராயச்சித்தம் 123

374 பொன் திருடினவனுக்கு பிராயச்சித்தம்

378 இந்த தர்மசாஸ்திரத்தை நித்யமாக எல்லோரும் அத்தியயநம் செய்யவேண்டுமென்பது. 124


பராசரஸ்ம்ருதியின் அட்டவணை முற்றிற்று.

# மழைக்குக் காரணம் யாது?

திலீபன் என்னும் ராஜன் தனது குல குருவான வசிஷ்டரை ஆஸ்ரமத்தில் வந்து பணிந்தபொழுது அவர் யோகக்ஷேமம் விசாரிக்க அதற்கு பதில் கூறும் வகையில் மேற்கண்ட கேள்விக்கு காளிதாஸன் கூறுகிருன்.

"சத்குரோ! தங்களால் விதிப்படி அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸானது உலகிற்கு மழையாக வருகின்றது" என்கிருர். விதிப்படி தேவதைகளை நாடி அக்னியில் வேள்வி அல்லது ஹோமம் நடந்தால் காலத்தில் மழை பொழியும். மற்ருேரிடத்தில் அரசனைப் பார்த்து வசிஷ்டர் "அரசே! நீ வேள்வி செய்வதற்காக பூமியைக் கறக்கின்ருய். அதாவது வரி வசூல் செய்கின்ருய் இந்திரன் பயிர்களுக்காக ஆகாசத்தைக் கறக்கின்ருன்" என்கிருர்.

உலகம் போற்றும் பகவத் கீதையில் யக்ஞத்திலிருந்தே மழை உண்டாகின்றது. மழையிலிருந்து அன்னம் உண்டாகிறது. மழை யக்ஞத்திலுைம், யக்ஞம் கர்மாவிலுைம், கர்மா வேதத்திலுைம், வேதம் ப்ரும்மத்திலுைம் உண்டாகிறது. ப்ரும்மத்திஞல் வேதமும், வேதத்திஞல் கர்மாவும், கர்மாவிஞல் யக்ஞமும், யக்ஞத்திஞல் மழையும், மழையிஞல் அன்னமும், அன்னத்திஞல் மனிதர்களும் உண்டாகிருர்கள். இது ஒரு சக்ரம்போல் சுழன்றுவருகிறது. சக்ரம் சுழன்ருல்தான் வண்டி ஓடும்.

தர்ம நூலும் "முறைப்படி அக்னியில் செய்யும் ஹோமம் ஆதித்தனை அடைகின்றது. அவரிடமிருந்து மழை உண்டாகிறது" என்கின்றது. மேக சந்தேசத்தில் புகை, ஜ்யோதிஸ், நீர்த்துளி, காற்று இவைகளின் சேர்க்கையே மேகம் என்று வர்ணிக்கிருர் காளிதாஸன். இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்பொழுது அக்னியில் செய்யும் ஹோமம் புகையுடன் ஆவியாக மாறி ஆகாஸத்தை அடைந்து மழையாக உலகிற்கு வருகின்றது. இது விஞ்ஞான சாத்திரத்திற்கும் ஒத்ததாக இருக்கின்றது என்பது ஸ்பஷ்டம்.

## ஜபம் செய்தும் ஏன் மழை உண்டாகவில்லை ?

தற்சமயம் மழையின்மையால் வருந்தி பல இடங்களில் வருண ஜபம் ஹோமம் பாராயணம் முதலிய பல ஸத்கருமங்கள் நடக்கின்றன. எனினும் நாட்டில் நல்ல மழை இல்லை. ஏரி குளம் கிணறுகள் வற்றிப்போயின. கிணற்றில் மிக மிக ஆழமாக (பிள்ளைக் கிணறு, பேரன் கிணறு என்று) பல உறைகள் அமைத்தும் கஷ்டப்படுகின்றனர். எனினும் ஜலம் கிடைப்பது அரிதாகின்றது. இதற்குக் காரணம் நாடு நகரங்களில் குளங்களும் குட்டைகளும் மடுவுகளும் பல இடங்களில் ஜலத்தேக்கம் இருந்தன. அவை எல்லாம் அசுத்தம் என, அல்லது வீடு கட்ட இடம் வேண்டுமென தூர்த்து விடப்பட்டன அந்த ஜலத் தேக்கங்களே கிணற்றில் ஊற்றாக வந்தன.

தற்போது நடக்கும் ஜப ஹோம பாராயணங்கள் இன்னும் பற்பல இடங்களிலும் விதி வழுவாமலும் அதிக ச்ரத்தையுடனும் நடக்க வேண்டும். அன்றியும் காம்ய கர்மாக்களில் சிறிதளவுகூட மந்த்ரம் தந்திரம் பொருள் சிரத்தை ஆசாரம் ஆனுஷ்டானம் சிறிதுகூட குறையாமல் இருக்கவேண்டும். அன்றியும் பலன் வரும் வரை அந்த கர்மாவைச் செய்யவேண்டும். நித்தியமாகவே செய்யவேண்டிய ஜபம் ஹோமம் பாராயணம் அனுஷ்டானம், இவைகளை விட்டு திடீரென ஒருநாள் மட்டும் இவைகளைச் செய்வது தன் காரியத்திற்காக மட்டிலும் ஒரே நாள் தனிகர் அல்லது நண்பரை அண்டுவது போலாகும்.

இக் காரியத்தை எல்லோரும் செய்ய முடியாது. இதற்காகத்தான் ஒரு வகுப்பாரை ஒதுக்கிவிட்டு அவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்து ஜபதபாதிகளைச் செய்யும்படி இதரர் ஆதரவளித்தனர். அதில் எல்லோருக்கும் நம்பிக்கை குறையவே, மழையும் செல்வமும் குறைகிறது. ஆதலால் உரியவர்கள் அக்னிஹோத்ரம், ஔபாஸனம், இஷ்டி, ஸ்தாலீபாகம் முதலிய அக்னி காரியங்களையும உரிய பாராயணுதிகளையும் செய்துவர வேண்டும்.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ ராமஜெயம்.

# பராசரஸ்ம்ருதி

## முதல் அத்தியாயம்

## ஆசார காண்டம்

அதாதோ ஹிமசைலாக்ரே தேவதாருவநாலயே
வ்யாஸமேகாக்ரமாஸீந மப்ருச்சந்ருஷய: புரா.
மாநுஷாணும்ஹிதம்தர்மம் வர்த்தமாநேகலௌயுகே
ஸௌசாசாரம்யதாவச்ச வதஸத்யவதீஸுத. 1

(இதன்பொருள்.) முன்னொருகாலத்தில் மகரிஷிகளெல்லாம் தேவதாரு மரங்களால் நிறைந்த இமயமலையில் ஒரேமனதாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் வியாஸரைப்பார்த்து ஓ ஸத்யவதீ குமாரரே! இந்தக்கலியுகத்தில் மனிதர்களுக்கு ஹிதமான தர்மத்தையும் சுத்தமான வாசாரத்தையும் கிரமப்படி சொல்லுவீரென்று கேட்டார்கள்.

தச்ச்ருத்வாமுநிவாக்யந்து ஸஸிஷ்யோக்நியர்கஸந்நிப:
ப்ரத்யுவாசமஹாதேஜாஸ்ஸ்ருதிஸ்ம்ருதிவிஸாரத:
நசாஹம்ஸர்வதத்வஜ்ஞ:கதம்தர்மம்வதாம்யஹம்
அஸ்மத்பிதைவப்ரஷ்டவ்ய இதிவ்யாஸஸ்
ஸுதோப்ரவீத். 2

(இ-ள்.) சிஷ்யர்களோடு கூடியும் அக்நிக்கும் சூரியனுக்கும் சமானமானவராயும் அதிக தேஜோவானுயும் ஸ்ருதி ஸ்மிருதி இவைகளை யுணர்ந்தவராயும் பராசருக்குப் புத்திரராயுமிருக்கிற வியாஸர் அந்த ரிஷிகளின் வாக்யத்தைக்கேட்டு நான் எல்லாத்தத்வங்களையும் உணர்ந்தவனல்லேன். எவ்வண்ணம் தர்மமுரைக்கக்

கடவேன் என் பிதாவையே கேளுங்கள்என்று பதில் சொன்னார்.

ததஸ்தேருஷயஸ்ஸர்வே தர்மதத்வார்த்தகாங்க்ஷிண:
ருஷிம்வ்யாஸம்புரஸ்க்ருத்ய கத்வாபதரிகாஸ்ரமம். 3

(இ - ள்.) பிறகு அம்முனிவர்களெல்லாரும் தர்மத்தினுண்மைப்பொருளை யறியவிரும்பினவர்களாய் வியாஸமகரிஷியை முன்னிட்டுக்கொண்டு பதரிகாச்ரமத்தை நோக்கிச்சென்று.

நாநாபுஷ்பலதாகீர்ணம் பலபுஷ்பைரலங்க்ருதம்
நதீப்ரஸ்ரவணோபேதம் புண்யதீர்தோபஸோபிதம்.
ம்ருகபக்ஷிநிநாதாட்யம் தேவதாயதநாவ்ருதம்
யக்ஷகந்தர்வஸித்தைஸ்ச ந்ருத்தகீதைரலங்க்ருதம். 4

(இ - ள்.) (அந்தபதரிகாஸ்ரமம்) அனேகம் புஷ்பக்கொடிகளால் நிறைந்தும் பழங்களாலும் புஷ்பங்களாலுமலங்கரிக்கப் பட்டதாயும் ஆறுகளோடும் மலையருவிகளோடும் கூடினதாயும் பரிசுத்த தீர்த்தங்களால் விளங்குகிறதாயும், மான்களுடையவும் பக்ஷிகளுடையவும் சப்தங்களால் பூர்ணமாகவும் கோயில்களால் சூழப்பட்டதாயும் யக்ஷர்கள் கந்தருவர் சித்தர்கள் இவர்களுடைய ஆடல்பாடல்களா லலங்கரிக்கப்பட்டதாயும் விளங்குகிறது.

தஸ்மிந்ருஷிஸபாமத்யே ஸக்திபுத்ரம்பராஸரம்
ஸுகாஸீநம்மஹாதேஜாமுநிமுக்யகணாவ்ருதம்.
க்ருதாஞ்ஜலிபுடோபூத்வாவ்யாஸஸ்துருஷிபிஸ்ஸஹ
ப்ரதக்ஷிணாபிவாதைஸ்ச ஸ்துதிபிஸ்ஸமபூஜயத். 5

(இ - ள்.) அவ்விடத்தில் ரிஷிகளின் சபைநடுவில் சுகமாகவுட்கார்ந்து மகரிஷிகளால் சூழப்பட்டு சக்திபுத்திரராகவிளங்கும் பராசரரை மகாதேஜோவானன வியாஸர் ரிஷிகளோடுகூடிக் கை கூப்பிக்கொண்டு பிரதக்ஷிண நமஸ்காரங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் பூஜித்தார்.

ததஸ்ஸந்துஷ்டஹ்ருதய: பராஸரமஹாமுநி:
ஆஹஸுஸ்வாகதம்ப்ருஹீ த்யாஸீநோமுநிபுங்கவ: 6

(இ-ள்.) பிறகு சந்தோஷத்துடன் பராசரர் முனிவர்களுக்குள் ளுயர்ந்தவராதலால் உட்கார்ந்த படியே க்ஷேமமாகவந்தாயோ சொல் என்று விசாரித்தார்.

குஸலம்ஸம்யகித்யுக்த்வாவ்யாஸ: ப்ருச்சத்யத:பரம் 7

(இ-ள்.) நல்லக்ஷேமம் தானென்று விசாரித்த பிறகு வியாஸர் கேட்கிறார்.

யதிஜாநாஸிபக்திம்மே ஸ்நேஹாத்வம்பக்தவத்ஸல
தர்மம்கதயமேதாதஹ் யநுக்ராஹ்யோப்யஹம்தவ. 8

(இ-ள்.) நீர் பக்தவத்ஸலனாதலால் தேவரீர் விஷய மான என்னுடைய பக்தியை யறிந்தாவது, எனக்குத் தகப்பனாதலால் புத்திர ஸ்நேகத்தாலாவது எனக்குத் தர்மத்தைச் சொல்ல வேண்டும். எவ்விதத்திலும் நான் தேவரீரது அனுக்கிரகம் பெறத்தக்கவன்.

ஸ்ருதாமேமாநவாதர்மா வாஸிஷ்டா:காஸ்யபாஸ்ததா
கார்கீயாகௌதமீயாஸ்ச ததாசௌஸநஸாஸ்ஸ்ருதா:
அத்ரேர்விஷ்ணோஸ்ச ஸம்வர்தாத்தக்ஷா தங்கிரஸஸ்ததா
ஸாதாதபாச்சஹாரீ தாத்யாஜ்ஞவல்க்யாத்ததைவச
ஆபஸ்தம்பக்ருதாதர்மா ஸ்ஸங்கஸ்யலிகிதஸ்யச
காத்யாயநக்ருதாஸ்சைவததாப்ராசேதஸாந்முநே: 9

(இ-ள்.) மனு-வசிஷ்டர்-காசிபர்-கர்க்கர்-கௌதமர்-உசநஸ்-அத்திரி-விஷ்ணு-ஸம்வர்த்தர்-தக்ஷர்-அங்கிரஸ்-சாதாதபர்-ஹாரீதர்-யாக்யவல்க்யர்-ஆபஸ்தம்பர்-சங்கர்-லிகிதர்-காத்தியாயனர்-பிரசேதஸ் இவர்களால் செய்யப் பட்ட ஸ்மிருதிகளை நானறிந்திருக்கிறேன்.

ஸ்ருதாஹ்யேதேபவத்ப்ரோக்தாஸ்ஸ்ருத்யர்த்தாமே நவிஸ்ம்ருதா:
அஸ்மிந்மந்வந்தரேதர்மா: க்ருதத்ரேதாதிகேயுகே 10

(இ-ள்.) தேவரீரால் ஓதுவிக்கப்பட்ட வேதார்த்தங் களும்-கிருதம் திரேதாமுதலிய யுகங்களின் தர்மங்களும் எனக்கு மறக்கவில்லை.

ஸர்வே தர்ம்மா:க்ருதேஜாதா ஸ்ஸர்வேநஷ்டா:
கலௌயுகே
சாதுர்வர்ணயஸமாஸாரம் கிஞ்சித்ஸாதாரணம்வத 11

(இ - ள்.) எல்லாத்தர்மங்களும் கிருதயுகத்திலுண்டானவை. அவைகள் கலியுகத்தில் நாசமடைந்தன, நான்கு வர்ணங்களுக்கும் சில பொதுவான தர்மங்களைச் சொல்ல வேண்டும்.

சதுர்ணாமபிவர்ணாநாம்கர்தவ்யம்தர்மகோவிதை:
ப்ரூஹி தர்மஸ்வரூபஜ்ஞ ஸூக்ஷ்மம்ஸ்தூலஞ்
சவிஸ்தராத் 12

(இ - ள்.) தர்மங்களுடைய ஸ்வரூபம் தெரிந்ததேவரீர் நான்கு வர்ணங்களுக்குள் தர்மந்தெரிந்தவர்களால் செய்யத்தகுந்த நுட்பமாயும் பெரிதாயுமிருக்குள்ள தர்மங்களை விஸ்தாரமாகவுரைக்க வேண்டும்.

வ்யாஸவாக்யாவஸாநே துமுநிமுக்ய: பராஸர:
தர்மஸ்யநிர்ணயம்ப்ராஹஸூக்ஷ்மம்ஸ்தூலம்
சவிஸ்தராத் 13

(இ - ள்.) வியாஸருடைய வார்த்தையின் முடிவில் ரிஷிகளுக்குள்ளுயர்ந்தவரான பராசரர் நுட்பமாயும் பெரிதாயுமிருக்கிற தர்மத்தினுடைய வாஸ்தவத்தை விரிவாகவுரைக்கலுற்றார்.

ஸ்ருணுபுத்ரப்ரவக்ஷ்யாமிஸ்ருண்வந்துமுநயஸ்ததா 14

(இ - ள்.) புத்திரா! சொல்லுகிறேன் கேள். அப்படியே ரிஷிகளும் கேட்கட்டும்.

கல்பேகல்பேக்ஷயோத்பத்யாப்ரஹ்மவிஷ்ணு
மஹேஸ்வரா:
ஸ்ருதிஸ்ம்ருதிஸமாசாரநிர்ணேதாரஸ்சஸர்வதா 15

(இ - ள்.) பிரமன் விஷ்ணு ருத்திர னிம்மூவரும் ச்ருதி ஸ்ம் ருதிகளி னர்தங்களை நிச்சயிக்கிற மநுமுதலியவர்களும் கல்பங்கள்தோறும் நாசம் உத்பத்திகளோடு கூடியிருக்கிறார்கள்.

நகஸ்சித்வேதகர்த்தாசவேதம்ஸ்ருத்வாசதுர்முக:
ததைவதர்மாங்ஸ்மரதிமநு:கல்பாங்தரேங்தரே 16

(இ-ள்.) ஒருவரும் வேதத்தைச்செய்தவர்களல்லர் பிரம்மா வேதத்தைக்கேட்டு அப்படியே ஸ்மிருதிகளைச் செய்கிறார். கல்பங்களுக்கிடையிடையில் மனுவும் ஸ்மிருதிகளைச்செய்கிறார்.

அங்யேக்ருதயுகேதர்மா ஸ்த்ரேதாயாம்த்வாபரேயுகே
அங்யேகலியுகேங்ருணும் யுகரூபா நுஸாரத: 17

(இ-ள்.) கிருதயுகத்தில் தர்மங்கள் வேறு, திரேதா யுக, துவாபர, கலியுகங்களில் தர்மங்கள்வெவ்வேறு. யுகங்களுக்கு அனுகுண மாகவே தர்மங்களிருக்கின்றன.

தப:பரம்க்ருதயுகேத்ரேதாயாம்ஜ்ஞாநமுச்யதே
த்வாபரேயஜ்ஞமேவாஹுர்தாநமேவகலௌயுகே 18

(இ-ள்.) தபஸ்ஸே கிருதயுகத்திலும், திரைதாயுகத்தில் ஞாநமும், துவாபரயுகத்தில்யக்ஞயமும், கலியுகத்தில் தானமுமேசிறந்ததென்று சொல்லுவார்கள்.

க்ருதேதுமாநவா தர்மாஸ்த்ரேதாயாம்கௌதமா
ஸ்ம்ருதா:
த்வாபரேஸங்கலிகிதா:கலௌபாராஸரா:ஸ்ம்ருதா: 19

(இ-ள்.) கிருதயுகத்தில் மனுஸ்மிருதியும் திரேதா யுகத்தில் கௌதமஸ்மிருதியும் துவாபரயுகத்தில் சங்கஸ்மிருதியும் கலியில் பராசரஸ்மிருதியும் முக்யமானவைகள்.

த்யஜேத்தேஸம்க்ருதயுகே த்ரேதாயாம்க்ராம
முத்ஸ்ருஜேத்
த்வாபரேகுலமேகங்து கர்தாரங்துகலௌயுகே 20

(இ-ள்.) கிருதயுகத்தில் பாபிஷ்டனிருக்கும் தேசத்தையும் திரேதாயுகத்தில்அவனிருக்கும் கிராமத்தையும் துவாபரயுகத்தில் அவனுடைய குலத்தையும் கலியுகத்தில் பாபம் செய்தவனையும் விடவேண்டும்.

க்ருதெஸம்பாஷணுதேவத்ரே தாயாம்ஸ்பர்ஸநெச
த்வாபரேத்வங்நமாதாய கலௌபததிகர்மணு 21

(இ-ள்.) கிருதயுகத்திற் பாபியோடு வார்த்தை சொல்வதாலும், திரேதாயுகத்தில் அவன் மேல் படுவதா

லும், துவாபரத்தில் அவனன்னம் வாங்குவதாலும், கலியில் பாபம் செய்தாலும் பதிதனுகிருன்.

க்ருதேதாத்க்ஷணிகஸ்ஸாப ஸ்த்ரேதாயாம்தஸபிர்திநை:
த்வாபரேசைகமாஸேந கலௌஸம்வத்ஸரேண து 22

(இ-ள்.) பெரியோர்கள் சபித்தால் க்ருதயுகத்தில் தக்ஷணத்திலும், திரேதாயுகத்தில் பத்து நாளிலும், துவாபரயுகத்தில் ஒரு மாஸத்திலும், கலியுகத்தில் ஒரு வருஷத்திலும் பலிக்கும்.

அபிகம்யக்ருதேதாநம்த்ரேதாஸ்வாஹூயதீயதே
த்வாபரேயாசமாநாயஸேவயாதீயதேகலௌ 23

(இ-ள்.) கிருதயுகத்தில் கொடுப்பவன் யாசகனிருக்குமிடத்திற்சென்றும், திரேதாயுகத்தில் யாசகனை வரவழைத்தும், துவாபரத்தில் தன்னிடத்தில் வந்து யாசிப்பவனுக்கும், கலியுகத்தில் தன்னையடுத்துக் காத்திருப்பவனுக்கும் தானம்செய்யப்படுகிறது.

அபிகம்யோத்தமம்தாநமாஹூயைவதுமத்யமம்
அதமம்யாசமாநாயஸேவாதாநந்துநிஷ்பலம் 24

(இ-ள்.) தான் சென்றுகொடுக்கும் தானம் உயர்ந்தது - யாசகனை வரவழைத்துக் கொடுப்பதுமத்திமம் - யாசிப்பவனுக்கு கொடுப்பது அதமம் - அடுத்திருப்பவனுக்குக்கொடுப்பதுபயனற்றது.

ஜிதோதர்மோஹ்யதர்மேண ஸத்யம்சைவாந்ருதேநச
ஜிதாஸ்சோரைஸ்துராஜாந ஸ்த்ரீபிஸ்சபுருஷா:கலௌ 25

(இ-ள்.) அதர்மத்தால் தர்மமும் அசத்தியத்தால் சத்தியமும் திருடர்களால் அரசர்களும் ஸ்திரீகளால் புருஷர்களும் கலியுகத்தில் ஜயிக்கப்படுகிறதுகள்.

ஸீதம்திசாக்நிஹொத்ராணி குருபூஜாப்ரணஸ்யதி
குமார்யஸ்சப்ரஸூயந்தெ தஸ்மிந்கலியுகெஸதா 26

(இ-ள்.) அக்நிஹோத்திரங்கள் குறைகின்றன. ஆசாரிய சுச்ரூஷை நாசமடைகிறது. கன்னிகைகள் பிரஸவிக்

கிறார்கள் ; அந்த கலியுகத்திலிவ்வண்ணமாகவே எப்போதும் நடக்கும்.

க்ருதேத்வஸ்திகதா:ப்ராணாஸ்த்ரேதாயாம்மாம்
ஸமாஸ்ரிதா :
த்வாபரேருதிரம்சைவகலௌத்வந்நாதிஷ்ஸ்திதா : 27

(இ - ள்.) கிருதயுகத்தில் பிராணங்கள் எலும்பைப் பற்றியும் திரேதாயுகத்தில் மாம்ஸத்தைப் பற்றியும் துவாபரயுகத்தில் ரக்தத்தைப்பற்றியும் கலியுகத்தில் அன்னம் முதலியவற்றைப்பற்றியு மிருக்கின்றன.

யுகேயுகேசயேதர்மா ஸ்தத்ரதத்ரசயேத்விஜா :
தேஷாம்நிந்தாநகர்தவ்யா யுகரூபாஹிதேத்விஜா : 28

(இ - ள்.) யுகங்கள்தோறும் எந்த தர்மங்கள் ஏற்பட்டனவோ ; அத்தர்மங்களைச் செய்கிறவர்கள் எந்தத் விஜர்களோ ; அவர்களை நிந்திக்கக்கூடாது. ஏனெனில் அவர்கள் யுகத்துக் கநுகுணமாக நடப்பவர்கள்.

யுகேயுகேதுஸாமர்த்யம் ஸேஷம்முநிவிபாஷிதம்
பராஸரேணசாப்யுக்தம் ப்ராயஸ்சித்தம்விதீயதே 29

(இ - ள்.) யுகங்கள்தோறும் பராசரரால் சொல்லப்படாத யுகத்தின் சாமர்த்தியம் மற்ற ரிஷிகளால் கூறப்பட்டிருக்கிறது. முன்விருத்த பராசரரால் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்கள் விதிக்கப்படுகிறது.

அஹமத்யைவதத்ஸர்வ மநுஸ்ம்ருத்யப்ரவீமிவ :
சாதுர்வர்ண்யஸமாஸாரம் ஸ்ருண்வந்துமுநிபுங்கவா : 30

(இ - ள்) ஓ முனீஸ்வரர்களே ! அந்த சகலமான நான்கு வர்ணங்களுடைய தர்மங்களையும் நானிப்பொழுதே யறிந்து உங்களுக்குச்சொல்லுகிறேன்.

பராஸரமதம்புண்யம் பவித்ரம்பாபநாஸநம்
சிந்திதம்ப்ராஹ்மணார் தாயதர் மஸம்ஸ்தாபநாயச 31

(இ - ள்.) புண்ணியமானதும் பரிசுத்தமானதும் பாபங்களைப் போக்கவல்லதுமான இந்த பராசரருடைய சாஸ்திரமானது பிராமணர்களுக்காகவும், தர்மத்தை நிலைநிறுத்துகைக்காகவும் ஆரம்பிக்கப்படுகிறது.

சதுர்ணுமபிவர்ணுநா மாசாரோ தர்மபாலக:
ஆசாரப்ரஷ்டதேஹாநாம் பவேத்தர்ம: பராங்மக: 32

(இ - ள்.) நான்கு வர்ணங்களுக்கும் ஆசாரமே தர்மத்தைக் காப்பாற்றுகிறது. ஆசாரமில்லாத தேகமுடையவனுக்கு தர்மம் பலப்படாது.

ஷட்கர்மாபிரதோநித்யம் தேவதாதிதிபூஜக:
ஹுதசேஷம்துபுஞ்ஜாநோ ப்ராஹ்மணோநாவஸீததி 33

(இ - ள்.) யஜனம் முதலிய ஆறு தொழிலில் எக்காலத்திலும் சிரத்தையுள்ளவனாகவும் தேவர் அதிதியிவர்களைப் பூஜிப்பவனும் ஹோமம்பண்ணின மீதி ஹவிஸ்ஸை சாப்பிடுகிறவனுமான பிராமணன் துன்பப்படான்.

ஸந்த்யாஸ்நாநம்ஜபோஹோமோ தேவதாநாஞ்சபூஜநம்
ஆதித்யம்வைஸ்வதேவம்ச ஷட்கர்மாணிதிநேதிநே 34

(இ - ள்.) ஸ்நானத்தோடுகூடின சந்தியாவந்தனம் ஜபம் ஹோமம் தேவதாபூஜை அதிதி பூஜை வைச்வதேவம் இவையாறு கருமங்களும் பிரதிதினமும் செய்ய வேண்டியது.

இஷ்டோவாய திவாத்வேஷ்யோமூர்க:பண்டிதஏவவா
ஸம்ப்ராப்தோவைஸ்வதேவாந்தேஸோதிதிஸ்ஸ்வர்க
ஸங்க்ரம: 35

(இ - ள்.) மித்திரனுலும் சத்துருவானுலும் தெரியாதவனுனுலும் தெரிந்தவனுனுலும் வைச்வதேவத்தின் முடிவில் வந்தவனெவனே அவனே-சுவர்க்கத்தை யடைவிக்கும் அதிதி.

தூரார்த்வோபகதம்ஸ்ராந்தம் வைஸ்வதேவஉபஸ்திதம்
அதிதிம்தம்விஜாநீயா ந்நாதிதி: பூர்வமாகத: 36

(இ - ள்.) வெகுதூரம் வழிநடந்து வருந்திவைச்வதேவ காலத்தில் எவன் வருகிருனே அவனே அதிதியென்றறிய வேண்டும். முன்வந்தவ னதிதியாகான்.

நைகக்ராமீண மதிதிம்ஸம் ருஹ்ணீதகதாசந
அநித்யமாகதோயஸ்மா த்தஸ்மாததிதிருச்யதே 37

(இ - ள்.) ஒரேகிராமத்திலிருப்பவனை யொருபோது மதிதியாகவெண்ணக்கூடாது. தினந்தோறும் வருகிற

தில்லையாதலால் அவனுக்கு அதிதி என்று பெயர் வந்தது. திதியென்றால் தினம்.

அதிதிம்தத்ரஸம்ப்ராப்தம் பூஜயேத்ஸ்வாகதாதிநா
அர்க்யாஸநப்ரதாநேந பாதப்ரக்ஷாளநேநச
ஸ்ரத்தயாசாந்நதாநேந ப்ரியப்ரஸோத்தரேணச
கச்சந்தம்சாநுயாநேந ப்ரீதிமுத்பாதயேத்க்ஹி 38

(இ-ள்.) அந்த வைஸ்வ தேவ காலத்தில் வந்த அதிதியை குசலப்பிரசனம் முதலியதுகளாலும் அர்க்யம் அந்நம் இவைகளை கொடுப்பதினாலும் கால் கழுவுகிறதினாலும் சிரத்தையோடு அன்னமிடுவதாலும் பிரியமாகக் கேட்டு பதில் சொல்வதாலும், போகிறவனைப்பின் செல்வதினாலும் கிரகஸ்தன் பிரீதியுண்டுபண்ணி பூசிக்கக் கடவன்.

அதிதிர்யஸ்யபக்நாஸோ க்ருஹாத்ப்ரதிநிவர்த்ததே
பிதரஸ்தஸ்யநாஸ்நந்தி தஸவர்ஷாணிபஞ்சச
காஷ்டபாரஸஹஸ்ரேண க்ருதகும்பஸதேநச
அதிதிர்யஸ்யபக்நாஸ ஸ்தஸ்யஹோமோநிரர்தக: 39

(இ-ள்.) எவனுடைய வீட்டில் அதிதி தன்னாசை நிறைவேறாமல் திரும்பிப்போகிறானோ. அவனுடைய வீட்டில்பதினைந்து வருஷம் பித்ருதேவதைகள் அன்னம் வாங்குகிறதில்லை. எவன் வீட்டில் வந்த அதிதியின் ஆசை நிறைவேறவில்லையோ, அவன் ஆயிரம்பாரம்கட்டைகளைக் கொண்டும் நூறுகுடம்நெய்யைக்கொண்டும் ஓமம் செய்த போதிலும் அது பயன்படாது.

ஸுக்ஷேத்ரேவாபயேத்பீஜம் ஸுபாத்ரேநிக்ஷிபேத்தநம்
ஸுக்ஷேத்ரேசஸுபாத்ரே சஹ்யுப்தம் தந்நவிநஸ்யதி 40

(இ-ள்.) நல்ல பூமியில் விதையை விதைக்க வேண்டும்; நல்ல பாத்திரத்தில் தானம் செய்யவேண்டும்; நல்ல பூமியிலும் நல்ல பாத்திரத்திலும் செய்யப்பட்டது கெட்டுப்போகிறதில்லை.

நப்ருச்சேதகோத்ரசரணே நஸ்வாத்யாயம்ஸ்ருதம்ததா
ஹ்ருதயேகல்பயேதேவம் ஸர்வதேவமயோஹிஸ: 41

(இ-ள்) அதிதியாக வந்தவனுடைய கோத்திரத்தையும் ஆசாரத்தையும் வேதத்தையும் சாஸ்திரத்தையும்

கேட்கவேண்டியதில்லை. அதிதி-எல்லாதேவதைகளுடைய ஸ்வரூபர் என்பதொன்றையுமே மனதில் வைக்க வேண்டியது.

அபூர்வஸ்ஸுவ்ரதீவிப்ரோஹ்யபூர்வச்சாதிதிஸ்ததா
வேதாப்யாஸரதோநித்யம் த்ரய:பூஜ்யாதிநேதிநே 42

(இ - ள்.) நல்ல விரதமுள்ள சன்னியாசியும் முன் வந்தவனல்லாதவதிதியும் தினந்தோறும் வேதமோதுகிற பிரம்மசாரியும் இம்மூவரும் தினந்தோறும் பூஜிக்கத்தக்கவர்கள்.

வைஸ்வதேவேதுஸம்ப்ராப்தே பிக்ஷுகேக்ருஹமாகதே
உத்ருத்யவைஸ்வதேவார்தம் பிக்ஷுகம்துவிஸர்ஜ்யேத் 43

(இ - ள்.) வைசுவதேவம்செய்வதற்குமுன் பிக்ஷுகர் வந்தால் வைச்வதேவத்தின் பொருட்டு தனியாகவெடுத்து வைத்துவிட்டு, பிக்ஷுகரையனுப்பவேண்டும்.

தத்யாச்சபிக்ஷாத்ரிதயம் பரிவ்ராட்ப்ரஹ்மசாரிணும்
இச்சயாசததோவித்வாந் விபவேஸத்யவாரிதம் 44

(இ - ள்.) சன்னியாசிக்கும் பிரம்மசாரிகளுக்கும் மூன்றுதரம் பிச்சையிடவேண்டும்! தனது சக்திக்கும் இச்சைக்கும் அனுகுணமாகமேல் எவ்வளவிட்டாலுமிடலாம். அது விலக்கப்படவில்லை.

யதிஹஸ்தேஜலம்தத்யாத்பிக்ஷாம்தத்வாபுநர்ஜலம்
தத்பைக்ஷம்மேருணாதுல்யம் தஜ்ஜலம்ஸாகரோபமம் 45

(இ - ள்.) சன்னியாசிகையில் முன்னமே ஜலத்தைக் கொடுத்து பிறகு பிச்சையிட்டு மறுபடியும் ஜலத்தைக் கொடுக்கவேண்டும். அப்படியிட்ட பிச்சைமேருவைக் கொடுத்ததோடொக்கும் அந்த ஜலம் சமுத்திரத்தைக் கொடுத்ததோடொக்கும்.

யஸ்யசத்ரம்ஹயச்சைவ குஞ்சராரோஹம்ருத்திமத்
ஐந்த்ரம்ஸ்தாநமுபாஸீத தஸ்மாத்தந்நவிசாரயேத் 46

(இ - ள்.) எவன் குடை குதிரை இதுகளுடன் அதிதியாக வந்தானோ - அவனையாதரித்தவன் - யானையில் ஏறி சம்பத்தோடு கூடியவிந்திரபதத்தை யடைவன். ஆதலாலதையவன் விசாரிக்கவேண்டியதில்லை.

வைஸ்வதேவக்ருதம்பாபம் ஸக்தோபிக்ஷுர்வ்ய
போஹிதும்
நஹிபிக்ஷுக்ருதம்தோஷம் வைஸ்வதேவோவ்ய
போஹிதும் 47

(இ - ள்.) வைச்வதேவம் செய்யாததாலுண்டான பாவத்தை பிக்ஷுகர் போக்கடிப்பார்கள் - பிச்சையிடாததாலுண்டான தோஷத்தை - வைச்வதேவம் போக்காது.

அக்ருத்வாவைஸ்வதேவந்து புஞ்சதேயேத்விஜாதய:
தேஷாமந்நம்நபுஜ்ஜீத காகயோநிம்பஜந்திதே
அக்ருத்வாவைஸ்வதேவம்து புஞ்ஜதேயேத்விஜாயமா:
ஸர்வேதேநிஷ்பலாஜ்யேயா:பதந்திநரகேஸுசௌ 48

(இ – ள்.) எந்த பிராமணர்கள் வைச்வதேவம் செய்யாமல் போஜனம் செய்கிறுர்களோ, அவர்களுடைய அன்னத்தை புஜிக்கக்கூடாது. அப்படி புசித்தவர்கள் காக்கையாக பிறப்பார்கள். எந்த கெட்ட பிராமணர்கள் வைசுவதேவம் செய்யாமல் போஜனம் செய்கிறுர்களோ, அவர்கள் பயனற்றவர்களாய் அசுத்தமான நரகத்தில் விழுகிறுர்கள்.

வைஸ்வதேவவிஹீநாயேஆதித்யேநபஹிஷ்க்ருதா:
ஸர்வேதேநரகம்யாந்தி காகயோநிம்வ்ரஜந்திச 49

(இ - ள்.) எவன் வைசுவதேவத்தை விட்டும் அதிதி பூஜை செய்யாமலுமிருக்கிறுனே, அவர்களெல்லாரும் நரகத்தையடைகிறுர்கள்; காக்கையின் சன்மத்தையும் அடைகிறுர்கள்.

பாபோவாயதிசண்டாளோவிப்ரக்ந:பித்ருகாதுக:
வைஸ்வதேவேதுஸம்ப்ராப்தஸ்ஸோதிதிஸ்வர்க்க
ஸங்க்ரம: 50

(இ - ள்.) பாபிஷ்டனுக விருந்தாலும் கர்ம சண்டாளனுயிருந்தாலும் பிராமணர்களைக் கொண்றவனுயிருந்தாலும் தகப்பனைக்கொன்றவனுனுலும் வைச்வ தேவகாலத்தில் வந்தவன் சுவர்க்கத்தை யடைவிக்கும் அதிதியாவன்.

யோவேஷ்டி தஸிராபுங்தேயோபுங்தே தக்ஷிணமுக:
வாமபாதகரஸ்தித்வா தத்வைரக்ஷாம்ஸிபுஞ்சதே 51

(இ-ள்.) எவன் தலையில் துணிசுற்றிக்கொண்டு போஜனம் செய்கிறானோ-எவன் தெற்குமுகமாக புஜிக்கிறானோ, எவன் இடது கையையுமிடதுகாலையு மூன்றிக்கொண்டு புஜிக்கிறானோ - அப்படிப்பட்ட போஜனத்தை ராக்ஷஸர்கள் செய்கிறார்கள்.

அவ்ரதாஹ்யநதீயாநா யத்ரபைக்ஷசராத்விஜா :
தம்க்ராமம்தண்டயேத்ரா ஜாசோரபக்தப்ரதோஹீஸ: 52

(இ-ள்.) எந்தக்கிராமத்தில் பிராமணர்கள் விரதங்களை யனுஷ்டிக்காமலும் வேதமோ தாமலுமிருக்கிறார்களோ - திருடர்களுக்கு அன்னமளித்தவந்த கிராமத்து ஜனங்களை ராஜா தண்டிக்கவேண்டும்.

க்ஷத்ரியோ ஹிப்ரஜாரஞ் ஜங்ஸஸ்த்ரபாணி:ப்ரதண்டவாந்
நிர்ஜித்யபரஸைங்யாநிக்ஷிதிம்தர்மேணபாலயேத் 53

(இ-ள்.) க்ஷத்திரியன் பிரஜைகளிடத்தில் அன்பு உள்ளவனாய் ஆயுதங்களைக் கைக்கொண்டு சத்ருக்களையடித்து ஜயித்து, பூமியை தர்மத்தால் ரக்ஷிக்க வேண்டும்.

புஷ்பமாத்ரம்விசுநுயாங்மூலச்சேதம்நகாரயேத்
மாலாகாரஇவாராமேநயதாங்காரகாரக: 54

(இ-ள்.) மாலைதொடுப்பவன் பூங்தோட்டத்தில் எப்படி பூக்களைமாத்திரம் கொய்து கிளைகளை விறகு வெட்டுகிறவனைப்போல் வெட்டமாட்டானோ. அப்படியே பிரஜைகளிடத்தில் பகுதிமாத்திரம் பெற்று ஹிம்சிக்கக்கூடாது

லாபகர்மததாரத்நம்கவாஞ்சபரிபாலநம்
க்ருஷிகர்மசவாணிஜ்யம்வைஸ்யவ்ருத்திருதாஹ்ருதா 55

(இ-ள்.) வட்டி வாங்குவதும் ரத்நவ்யாபாரமும் பசுக்களை ரக்ஷிப்பது பயிரிடுதல் இதரவியாபாரங்கள் இவைகள் வைசிய விருத்தியாகக் கூறப்பட்டது.

ஸூத்ரஸ்யத்விஜஸுஸ்ரூஷாபரமோதர்மஉச்யதே
அந்யதாகுருதேகிஞ்சித்தத்பவேத்தஸ்யநிஷ்பலம் 56

(இ - ள்.) சூத்திரனுக்குத் விஜர்களுடைய சூச்ரூஷையே பரமதர்ம்மமாகச் சொல்லப்படுகிறது; வேறு ஏதாவது செய்தானேயாகில் அது அவனுக்குப் பயன் படாது.

லவணம்மதுதைலம்சததிதக்ரம்க்ருதம்பய:
நதுஷ்யேச்ரூத்ரஜாதீநாம் குர்யாத்ஸர்வேஷுவிக்ரயம் 57

(இ - ள்.) உப்பு தேன் எண்ணை தயிர் மோர் நெய் பால் இவைகளை நான்கு வர்ணங்களுக்குள் சூத்திரன் விற்கலாம். அதினால் அவனுக்கு தோஷமில்லை.

விக்ரீணந்மத்யமாம்ஸாநிஹ்யபக்ஷ்யஸ்யசபக்ஷணம்
குர்வந்நகம்யாகமநம்ஸூத்ர: பததிதத்க்ஷணாத்
கபிலாக்ஷீரபாநேநப்ராஹ்மணீகமநேநது
வேதாக்ஷரவிசாரேணஸூத்ரஸ்யநரகம்த்ருவம் 58

(இ - ள்.) மத்யம் மாம்ஸம் இவைகளை விற்பதாலும் சாப்பிடத்தகாதவைகளை சாப்பிடுவதாலும் சேரத்தகாத ஸ்த்ரீகளைச் சேர்வதாலும் சூத்திரன் அக்கணமே பதிதனுகிறான். காராம்பசுவின்பால் குடித்தலாலும் பிராமண ஸ்திரீயைப் புணர்தலாலும் வேதாக்ஷரங்களை விசாரிப்பதாலும் சூத்திரனுக்கு நரகம் சம்பவிக்கும்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

—O—

## இரண்டாவது அத்தியாயம்

அத:பரம்ஹ்ருஹஸ்தஸ்யகர்மாசாரம்கலௌயுகே
தர்மம்ஸாதாரணம்ஸக்த்யா சாதுர்வர்ண்யாஸ்ரமாகதம்
தம்ப்ரவக்ஷ்யாம்யஹம்பூர்வம்பராஸரவசோயதா 59

(இ - ள்.) இதன் பிறகு - இந்தகலியுகத்தில் நான்கு வர்ணங்களுக்கும் கிரகஸ்தனுடைய ஆசாரங்களுக்குமுரியதாயும் தர்ம்மமான ஆசாரமாயும் பொதுவாயுமிருக்கிற தொழிலை சக்திக்கிடாக விருத்த பராசரவாக்யானுகுணமாகவே, முன்னிட்டுச்சொல்லுகிறேன்.

ஷட்கர்மஸஹிதோவிப்ர:க்ருஷிகர்மசகாரயேத் 60

(இ-ள்.) யஜனம்முதலிய ஆறுதொழிலுடன் கூடிய பிராமணன் பயிரிடுவதையும் செய்துவைத்துக்கொள்ள லாம்.

க்ஷுதிதம்க்ருஷிதம்ஸ்ராந்தம்பலீவர்தநம்யோஜயேத்
ஹீநாங்கம்வ்யாதிதம்க்லீபம்வ்ருஷம்விப்ரோ
நவாஹயேத் 61

(இ-ள்.) பசித்தும் க்ருசித்தும் சிரமப்பட்டுமிருக்கிற எருதை உழக்கூடாது. மேலும் குறைந்த அங்கங் களுடையதும் வியாதியுடன் கூடினதும் விரையடித்தது மான எருதை பிராமணன் கட்டக்கூடாது.

ஸ்திராங்கம்நீருஜம்த்ருப்தம்ஸநர்தம்ஷண்டவர்ஜிதம்
வாஹயேத்திவஸஸ்யார்தம்பச்சாத்ஸ்நாநம்ஸமாசரேத் 62

(இ-ள்.) அங்கம்பழுதில்லாமலும் ரோகமற்றதும் பசிதாகமற்றதும் கொழுப்புடையதும் விரையடியாதது மிருக்கிற எருதை மத்தியானத்தில் பாதிவரையிலுழ வேண்டியது-பிறகு அதற்கு ஸ்நானம் செய்துவைக்க வேண்டியது.

ஜபம்தேவார்ச்சநம்ஹோமம்வாத்யாயம்சைவமப்யஸேத்
ஏகத்வித்ரிசதுர்விப்ராங்போஜயேத்ஸ்நாதகாந்த்விஜ: 63

(இ-ள்.) அப்படியோ பூட்டினதற்கு பிராமணன், ஜபம்செய்தல் தேவதை பூசித்தல் ஹோமம்செய்தல் வேத மோதல் இவைகளைச் செய்யவேண்டியது பிறகு. ஒன்று-இரண்டு - மூன்று - நான்கு ஸ்நாதகப் பிராமணர்களுக்கு அன்னம் போடவேண்டும்.

ஸ்வயம்க்ருஷ்டேததாக்ஷேத்ரேதாந்யைச்சஸ்வய
மார்ஜிதை:
நிர்வபேத்பஞ்சயஜ்ஞாம்ஸ்சக்ரதுதீக்ஷாஞ்சகாரயேத் 64

(இ-ள்.) பிராமணன் தானே உழுது பயிர் செய் தாலும் அல்லது வேறொருவர் பயிர் செய்து தான் சம்பா தித்து வந்தாலும், அந்த தானியங்களால் பஞ்சமகாயக் யங்களைச் செய்யக்கடவன் அல்லது வேறொருவருக்குக் கொடுத்து செய்விக்கக்கடவன்.

திலா ரஸாநவிக்ரேயாவிக்ரேயா தாங்யதஸ்ஸமா:
விப்ரஸ்யைவம்வி தாவ்ருத்திஸ்த்ருணகாஷ்டாதி
விக்ரயம் 65

(இ - ள்.) பிராமணன்-எள்ளு-ரஸவர்க்கங்க ளிவை களை விற்கக்கூடாது-அப்படி அவசியம் விற்கவேண்டு மானல் தானியங்களுக்குத் துல்யமாகில் விற்கலாம் இந்த விருத்தி பிராமணனுக்கு உரியது. புல் கட்டை முதலிய வற்றை விக்கிரயம் செய்யலாம்.

ப்ராஹ்மணச்சேத்க்ருஷிம்குர்யாங்மஹாதோஷ
மாவப்நுயாத் 66

(இ - ள்.) பிராமணன் தானேயுழவு செய்து பயிரிட் டால் மஹாதோஷத்தையடைவன்.

ஸம்வத்ஸரேணயத்பாபம்மத்ஸ்யகாதீஸமாப்நுயாத்
அயோமுகேநகாஷ்டேந ததேகாஹேநலாங்கலீ 67

(இ - ள்) ஒரு வருஷகாலமாய் மத்ஸ்யங்களைக் கொன்ற சூத்திரன் எவ்வளவு பாபத்தையடைவனே அந்த பாபத்தை கலப்பையெடுத்த பிராமணன் இலும்பை முளையிற்கொண்ட கட்டையால் ஒரே தினத்தில் அடைகிருன்.

பாஸகோமத்ஸ்யகாதீசவ்யா தச்சாகுநிகஸ்ததா
அதாதாகர்ஷகச்சைவ பஞ்சைதேஸமபாகிந: 68

(இ - ள்.) வலைவீசுகிறவன் - மத்ஸ்யங்களைக்கொல்லு கிறவன்-வேடன்-பக்ஷிகளைக் கொல்லுகிறவன் தானம் செய்யாமற்பயிரிடுபவன்-இவர்களைவரும் சமமான பாவ முள்ளவர்கள்.

வ்ருக்ஷாம்ச்சித்வாமஹீம்பித்வாஹத்வா துக்ரிமிகீடகாங்
கர்ஷக:கலயஜ்ஞேநஸர்வபர்பை:ப்ரமுச்யதே 69

(இ - ள்.) விருக்ஷங்களை வெட்டியும் பூமியைப்பிளந் தும் புழுபூச்சிகளைக்கொன்றும் பயிரிடுகிறவன் களப் பிச்சையிடுவதால் எல்லாப் பாவத்தையும் போக்கடிக் கிருன்.

யோநதத்யாத்த்விஜாதிப்யோராஸிமூலமுபாகத:
ஸசோரஸ்ஸசபாபிஷ்டோப்ரஹ்மக்நம்தம்விநிர்திஸேத் 70

(இ - ள்.) யாதொருவன் தானியராசியினருகிலுட்கார்ந்து பிராமணர்களுக்கு தானம் செய்யவில்லையோ அவன், திருடன்-அவனே பாவி-அவனே பிர்ம்மஹத்தி செய்தவனுகச்சொல்ல வேண்டும்,

ராஜ்ஞேதத்வாதுஷட்பாகம்தேவாநாம்சைகவிம்சகம்
த்ரிம்ஸத்பாகம்ப்ராஹ்மணாநாம்க்ருஷிம்குர்வந்ந
தோஷபாக் 71

(இ - ள்,) ஆறில் ஒருபாகம் அரசர்களுக்கிட்டும் தேவதைகளுக்கு இருபத்தொன்றிலொருபாகமிட்டும் முப்பதில் ஒருபாகம் பிராமணர்களுக்குக் கொடுத்தும் பயிர் செய்பவன் தோஷமடையமாட்டான்.

க்ஷத்ரியோபிக்ருஷிம்க்ருத்வாதேவாந்விப்ராம்ச்சபூஜயேத்
வைஸ்யஸ்ஸூத்ரஸ்ததாகுர்யாத்க்ருஷிவாணிஜ்ய
ஸில்பகம் 72

(இ - ள்.) க்ஷத்திரியனும் பயிர்செய்து, பிராமணர்-தேவதைகளிவைகளைப் பூசிக்கக்கடவன் வைசியனும் சூத்திரனும் பயிர்வர்த்தகம் சித்திரவேலைகளைச் செய்து தேவாதிகளுக்கு பூஜைசெய்யக் கடவர்கள்.

விகர்மகுர்வதேஸூத்ராத்விஜஸுஸ்ருஷயோச்சிதா :
பவந்த்யல்பாயுஷஸ்தேவைநிரயம்யாந்யஸம்ஸயம் 73

(இ - ள்.) பிராமணசுச்ருஷையைவிட்டு சூத்திரன் தனக்கிடைத்த கருமத்தைச்செய்யாமல் விட்டால் ஆயுள் குறைந்தவனுகிருன் பிறகு நரகத்தையுமடைவான் இதில் ஸம்சயமில்லை,

சதுர்ணுமபிவர்ணுநாவேஷதர்மஸ்ஸநாதந : 74

(இ - ள்,) நான்கு வர்ணங்களுக்குமிந்த தர்ம்மமேயநாதியானது,

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

—○—

## மூன்றுவது அத்தியாயம்

அதஸ்ஸுத்திம்ப்ரவக்ஷ்யாமிஜநநேமரணே ததா 75

(இ-ள்,) இனி பிறப்பிலும் இறப்பிலுமுண்டாகும் ஆசௌசத்திற்கு சுத்தி சொல்லுகிறேன்.

திநத்ரயேணஸுத்யந்திப்ராஹ்மணா:ப்ரேதஸூதகே
க்ஷத்ரியோத்வாதஸாஹேநவைஸ்ய:பஞ்சதஸாஹகை:
ஸூத்ரஸ்ஸுத்யதிமாஸேநபராஸரவசோததா 76

(இ-ள்.) மரணத்தீட்டில்சமானோதகனை பிராம ணன்மூன்று தினத்திலும் க்ஷத்திரியன் பனிரெண்டு தினத்திலும் வைச்யன் பதினைந்து தினத்திலும் சூத்திரன் ஒரு மாதத்திலும் வ்ருத்தபராசரர் வாக்கின்படி சுத்தியா கிறான்,

உபாஸநேதுவிப்ராணாமங்கஸுத்திச்ச ஜாயதே 77

(இ-ள்.) பிராமணர்கள் சந்தியாவந்தனம் முதலிய வற்றை யனுஷ்டிக்கும் காலத்தில் சரீரசுத்தியுண்டா கிறது.

ப்ராஹ்மணாநாம்ப்ரஸூதௌதுதேஹஸ்பர்ஸோ
விதீயதே 78

(இ-ள்,) பிராமணர்களுக்கு பிரஸவாசௌசம்நேர்ந் தால்மேல்பட்டுக்கொள்ளலாம் பாதகமில்லை.

ஜாதௌவிப்ரோதஸாஹேநத்வாதஸாஹேநபூமிப:
வைஸ்ய:பஞ்சதஸாஹேநஸூத்ரோமாஸேநஸுத்யதி 79

(இ-ள்.) ஜனனாசௌசத்தில் பிராமணன் பத்து நாட்களாலும் க்ஷத்திரியன் பனிரெண்டு நாட்களாலும் வைச்சியன் பதினைந்து நாட்களாலும் சூத்திரன் ஒரு மாதத்தாலும் சுத்தனாகிறான்.

ஏகாஹாச்சுத்யதேவிப்ரோயோக்நிவேதஸமந்வித:
த்ரயஹாத்கேவலவேதஸ்துவிஹீநோதஸபிர்திநை: 80

(இ - ள்,) அக்நி வேதாத்யயனம் - இவைகளோடு கூடிய பிராமணன் ஒரு தினத்தாலும் கேவலம் வேதமோதினவன் மூன்று தினத்தாலும் இரண்டு மற்றவன் பத்து நாட்களாலும் சுத்தனாகிறான்,

ஜந்மகர்மபரிப்ரஷ்டஸ்ஸந்த்யௌபாஸநவர்ஜித:
நாமதாரகவிப்ரஸ்துதஸாஹம்ஸூதகீபவேத் 81

(இ - ள்,) கர்ப்பாதானம் முதலியஸம்ஸ்கார மற்றவனும் - சந்தியாவந்தனம், ஔபாஸநமிவையில்லாதவனும் பேரைமாத்திரம் தரித்துக்கொண்ட பிராமணன் பத்துநாள் தீட்டிருக்கவேண்டும்.

ஏகபிண்டாஸ்துதாயாதா:ப்ருதக்தாரநிகேதநா:
ஜந்மந்யபிவிபத்தௌசதேஷாந்தத்ஸூதகம்பவேத் 82

(இ - ள்.) மாதாவின் வர்ணம் வெவ்வேறாக விருந்தாலும் (தகப்பன்) அதாவது மூலபுருஷனுடைய சமான பிண்டர்களான தாயாதிகள் பிறப்பிலுமிறப்பிலும் மூல புருஷ வர்ணத்துக்குரிய தீட்டையே யனுஷ்டிக்கக்கடவர்கள்.

தாவத்தத்ஸூதகம்கோத்ரேசதுர்த்தபுருஷேணது 83

(இ - ள்.) கீழ்ச்சொல்லிய அன்னிய வர்ண ஸ்திரீயின் சந்ததிக்கு மூன்று புருஷன் வரையில் தீட்டிருந்து நான்காம் புருஷனில் விடப்படும்.

தாயாத்விச்சேதமாப்நோதிபஞ்சமோவாத்மவம்ஸஜ: 84

(இ-ள்.) தன் வம்சத்தில் பிறந்த ஐந்தாந் தலைமுறைப் புருஷனும் பிண்டத்தில் நின்றும் நீக்கப்படுகிறான்.

சதுர்தேதஸராத்ரம்ஸ்யாத்ஷண்ணிஸா:பும்ஸிபஞ்சமே
ஷஷ்டேசதுரஹாச்சுத்திஸ்ஸப்தமேதுதிநத்ரயாத் 85

(இ - ள்.) புருஷ சந்ததியில் நாலாந்தலைமுறையில் பத்துநாளா சௌசமும் ஐந்தாந்தலைமுறையில் ஆறு நாளும் ஆறாவது தலைமுறையில் நாலுநாளும் ஏழாவது தலைமுறையில் மூன்றுநாளும் ஆசௌசம்.

ப்ருக்வக்நிமரணேசைவதேஸாந்தரம்ருதேததா
பாலேப்ரேதேசஸந்யஸ்தேஸத்யஸ்ஸௌசம்விதீயதே 86

(இ - ள்,) மலையிலிருந்துவிழுந்தும் நெருப்புப்பட்டு மிறந்தாலும் தேசாந்தரத்திலிறந்தாலும் அதிகபாலனிறந் தாலும் சந்நியாசி யாயிறந்தாலும் ஸ்நானமாத்திரத்தால் சுத்தி.

தேஸாந்தரம்ருத:கச்சித்ஸகோத்ரஸ்ரூயதேயதி
நத்ரிராத்ரமஹோராத்ரம்ஸத்யஸ்நாநேநஸுத்யதி 87

(இ - ள். சமான கோத்திரன் தேசாந்திரத்தி லிறந்த தாகக் கேள்விப்பட்டாள் அதாவது ஒருவருஷமானபிறகு கேள்விப்பட்டால் மூன்றுநாளுமில்லை ஒருதினமும்மில்லை. அப்பொழுது ஸ்நாநமாத்திரத்தால்சுத்தி,

அஜாததந்தாயேபாலாயேசகர்ப்பாத்விநிஸ்ருதா:
நதேஷாமக்நிஸம்ஸ்காரோநாஸௌசம்நோதகக்ரியா 88

(இ - ள்,) பல்முளைக்காத குழந்தைகளுக்கும் கர்ப் பத்திலிருந்து நழுவியிறந்த சிசுக்களுக்கும் அக்நி ஸமஸ் காரம்கிடையாது தீட்டுமில்லை. தர்ப்பணமும்மில்லை.

யதிகர்ப்போவிபத்யேதஸ்ரவதேசாபியோஷித:
யாவந்மாஸம்ஸ்த்திதோகர்ப்போதிநம்தாவத்து
ஸூதகம் 89

(இ - ள்.) கர்ப்பம் கலைந்தாலும் பிரஸவித்தாலும் அந்தகர்ப்பம் எத்தனைமாஸமிருந்ததோ அத்தனைநாள் அதின் மாதாவுக்கு ஆசௌசம்.

ஆசதுர்தாத்பவேத்ஸ்ராவ:பாத:பஞ்சமஷஷ்டயோ:
அதவூர்த்வம்ப்ரஸூதிஸ்யாத்தஸாஹம்ஸூ
தகம்பவேத் 90

(இ - ள்.) நாலுமாதத்தில் கர்ப்பமழிந்தால் ஸ்ராவ மென்றும் ஐந்து ஆறில் பாதமென்றும்பெயர். அதின் பிறகு பிரஸவமென்னப்படும் அப்பிரஸவத்தில் பத்து நாள் ஆசௌசம்.

தந்தஜாதேநுஜாதேசக்ருதசூடேசஸம்ஸ்த்திதே
அக்நிஸம்ஸ்காரணேதேஷாம்த்ரிராத்ரமஸௌசிர்பவேத் 91

(இ - ள்.) பல்முளைத்தவனு யிருந்தாலும் அவனுக்குப் பின்பிறந்தவன். (அதாவது) பல்முளையாதவனு யிருந்தாலும் சௌளம் செய்யப்பட்டவனு யிருந்தாலும் அவன் மரணமடைந்தால் அவனுக்கு அக்நிஸம்ஸ்காரம் செய்தால் ஞாதிகளுக்கு மூன்றுநாள் ஆசௌசம்,

ஆதந்தஜந்மநஸ்ஸத்யஆசூடாந்நைஸிகீக்ரியா
த்ரிராத்ரமாவ்ரதாதேஸாத்தஸராத்ரமத:பரம் 92

(இ - ள்.) ஜனனம் முதல் பல் முளைக்கும் வரையில் ஸத்யசுத்தி. அதுமுதல் சௌளம்வரையில் ஒருதினம் ஆசௌசம். அதுமுதல் உபநயனம் செய்யும்வரையில் மூன்றுநாள் தீட்டு. பிறகு பத்துநாள் தீட்டு.

ப்ரஹ்மசாரீக்ருஹேயேஷாம்ஹூயதேசஹூதாஸந:
ஸம்பர்க்கஞ்சநகுர்வந்திநதேஷாம்ஸூதகம்பவேத் 93

(இ - ள்.) பிரமசாரியும் - எவன் அக்னிஹோத்ரம் செய்கிறனே, அவனும் தீட்டுக்காரரிடத்தில் சேராமலிருந்தால் அவர்களுக்குத் தீட்டில்லை.

ஸம்பர்க்காத்தூஷ்யதேவிப்ரோஜநநேமரணேததா
ஸம்பர்க்காச்சநிவ்ருத்தஸ்யநப்ரேதமநைவஸூதகம் 94

(இ - ள்.) தீட்டுக்காரர்களோடு சேர்வதனல் பிராமணன் பிறப்பிலு மிறப்பிலும் தீட்டுடையவனுகிருன். சேர்க்கையை விட்டவனுக்கு ஜனனமரண சௌசங்கள் இடையா.

ஸில்பிந:காருகாவைத்யாதாஸீதாஸாச்சநாபிதா:
ராஜாநஸ்ஶ்ரோத்ரியாச்சைவஸத்யஸ்ஸௌசா:
ப்ரகீர்த்திதா:
ஸவ்ரதஸ்ஸத்ரபூதச்சஆஹிதாக்நிச்சயோத்விஜ:
ராஜ்ஞச்சஸூதகம்நாஸ்தியஸ்யசேச்சதிபார்த்திவ:
உத்யதோநிநநேதாநேஆர்தோவிப்ரோநிமந்த்ரித:
ததைவருஷிபிர்த்ருஷ்டம்யதாகாலேநஸௌத்யதி 95

(இ - ள்.) சித்திரவேலை செய்கிறவன் சமயல்காரன் வைத்தியர்கள் தாஸிகள் வேலைக்காரர்கள் ராஜாக்கள் சுரோத்ரியர்களிவர்கள் தந்தந்தொழிலைச் செய்யுங்காலத்தில் சுத்தர்கள். பின்னும் யக்ஞத்தில் சங்கல்பித்தவனும் யக்ஞம்செய்கிறவனும் அக்ந்யாதானம் செய்தவனும் அரசன் தன் கருமம்முடியக் கோறினவனும் ஆசௌசிகளல்ல. யுத்தத்தில் சென்ற அரசனும் தானங்களில் பிரவேசித்தவனும் ஆபத்தையடைந்தவனும் நிமந்திரணம் சொல்லப் பட்டவனும் அப்பொழுது சுத்தர்கள். பிறகு அவரவர்களுக்கு விதித்தகாலத்தில் தீட்டு நீங்கும்.

ப்ரஸவேக்ருஹமேதீதுநகுர்யாத்ஸங்கரம்யதி
தஸாஹாச்சுத்யதேமாதாத்வவகாஹ்யபிதாஸுசி: 96

(இ - ள்.) ஜனனசௌசத்தில் கிரகஸ்தனை பிதாவானவன் பிரஸவித்தவளோடு சேராமலிருந்தால் ஸ்நானத்தாற்சுத்தனுகிருன். மாதாவானவள் பத்து நாளில் சுத்தியடைகிருள்.

ஸர்வேஸாம்ஸாவமாஸௌசம்மாதாபித்ரோஸ்து
ஸூதகம்
ஸூதகம்மாதுரேவஸ்யாத்உபஸ்ப்ருஸ்யபிதாஸுசி: 97

(இ - ள்.) மரணநிமித்தமானவாசௌசத்தில்ஜ்ஞாதிகளுக்கும் மாதாபிதாக்களுக்கும் கர்மாதிகாரமற்ற தீட்டு உண்டு ஜனனு சௌசத்தில் தொடக்கூடாததீட்டு மாதாவுக்கேயுள்ளது பிதா ஸ்நானம் செய்தால் சுத்தனுகிருன்.

யதிபத்ந்யாம்ப்ரஸூதாயாம்ஸம்ஸர்க்கம்குருதேத்விஜ:
ஸூதகந்துபவேத்தஸ்யயதிவிப்ரஷ்ஷடங்கவித் 98

(இ - ள்.) பிரஸவித்த பத்னியை ஸ்பர்சித்தால் சகல சாஸ்திரங்தெரிந்தவனுகிலும் பத்துநாள் தீட்டுள்ளவனுவான்.

ஸம்பர்க்காஜ்ஜாயதேதோஷோநாந்யோதோஷோஸ்தி
வைத்விஜே
தஸ்மாத்ஸர்வப்ரயத்நேநஸம்பர்க்கம்வர்ஜயேத்புத: 99

(இ - ள்.) பிரஸவித்தவளை ஸ்பர்சிப்பதால் பிராமணனுக்குத் தீட்டுண்டு. ஜனனத்தில் வேறுவிதமான தீட்டுகிடையாது ஆதலால் எவ்விதத்திலாகிலும் பிரஸவித்தவளை ஸ்பர்சிக்கக்கூடாது.

விவாஹோத்ஸவயஜ்ஞேஷு த்வந்தராம்ருதஸூதகே
பூர்வஸங்கல்பிதம்த்ரவ்யம்தீயமாநம்நதுஷ்யதி 100

(இ - ள்.) விவாகம் உத்ஸவம்யக்யமிவைகளில் நடுவில் ஆசௌசம்வந்தாலும் தீட்டுக்குமுன் சங்கல்பித்ததிரவியங்களுக்குத் தீட்டுக்கிடையாது.

அந்தராதுதஸாஹஸ்யபுநர்மரணஜந்மநீ
தாவத்ஸ்யாதஸுசிர்விப்ரோதாவத்தத்ஸ்யாத
நிர்தஸம் 101

(இ - ள்.) பத்துநாளையதீட்டின் நடுவில் மறுபடி ஆசௌசம் நேர்ந்தால் முன்தீட்டு முடியும்வரையில் அசுத்தனுவான்.

ப்ராஹ்மணார்தேவிபந்நாநாம்பந்தீகோக்ரஹணே ததா
ஆஹவேஷுவிபந்நாநாமேகராத்ரமஸௌசகம் 102

(இ - ள்.) பிராமணன் நிமித்தமா யிறந்தவனுக்கும் காராகிருகத்திலும் மாட்டினு லு மிறந்தவனுக்கும் யுத்தத்தி லிறந்தவனுக்கும் ஒருதினம் தீட்டு.

த்வாவிமௌபுருஷௌலோகேஸூர்யமண்டலபேதிநௌ
பரிவ்ராட்யோகயுக்தச்சரணேசாபிமுகோஹத: 103

(இ - ள்.) உலகத்தில் யோகத்தினுல் சித்தியடைந்தவனும் யுத்தத்தில் திரும்பாம லிறந்தவனுமாகிய இருவருமே சூரியமண்டலத்தைப் பிளந்துசெல்லுகிறவர்கள்.

யத்ரயத்ரஹதஸ்ஸூரஸ்ஸத்ருபி:பரிவேஷ்டித:
அக்ஷய்யாந்லபதேலோகாந்யதிக்லீபம்நபாஷதே 104

(இ - ள்.) சத்துருக்களால் சூழப்பட்டு பயந்த வார்த்தைகளைச் சொல்லாமல் சூரனைவன் எங்கெந்தவிடத்தி லிறப்பினும் அவன் குறைவற்ற மேலுலகங்களை யடைகிருன்.

யஸ்துபக்நேஷுஸைந்யேஷுவிப்ரவத்ஸுஸமந்தத:
பரித்ராதும்யதாகச்சேத்ஸசக்ரதுபலம்லபேத் 105

(இ-ள்.) யுத்தத்தில் சைன்யங்களடிபட்டு நாலு பக்கமும் ஓடுங்காலத்தில் எந்தச்சூரன் அவைகளை ரக்ஷிக்கச்செல்கிருனோ அவன் யாகஞ்செய்த பலனை அடைவான்.

யஸ்யசேதக்ஷதங்காத்ரம்ஸரமுத்கரயஷ்டிபி:
தேவகந்யாஸ்துதம்வீரம்ஹாந்திசரமந்திச 106

(இ-ள்.) எவனுடைய சரீரம் யுத்தத்தில் பாணம் எறிதடி வளைதடிகளால் வெட்டுண்டதோ அந்தச்சூரனைத் தேவகன்னிகைகள் கொண்டுபோய் ரமிக்கிருர்கள்.

தேவாங்கநாஸஹஸ்ராணிஸூரமாயோதநேஹதம்
த்வரமாணா:ப்ரதாபந்திமமபர்தாமமேதிச 107

(இ-ள்.) யுத்தத்திலிறந்த சூரனைக்குறித்து அனேகம் தேவகன்னிகைகள் இவனெனக்கு நாயகன் எனக்கு நாயகனென்று பரபரப்புடன் ஓடுகிருர்கள்.

யம்யஜ்ஞஸங்கைஸ்தபஸாசவிப்ரா
ஸ்வர்க்கைஷிணோவாத்ரயதைவயாந்தி
க்ஷணேநயாந்த்யேவஹிதத்ரவீரா:
ப்ராணுந்ஸுயுத்வேஷுபரித்தியஜந்த: 108

(இ-ள்) பிராமணர்கள் சுவர்க்கத்தில் விருப்பமுள்ளவர்களாய் அனேகம் யாகங்களாலும் எவ்வண்ணமாக எந்த வுலகத்தையடைகிருர்களோ? அவ்வண்ணமாகவே க்ஷணப்பொழுதில் சூரர்கள் நல்ல யுத்தங்களில் பிராணன்களைவிட்டு அவ்வுலகங்களையடைகிருர்கள்.

ஜிதேநலப்யதேலக்ஷ்மீர்ம்ருதேநாபிஸுராங்கநா
க்ஷணத்வம்ஸிநிகாயேஸ்மிங்காசிந்தாமரணேரணே 109

(இ-ள்) யுத்தத்தில் ஜயித்தவன் சம்பத்தடைகிருன்; இறந்தவன் தேவகன்னிகையை யடைகிருன்: க்ஷணப்பொழுதில் நாசமடைகிற விந்தச் சரீரத்தில் மரிக்கிறதிலும் யுத்தம் செய்வதிலும் என்னசந்தேகம்.

லலாடதேஸேருதிரம்ஸ்ரவத்யத்
யதயாஹவே துப்ரவிஸேச்சவக்த்ரம்
தத்ஸோமபாநேநகிலாஸ்யதுல்யம்
ஸம்க்ராமயஜ்ஞேவிதிவச்சத்ருஷ்டம் 110

(இ-ள்) யுத்தத்தில் நெற்றியிலடிப்பட்டு ரக்தம் வாயில் பெருகினல் யுத்தமாகிறயாகத்தில் விதிக்கப்பட்ட சோமபானத்தோடு இவன் திறத்திலொக்கும்.

அநாதம்ப்ராஹ்மணம்ப்ரேதம்யேவஹந்தித்விஜாதய:
பதேபதேயஜ்ஞபலமாநுபூர்வ்யால்லபந்திதே
நதேஷாமஸுபம்கிஞ்சித்பாபம்வாஸுபகர்மணும்
ஜலாவகாஹநாத்தேஷாம்ஸத்யஸ்ஸௌசம்விதீயதே 111

(இ-ள்) யாதொருபிராமணன் அனுதரவாயிருக்கிற பிராமணப் பிரேதத்தை தூக்கிக்கொண்டு போகிருனே அவன் வரிசையாக அடிகள்தோறும் யாகபலத்தையடைகிருன் அவர்களுக்கு நல்ல காரியத்தைச் செய்தமையால் அசுபமும் பாவமுமில்லை. ஸ்நாநம்செய்த மாத்திரத்தில் அப்பொழுதே யவர்களுக்குச் சுத்தியுண்டாய்விடும்.

அஸகோத்ரமபந்தும்சப்ரேதீபூதம்த்விஜோத்தமம்
வஹித்வாசதஹித்வாசப்ராணுயாமேநஸுத்யதி 112

(இ-ள்.) தனக்கு ஞாதியில்லாதவனுயும் பந்துவில்லாதவனுயும் இறந்துபோன பிராமண சிரேஷ்டனை எடுத்தும் கொளுத்தியும் பிராணுயாமஞ்செய்து சுத்தனுகிருன்.

அநுகம்யேச்சயாப்ரேதம்ஜ்ஞாதிமஜ்ஞாதிமேவவா
ஸ்நாத்வாஸசேலம்ஸ்ப்ருஷ்ட்வாக்நிம்க்ருதம்ப்ராஸ்ய
விஸுத்யதி 113

(இ-ள்.) ஞாதியாயினும் அல்லாதவனுயினும் இறந்தவனைப் புத்திபூர்வமாய் பின்சென்ருல் துணியுடன் ஸ்நானம்செய்து அக்னியை ஸ்பர்சித்தும் நெய்யைக்குடித்தும் சுத்தனுகிருன்.

க்ஷத்ரியம்ம்ருதமஜ்ஞாநாத்ப்ராஹ்மணேயோநுகச்சதி
ஏகாஹமஸுசிர்பூத்வாபஞ்சகவ்யேநஸுத்யதி 114

(இ - ள்.) எந்தப்பிராமணனாயினும் இறந்த க்ஷத்திரியனை அறியாமல் அனுகமனம் செய்தால ஒருதினம்தீட்டிருந்து பஞ்சகவ்யத்தைச் சாப்பிட்டுச்சுத்தியடைகிறான்.

ஸவம்வாவைஸ்யமஜ்ஞாநாத்ப்ராஹ்மணோயோநுகச்சதி
க்ருத்வாஸௌசம்த்விராத்ரஞ்சப்ராணாயா
மாந்ஷடாசரேத் 115

(இ - ள்.) எந்தப்பிராமணன் தெரியாமல் வைசிய பிரேதத்தைப்பின்செல்கிறானோ ; அவனிரண்டுநாள் தீட்டிலிருந்து பிராணாயா மஞ் செய்யவேண்டும்.

ப்ரேதீபூதந்துயஸ்ஸூத்ரம்ப்ராஹ்மணோஜ்ஞாநதுர்பல :
அநுகச்சேந்நீயமாநம்த்ரிராத்ரமஸுசிர்பவேத்
த்ரிராத்ரேதுதத:பூர்ணேநதீங்கத்வாஸமுத்ரகாம்
ப்ராணாயாமஸதம்க்ருத்வாக்ருதம்ப்ராஸ்யவிஸுத்யதி 116

(இ - ள்). எந்தப்பிராமணன் அறிவற்றவனாய் சூத்திரப் பிரேதத்தைப் பின்செல்கிறானோ; மூன்றுநாள் தீட்டிருந்து அம்மூன்றுநாளும் நிறைந்தபின் சமுத்திரம் சேர்கிற நதியையடைந்து நூறு பிராணாயாமம் செய்து நெய்யைச் சாப்பிட்டுச் சுத்தனாகிறான்.

விநிவர்த்யயதாஸூத்ரஉதகாந்தமுபஸ்திதா :
த்விஜைஸ்ததாநுகந்தவ்யாஹ்யேஷதர்மஸ்ஸநாதந : 117

(இ - ள்.) சூத்திரனுக்குத் தீட்டுக் கழிந்தபின் அவனைப் பின் செல்லலாம். இது அனாதியான தர்மம்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.
ஆசாரகாண்டம் ஸம்பூர்ணம்.

## ஆசார ஸங்கிரகம்.

இங்கு பராசரபகவான், ப்ராஹ்மண க்ஷத்திரிய வைஸ்ய சூத்திரர்களென்கிற நான்கு ஜாதிகளுக்கும், மநு, யாக்யவல்கியர், கௌதமர், சங்கர் முதலிய பூர்விகர்கள் கூறிய ஆசாரங்களை இக்கலியுகத்தில் அநுஷ்டானம்செய்வது அரிதென்று விசாரித்து, கடினமான அக்கர்மாசாரங்களைச் செய்யச் சக்தியற்றவர்களாய்,

ஆகையாலவைகளைவிட்டு வேறு ஸுலபதர்மங்களை யறியாமல் அக்ஞான கூபத்தில்விழுந்து ஜாதிப்ரஷ்டர்களாய்ப் போகிற இந்நான்குவர்ணஸ்தர்களிடம் பரம கிருபையினால், இவர்களை நல்வழியடைவிப்பிக்கக்கருதி, இக்காலானுகுணமாகவும், இவர்கள் சக்திக்கனுகுணமாகவும் மேலுலகங்களை யடைவிப்பிக்கத் தக்கவைகளுமான வர்ணாஸ்ரமாசாரங்களை இந்த பராசரஸ்மிருதியை இட்டு வெளியிட்டருளினார். அந்த ஆசாரங்களில் மநு முதலிய முன்னோர் கூறியதாய், இக்காலத்திலும் ஸுலபமாகச் செய்யத் தக்கவைகளான ஆரங்களை அந்தந்த தர்மசாஸ்திரங்களினால் கண்டுகொள்வர்களென்று அவ்வாசாரங்களை விட்டுவிட்டு, இக்காலத்தில் செய்ய முடியாததாக பெரியோருரைத்த சில ஆசாரங்களுக்கு மாத்திரம் பதிலாக சில ஆசாரங்களை மொழிந்தனர். ஆகையாலிங்குமநுமுதலியவர்களின் தர்மசாஸ்திரங்களில் கூறிய ஆசாரங்களையும் அனைவரும் ஸுகமாகவறிந்துகொள்ளும்படி ஸங்கிரகமாகச் சொல்லப்படுகின்றன.

பிராத:காலத்தில் செய்யவேண்டிய கிருத்தியங்கள்— ஸூர்யோதயத்திற்கு ஐந்து நாழிகைக்கு முந்தினகாலம் உஷ: காலமென்றும் பிராம்மமுகூர்த்தமென்றும் சொல்லப்படும். அப்போது ரஜோகுணமும் தமோகுணமும் கீழ்பட்டு ஸத்வகுணம் தலையெடுத்திருக்கும். ஆகையால், மனம் நிர்மலமாய்த் தத்வத்தை யுள்ளபடி யறிகைக்கும் தியானிக்கைக்கும் யோக்யமான அக்காலத்தில் படுக்கையில் நின்று மெழுந்திருந்து ஸ்ரீஹரி: என்று மூன்றுதரம் பகவந்நாமத்தை அநுஸந்தித்து, பின்பு வலதுகாலை முந்துற பூமிமேல்வைத்து படுக்கையைவிட்டெழுந்திருந்து ஜலபாதையை நிவ்ருத்திசெய்துகொண்டு கைகால்களை முழங்கை முழங்கால்வரையில் சுத்திசெய்துகொண்டு வாயில் நாற்றம்போமளவும் வாயைத் தேய்த்துக் கொப்பளித்து கண்களிலும் மூக்கிலுமுள்ளமலங்களைப் போக்கிக்கொண்டு ஆசமனம்செய்து, பின்பொரு சுத்தமான இடத்திலாஸநமிட்டு அதில் கிழக்குமுகமாயுட்கார்ந்து, தன்னுடைய ஆசாரியன்முதலாக ஸ்ரீமந்நாராயணன்

வரையிலுள்ள குருபரம்பரையை யநுஸந்தித்துப் பிறகு மாம்ஸம், இரத்தம், மஜ்ஜை, எலும்பு, நரம்பு முதலிய நிஹீநவஸ்துக்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்டும், மல மூத்திரங்களினால் நிறைந்தும் அதிஹேயமாயிருக்கிற இச்சரீரத்தினுடைய துர்க்குணத்தையும், இதுவரையில் வீணாய்க் கழிந்துபோன காலத்தையும் நினைத்து ஜுகுப்ஸையையடைந்து ஸர்வேஸ்வரனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையும். அவன் தசாவதாரங்களெடுத்து சேதனோஜ்ஜீவனார்த்தமாகச் செய்தருளிய அதிமானுஷசேஷ்டிதங்களையும், அவன் விஷயமான ஸ்தோத்ர பாடங்களையுமநுஸந்தித்து நிர்மலாந்தக்கரணனாய் அநந்தரமெழுந்திருந்து, கண்ணாடி, பூர்ணகும்பம், பூ, சித்திரம், தேவாலயம், ஸுமங்கலி, நல்லமாளிகைகள் முதலியரம்ணீயமான வஸ்துக்களைப் பார்க்கக் கடவன். அசுத்தமாய், விகாரமாயிருக்கிற வஸ்துக்களைப் பார்க்கக்கூடாது. அதன்பின். ஊருக்கு வாயுமூலையில் நூறுகஜம்தூரம் அப்புறம்போய்த் தலையில் துணியைச் சுற்றிக்கொண்டு பூணூலைக் கண்வட்டத்தில் படாதபடி வலதுகாதில்சுற்றி அங்கிருக்கிற புழுபூச்சிகள் அப்புறத்தில் போம்படியாகக் கைகளைத் தட்டி, பயிர், செடி, பூண்டு உழுதநிலம், கிளறு பூமி, வழி, தோட்டம் இவைகளில்லாமலும் ஒருவருக்கு உபத்திரவம் உண்டாகாமலுமிருக்கிற இடத்தில் உட்கார்ந்து, மலநிவ்ருத்தியைப் பண்ணிக்கொண்டு மனுஷியர்களுக்கும் பசுக்களுக்கும் நீர்குடிக்கைக்கு யோக்கியமல்லாத ஜலக்கரையிலுட்கார்ந்தாவது கையோடு பாத்திரத்திற்கொண்டு போயிருந்த ஜலத்தினாலாவது குதசுத்தி செய்துகொள்ளக்கடவன். வருஷதாரையில் குதசுத்தி செய்யக்கூடாது. குதத்துக்குப்பதினைந்துதரமும் ஆள் குறிக்கு மூன்றுதரமும் கால்களுக்குப் பத்துதரமும் கைக்குப் பதினைந்துதரமும் மண்ணைப் போட்டலம்பவேண்டும். இவ்வளவு செய்தும் திருப்தி இல்லாவிட்டால் தன் மனதுக்குத் திருப்தியுண்டாமளவும் நாற்றம்போமளவும் குதசுத்தி செய்யவேண்டும். ஜலப்பாதைக்காவது மலபாதைக்காவது உட்காரும்போது இரண்டு சந்தியைகளிலும் தினத்திலும் வடக்கு முகமாயும் இரவில் தெற்கு முகமாயும் உட்காரவேண்டும். பசு பிராமணர் சூரியன்

அக்கினி தேவாலயம் இவைகளுக்கெதிர்முகமாக உட்காரக்கூடாது. பிறகு முழங்கை முழங்கால்கள் வரையில் அலம்பிக்கொண்டு வாய்கொப்பளிக்கவேண்டும். ஜலத்தின் பேரில் உமியக்கூடாது. கரையில் உமிந்து அவ்விடத்தை யலம்பவேண்டும்.

வாய்கொப்பளித்தல்—மலவிஸர்ஜநத்தில் பன்னிரெண்டுதரமும், ஜலபாதைக்குப்பின் ஆறுதரமும், சாப்பிட்டபின்பும் பல்தேய்த்தபின்பும் பதினைந்துதரமும் வாய்கொப்பளிக்கவேண்டும். அனந்தரத்தில் ஆசமனம் செய்து பல்தேய்க்கவேண்டும்.

பல்தேய்த்தல்—சூர்யோதயத்திற்குமுன் கிழக்காகவும், அதன்பின் வடக்கு அல்லது ஈசான்யமுகமாயாவது உட்கார்ந்து தேய்க்கவேண்டும். சூர்யனுக்குப் பற்களைக் காட்டகூடாது. கைவிரலினுலும், செங்கல், கரி, சாம்பல், ஓடு. மண் இவைகளால் செய்யக்கூடாது. பிராமணனுக்குப் பன்னிரண்டங்குலம். க்ஷத்திரியனுக்கு ஒன்பது அங்குலம், வைசியனுக்கு ஆறு, சூத்திரனுக்கு நாலு அங்குலம் நீளமும் சுண்டுவிரன் பருமன்கனமு முள்ளதாய், கைப்பு, காரம், பரிமளம், முள், பால் இவைகளையுடைய அலம்பின கொம்புகளினுல் பல்விளக்கவேண்டும். அஷ்டமீ, சதுர்த்தசீ, அமாவாசியை முதலிய பர்வதினங்கள், சிராத்ததினங்களில் மாவிலையினுல் தேய்க்கவேண்டும். குச்சியினுல் தேய்க்கக்கூடாது. பின் ஆசமனம் செய்து ஸ்நாநம் செய்யவேண்டும்

ஸ்நாநம் செய்தல்—ஆறு, ஏரி. குளங்களில் ஸ்நாநம் செய்யவேண்டும். இவைகளில்லாவிடில் கிணறுகளில் செய்யவேண்டும் குளம் கிணறுகள் தன்னதாயும் பொதுவாயும் அல்லாமல் மற்றொருவனதாயிருந்தால் அதிலிருந்து கொஞ்சம் மண்ணையெடுத்து வெளியில் போட்டு, நாலுகுடம் ஜலம் வெளியிலெடுத்துக்கொட்டிவிட்டுஅதில் ஸ்நாநம் செய்யவேண்டும் அந்த ஜலத்தில் கங்கை முதலியசகல புண்யதீர்த்தங்களை தியானித்துக்கொண்டு அகமர்ஷண மந்திரங்களை ஜபித்துக்கொண்டு ஸ்நாநம் செய்ய

வேண்டும் திவ்யம், வாருணம் மாந்த்ரம். பஸ்மஸ்நாகங்களென்று ஸ்நாநம் நாலுவகை. சூர்யகிரணங்கள் தெரியும்போது மேகம்காணுமல் திவலேகள் விழுந்தால் அதில்நிற்றல் திவ்யம் ஜலத்தில்முழுகுதல், வாருணம் ஜ்வரம் முதலிய ரோகங்களினுல் பீடிக்கப்பட்டு சக்தியற்றவன் மந்திரங்களேச் சொல்லி ப்ரோக்ஷித்துக் கொள்ளுதல் மாந்திரம். பஸ்மத்தை உடம்பெங்கும் பூசிக்கொள்ளல் பஸ்மஸ்நாநமென்று சொல்லப்படும். வாருணஸ்நாநம்—நித்யம் நைமித்திகம் காம்யம் கிரியாங்கம் மலாபகர்ஷணம் என்று ஐந்து விதமாயிருக்கும். நித்யமென்பது—ப்ரதிதினம் உதயத்தில் செய்யவேண்டிய ஸ்நாநம். நைமித்திகமென்பது—தீட்டு முதலியவைகளேப் போக்கிக்கொள்ளுகைக்காகச் செய்யும் ஸ்நாநம். காம்யமென்பது—மாகமாஸத்தில் கங்கையிலும், துலா மாஸத்தில் காவேரியிலும் இவை முதலான இடங்களில் ஒரு பலங்களேக் கோரி செய்யும் ஸ்நாநம் கிரியாங்கமென்பது—சிராத்தாதிகளுக்கு முன் செய்யும் ஸ்நாநம் மலாபகர்ஷணமென்பது—அப்பியங்க ஸ்நாநம். ப்ரதிதினம் பிராதக்காலத்திலும் மத்தியானத்திலும் செய்ய வேண்டும். ஸ்நாநம் செய்தபின் மயிர்களினின்றும் ஒழுகுகிற நீரை பித்ருக்கள் சாப்பிடுகிருர்களாகையால் அந்த ஜலத்தைத் துடைக்கக்கூடாது பின்பு கரையிலேறி மேல் வஸ்திரத்தைப் பித்ருக்களின் திருப்திக்காகக் கரையில்பிழியவேண்டும். ஸ்நாநத்துக் கங்கமாக தேவருஷி பித்ருதர்ப்பணங்களே ஸ்நாநம் செய்யும்போதே செய்ய வேணுமென்று சிலரும் சொல்லுவார்கள். பின்பு கரையிலேறி வஸ்த்திரத்தைத் தரிக்கவும்.

வஸ்திரம் தரித்தல்—பிராமணன் வெண் வஸ்திரமும், க்ஷத்திரியன் சிவப்புவஸ்திரமும், வைசியன் மஞ்சள்வர்ணமான வஸ்திரமும், சூத்திரன் கறுப்பு வஸ்திரமும், தரிக்கவேண்டும். பிரம்மச்சாரியும் சன்னியாசியும் கச்சமில்லாமலும் கிரகஸ்தனும் வாநப்பிரஸ்தனும் கச்சத்தோடும் அரையில்வஸ்திரம தரித்து மேல் உத்தரீயம் தரிக்கவேண்டும் கௌபீனமில்லாதவன் ஒரு கர்மத்திற்கும் உபயோகிக்கமாட்டான். வஸ்திரமில்லாவிட்டால் வெண்கம்பளம்

பட்டு, நார்மடி இவைகளைத் தரிக்கலாம். அனந்தரம் ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கவேண்டும்.

ஊர்த்வபுண்ட்ரம் தரித்தல் — வெண்மிருத்திகையி ஞல் ஹரி பாதாக்ருதியாகவும் இடையுள்ளதாகவும் பாத முள்ளதாகவும் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கக்கடவன். அதின் நடுவில் ஹரித்ரா சூர்ணத்திஞல் தீபரேகைபோல ஸ்ரீசூர்ணமும் தரிக்கவேண்டும். முகத்தில் நாஸிகாமூலம் முதல் நெற்றிக்கட்டு வரையிலும், வயிற்றின் மத்தியத்தி லும் அதற்கு வலது இடது புறங்களிலும் பத்து அங்குல மும். மார்பிலும் இரண்டு புஜங்களிலும் எட்டு அங்குல மும் கண்டத்தின் மத்தியிலும் அதற்கு வலது இடது புறங்களிலும் நாலு அங்குலமும். முதுகிலும் பிடரியிலும் நாலு அங்குலமும் பிரமாணம் இருக்கவேண்டும். மிகுந்த தைசிரஸில் துடைத்துக்கொள்ள வேண்டும். இதின் மந்திரங்களை ஆந்ஹிகங்களில் கண்டுகொள்க. அதன்பின் துளஸீ நளிநாக்ஷமாலைகளையும் பவித்திரங்களையும் நாபி யளவாகக் கழுத்தில் தரிக்கவேண்டும், ஊர்த்வபுண்ட்ர மில்லாதவன் ஒரு வைதிககர்மத்திற்கும் யோக்கியஞக மாட்டான். பின்பு ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்.

ஸந்தியாவந்தன விதி — எந்த வைதிககாரியங்க ளாரம் பித்த போதிலும் அதற்காதியிலு மந்தத்திலும் ஆசமனம் இரண்டாவ்ருத்தி செய்யவேண்டும். அது ச்ரௌதமென் றும் ஸ்மார்த்தமென்றும் இரண்டுவகை. த்வாதசநாமங் களிஞல் செய்கிறது ச்ரௌதம். இருபத்துநாலு நாமங் களிஞல் செய்கிறது ஸ்மார்த்தம். ஸ்ரோத்ராசமனமென் றும் நேத்ராசமனமென்றும் வேறுவிதமான ஆசமனங் களும் உண்டு. அவைகள் யோக்கியமான ஜலமில்லாதகா லத்தில் செய்யவேண்டியவைகள் கௌணங்கள் பிரண வத்தைச் சொல்லி வலதுகாதைத்தொடுதல் ச்ரோத்ரா சமன மென்றும். ஜலத்திஞல் கண்களைத்துடைத்துக் கொள்ளல் நேத்ராசமன மென்றும் பெயர். பிராணுயாம மென்பது ஸப்தவ்யாஹ்ருதிகாயத்திரி சிரஸ்ஸுக்களோடு கூடிய மந்திரங்களை மனஸ்ஸில் மனனம் செய்து கொண்டு ஒருதரத்திஞல் ரேசகம் (இடதுமூக்கில் நின்றும் மூச்சை வெளியில்விடுதல்) மற்றொருதரத்திஞல் பூரகம் வலது

மூக்கினல் (மூச்சை இழுத்தல்) மற்றெருதரத்தினல் கும்பகம் (மூச்சையடக்கல்) செய்து பகவானை தியானித்தல், இதுமுதலாக ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். உதயத்தில் ஸூர்யோதயத்திற்கு முன்னும், ஸாயங்காலம் அர்த்தாஸ்தமயமாகிற ஸமயத்திலும், மத்தியான்னத்தில் ஸூரியன் உச்சியிலிருக்கும்போதும் செய்துபின்பு உதயத்தில் ஸூர்யோதயத்தில் உபஸ்தாநத்தையும், ஸாயங்காலத்தில் நக்ஷத்திரம் தெரியும்போது உபஸ்தாநத்தையும் செய்யவேண்டும். ஆசமனமென்பது—பசுவின்காதுபோல் கையைவைத்துக்கொண்டு (அதாவது-நடுவிரலின் இரண்டாவது கணுவில் கட்டை விரலின் நுனியை அமர்த்தி) அதில் உளுந்து அமருமளவான தீர்த்தத்தை எடுத்து, அச்சுதாய நம:, அநந்தாய நம:, கோவிந்தாய நம: எனகிற மூன்று மந்திரங்களைச் சொல்லி மூன்றுதரம் அந்த தீர்த்தத்தை சாப்பிட்டு இரண்டுதரம் முகத்தைத் துடைத்து கையை யலம்பி கேசவாதித்வாதச நாமஙகளினல் இரண்டு தாடைகள் இரண்டு கண்கள் இரண்டு மூக்குகள் இரண்டு காதுகள் இரண்டு புஜங்களை, கட்டை விரல் பவித்திர விரல் சுட்டிக் காட்டும் விரல் சுண்டு விரல் நடு விரல்களால்கொண்டு ஐந்துவிரல்களினுலும் நாபியையும் சிரஸ்ஸையும் தொடவேண்டியது.

ஸந்தியாவந்தனம், ஈரவஸ்திரத்தோடிருந்தால் முழங்காலளவு ஜலத்தில் நின்றுகொண்டும் உலர்ந்த வஸ்திரத்தோடிருந்தால் ஜலக்கரையில் உட்க்கார்ந்தும் செய்ய வேண்டும். அர்க்கியபிரதானம் செய்யும்போது இரண்டு கட்டைவிரல்களையும் கையிலுள்ள ஜலத்தில் படாமற்படி வேருக தூக்கி வைத்துக்கொண்டு காயத்திரியைச்சொல்லி அந்த ஜலத்தை ஜலத்திலேதூக்கிவிடவேண்டும், நடுவே கைகளை வெவ்வேருக விடக்கூடாது. ஜபம் செய்யும்போது நாய் முதலிய அசுத்த வஸ்துக்களைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் ஸூரியன் அக்கினி முதலியவைகளைப் பார்த்து சுத்தனுக வேண்டும். காலையில் நின்றுகொண்டும். ஸாயங்காலத்தில் உட்கார்ந்துகொண்டும் ஜபம் செய்யவேண்டும் மத்தியான்னத்தில் எப்படியாகிலும் செய்யலாம். காலையில்

முகத்தளவாகக்கைகளை வைத்துக்கொண்டும் மத்தியான்னத்தில் நாபியளவாகவும், ஸாயங்காலத்தில் துடைகள் மேலும் கைகளைவைத்துகொண்டும் ஜபம்செய்யவேண்டும். காலையிலும் ஸாயங்காலத்திலும் நூற்றெட்டும் மத்தியான்னம் இருபத்தெட்டும் காயத்திரியை ஜபம் செய்ய வேண்டும். ஆயிரத்தெட்டு செய்தால் உத்தமம். நூற்றெட்டு செய்தால் மத்திமம். இருபத்தெட்டு செய்தால் அதமம், பத்துக்குக்குறையக்கூடாது. பக்கத்திலிருப்பவர்களுக்குக் கேட்கும்படியாகச் செய்தால் அதமம். அப்படியன்றி உதடு அசையும்படி மெதுவாகச் செய்தால் மத்திமம், அப்படியுமன்றி மனதில்லேயே காயத்திரியின் மந்திரங்களை நினைத்துக்கொண்டு செய்தால் உத்தமம். கணக்கில்லாமல் ஜபம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அது இராக்கதர்களையடையும். விரற்களினுல் எண்ணினுல் அதமம். விரற்களின் கணுக்களினுலெண்ணினுல் மத்திமம்; சங்கமணி பொன்முத்து நவரத்நங்கள் கமலமணி களினுல் எண்ணினுல் உத்தமம். நூற்றெட்டு அல்லது ஐம்பத்து நாலு அல்லது இருபத்தேழு மணிகள் கோத்து ஜப மாலை வைத்துகொள்ளவேண்டும்.

ஜபம் செய்தபிறகு காலையில் ஸூரியன் உதித்து ஒரு முழம் உயரவருவதற்குள்ளாகவும், மாலையில் செம்மானம் மறைவதற்கு முன்னுகவும் ஹோமம் செய்யவேண்டும். எரிச்சலின்றி புகைந்துகொண்டிருக்கிற அக்கினியில் செய்யக்கூடாது. தான் ஊரிலில்லாவிட்டாலும் ரோகியாயிருந்தாலும் தீட்டுக்கொண்டிருந்தாலும் தன்புத்திரர் சிஷ்யர்களைக்கொண்டு செய்விக்கலாம். இதுக்கு தேவ யக்கியம் என்று பெயர்.

பின்பு ப்ரஹ்மயக்ஞம் செய்ய வேண்டியது. அதாவது தன்னுடைய சாகையில் சிலருக்குக்களையாவது சில யஜுஸ்ஸுக்களையாவது சில ஸாமங்களையாவது ஓதுகை. இதுக்கு ப்ரஹ்ம யக்ஞமென்று பெயர்.

தர்ப்பணம் செய்யும் விதம்—தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் ஒவ்வொருதரமும் பித்ருக்களுக்கு மூன்றுதரமும் ஜலத்தினுல் தர்பிக்கவேண்டும். பூணூலை உபவீதமாகச் செய்துகொண்டு தேவர்களுக்கும் தாவடமாகப் (மாலை

யாக) போட்டுக்கொண்டு ரிஷிகளுக்கும், ப்ராசீனுவீத மாகப் போட்டுக்கொண்டு பித்ருக்களுக்கும் செய்ய வேண்டும். தேவர்களுக்கு விறல்களின் நுனிகளினுலும், ரிஷிகளுக்கு கைகளின் நடுவினுலும், (சுண்டு விரலின் அடிகணுக்களின் நின்றும்), பித்ருக்களுக்குக் கட்டை விரலுக்கும் சுட்டுக்காட்டி விரலுக்கும் நடுபாகத்திலுைம் ஜலம் விடவேண்டும். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் கிழக்கு முகமாகவும், பித்ருக்களுக்கு தெற்கு முகமாகவும் நின்று செய்ய வேண்டியது. பித்ருக்களை உத்தேசித்து ஸ்வதா என்கிற மந்திரத்தைக் கடைசியில் சேர்த்து ஜலத்தை விட்டால். இதுக்கு பித்ருயக்கியமென்று பெயர்.

பின்பு பகவதாராதனத்துக்கு யோக்யமான ஸாமக் கிரிகளை ஸம்பாதித்துக்கொண்டு பிறகு மாத்தியான்னிக ஸ்நாநம் செய்து பகவதாராதனம் செய்து அநந்தரம் காக்கை எறும்பு முதலிய பிராணிகளுக்கு அன்னமிட வேண்டும். இதுக்கு பூதயக்ஞயமென்று பெயர்.

பிறகு பித்ருக்களுக்காகப் பிரதிதினம் ஒன்று இரண்டு மூன்று பேர்களைத்தன் சக்திக்கனுகுணமாக போஜனம் செய்வித்தும், அதிதிகளையும் போஜனம் செய்விக்க வேண்டியது. அதிதிகளென்பது, வைச்வதேவத்திற்கு முன்னடியாக வெகுதூரத்திலிருந்து நடந்து வந்து இளைத்தவனுய் கால்களில் தூள்களோடு காண்கிறவன். அவன் இரண்டாவது நாள் இருந்தால் அதிதியாகமாட்டான் ப்ரும்மத்தையறிந்தவன் எப்போதும் அதிதியாயிருப்பன். அவர்களுக்கு அன்னமிடச் சக்தியில்லாவிட்டால் கை கால்களை அலம்புகைக்கு ஜலம் கொடுத்து ஆஸநத்திலுட் காரவைத்து நல்வார்த்தைகளைச் சொல்லி இரண்டு மூன்று கபளத்துக்காம்படியாவது அன்னமளிக்கவேண் டும். இதுக்கு மனுஷ்யயக்கியமென்று பெயர். இந்த ஐந்துயக்கியங்களும் பிரதிதினம் செய்யக்கடவன், பிறகு மாதாபிதாக்களையும் பந்துக்களையும் போஜனம் செய் வித்துத்தானும் புஜிக்கக்கடவன்.

அதன்பின்பு ஸாயங்காலம் வரையில் வேதம் சாஸ் திரம் முதலியவைகளை யோதுதல் தேகயாத்திரைக்கு வேண்டிய வியாபாரங்களைச்செய்தல் இவைகளை லௌகி கவைதிக காரியங்களில் ஜாக்கிரதையுள்ள வனுயிருந்து செய்யக்கடவன்.

ஸாயங்காலமானமவாறே முன்சொல்லிய விதிப்படி ஸந்தியாவந்தனம் ஹோமங்களைச் செய்து முடித்து ஸஹஸ்ரநாமம் முதலியவைகளைப் பாடம் செய்து இராத்திரி பத்துநாழிகைவரையில் பகவானுடைய குணங்களைச் சொல்லிக்கொண்டு பின்பு சயனிக்கக்கடவன். இவ்விதமாக நித்தியம்நடந்துகொண்டு வருகிறவன் இந்தலோகத்தில் இருக்குமளவும் நல்லஸுகத்தையும் பின்பு பரலோகம் போய் அங்கும்மேலான ஸுகத்தையும் அனுபவிப்பான்.

மஹாளயசிராத்தவிதி—வருஷருதுவில் புரட்டாசிமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில் பதினைந்து திதிகளும் மஹாளய மஹாபுண்ணிய காலமாகையால் சிராத்தஞ்செய்தால் அக்ஷயமான திருப்தியுண்டாகும். மஹாளயகாலத்தில் பிதுர்களுக்கு நெய் பாயசம் அன்னம் பதார்த்தம் பழம் முதலானதுகளை திருப்தியாக கொடுத்தால் பிதுர்கள் சந்தோஷிப்பார்கள், மாதந்தோறும் தர்ப்பணம் செய்யவேண்டும். பெரும்பாலும் சக்தியில்லாதவனுயிருந்தால் ஸ்நானஞ்செய்து ஜலத்தில் பிதுர்களைக்குறித்துத் தர்ப்பணஞ் செய்தானுனல் நித்தியசிராத்தஞ் செய்த பலனை யடைகிறுன். பிதுர்க்களை வசுதேவதைகளாகவும், பிதாமஹார்களை ருத்திரதேவதைகளாகவும், பிரபிதாமஹார்களை ஆதித்தியதேவதைகளாகவும், பழமையான வேதஞ் சொல்லியிருக்கின்றது. ஆகையால் அவர்களை, அத்தேவதைகளாகவே தியானிக்கவேண்டியது.

சிரார்த்தத்திய பிராமணரை நிமந்திரணம் சொல்லும் வகை—வேதங்கள் முழுதுமோதினவர்களும் வ்யாதியில்லாருமாக அவர்களுடைய மூன்ருவது பாட்டன்மார் தொடங்கிப் பரிக்ஷைசெய்து முன்று நாள் முன்நிமந்திரணம் சொல்லவேண்டும். தாய் தந்தையுடைத்தாயிருக்கிற ப்ராமணனை நிமந்திரணம் சொல்லவேண்டும். அந்த பிராமணன் 1008-ஜபம் மறுநாள் செய்யவேண்டும். அப்படி செய்யாவிட்டால் பாபமுண்டு.

ஆசார ஸங்கிரகம் முற்றிற்று.

## நாலாவது அத்தியாயம்.

## பிராயச்சித்த காண்டம்.

அதிமாநாததிக்ரோ தாத்ஸ்நேஹாத்வாயதிவாபயாத்
உத்பத்நியாத்ஸ்த்ரீ புமாந்வாகதிரேஷாவிதீயதே 1

(இ-ள்.) மானக்கேட்டினலாவது அதிககோபத்தினலாவது பயத்தினலாவது ஸ்திரீயாவது புருஷனவது கயிற்றினல் சுருக்கிட்டு இறந்தால் மேலே சொல்லுகிறபடி அவருக்கு நரகபாதனைகள் விதிக்கப்படுகின்றன.

பூயஸோணிதஸம்பூர்ணே த்தவந்தேதமஸிமஜ்ஜதி
ஷஷ்டிர்வர்ஷஸஹஸ்ராணிநரகம்ப்ரதிபத்யதே 2

(இ-ள்.) மேலே சொன்னபடி மரித்தவன் சீயினலும் ரத்தத்தினலும் நிறைந்த அந்த தாமிஸ்ரமென்று பெயருள்ள நரகத்தில் அறுபதினயிரமாண்டு மூழ்கிக் கிடக்கிறன்.

நாஸௌசம்நோதகம்நாக்நிம்நாஸ்ருபாதம்சகாரயேத் 3

(இ-ள்.) மேற்சொல்லியபடி யிறந்தவனைப்பற்றி தீட்டில்லை தர்ப்பணமில்லை. அக்னிதாகம் கிடையாது. அவனைக்குறித்துக் கண்ணீர்விடக்கூடாது.

வோடாரோக்நிப்ரதாதார:பாஸச்சேதகராஸ்ததா
தப்தக்ருச்ரேணஸுத்யந்தீ த்யேவமாஹப்ரஜாபதி: 4

(இ-ள்.) துர்மரணமான சவத்தை வகித்தவன் அக்நிப்பிரதானம் செய்தவன் கயிற்றையறுத்து விட்டவன் இவர்கள் தப்தக்ருச்ரம் என்கிற விரதத்தால் சுத்தியடைகிறர்கள் என்று பிரசாபதி சொன்னர்.

கோபிர்ஹதம்ததோத்பத்தம்ப்ராஹ்மணேநதுகாதிதம்
ஸம்ஸ்ப்ருஸ்ந்திதுயேவிப்ராவோடாரஸ்சாக்நிதாஹகா:
அந்யேயேசாநுகந்தார:பாஸச்சேதகராஸ்சயே
தப்தக்ருச்ரேணஸுத்தாஸ்தேகுர்யுர்ப்ராஹ்மண போஜநம்
அநடுத்ஸஹிதாம்காம்சதத்யுர்விப்ராயதக்ஷிணும் 5

(இ - ள்.) மாட்டினுல் கொல்லப்பட்டவன் கயிற்ருல் சுருக்கிக்கொண்டு யிறந்தவன் பிராமணனுல் கொல்லப் பட்ட வனிவர்களை யாதொரு பிராமணர்கள் தொடுவது அனுகமனம் செய்வது வகிப்பது அக்னியிடுவது இவை களைச் செய்கிருர்களோ அவர்கள் தப்த கிருச்ரவிருதம் செய்து பிராமணபோஜனம் செய்துவைத்து எருதுடன் கூடியபசுவை பிராமணருக்கு தக்ஷிணையாகக் கொடுத் தால் சுத்தராவார்களாக.

ஸம்ஸர்கமாசரேத்விப்ர:பதிதாதிஷ்வகாமத:
பஞ்சாஹம்வாதஸாஹம்வா த்வாதசாஹமதாபிவா
மாஸார்தம்மாஸமேகம்வா மாஸத்வயமதாபிவா
அப்தார்த்தமப்தமேகம்வா பவேதூர்த்வம்ஹிதத்ஸம: 6

(இ - ள்.) பிராமணன் மகாபாதகம் உபபாதகம் செய்தவர்களோடு ஐந்து நாளாவது பத்துநாளாவது பன்னிரண்டு நாளாவது அரைமாதமாவது ஒருமாத மாவது இரண்டுமாதமாவது ஆறுமாதமாவது ஒருவருஷ மாவது கூடினுல் பாவியாகிருன். அதற்குமேல் கூடினுல் அவனுக்கு சமமாகிருன்.

த்ரிராத்ரம்ப்ரதமேபக்ஷேத்விதீயேக்ருச்ரமாசரேத்
த்ரிதீயேசைவபக்ஷேது க்ருச்ரம்ஸாந்தபநம்சரேத்
சதுர்தேதசராத்ரம்ஸ்யாத்பராக:பஞ்சமேமத:
குர்யாச்சாந்த்ராயணம்ஷஷ்டே ஸப்தமேத்வைந்தவத் வயம்
ஸுத்யர்தமஷ்டமே சைவ ஷண்மாஸாந்க்ருச்ரமாசரேத்
பக்ஷஸங்க்யாப்ரமாணேந ஸுவர்ணுந்யபிதக்ஷிணு: 7

(இ - ள்.) பதிதஸம்ஸர்க்கமென்று மேலேசொன்ன ஐந்துநாளைக்கு மூன்றுநாளைய விருதத்தையும் இரண்டா வதான பத்து நாளைக்கு ஒரு கிருச்ரத்தையும் மூன்ருவ தான பனிரெண்டு நாளைக்கு ஸாந்தபன கிருச்ரத்தையும் நான்காவதான வொருபக்ஷத்திற்கு பத்துநாளைய கிருச் ரத்தையும் ஐந்தாவதான வொருமாதத்திற்கு பராக கிருச்ரத்தையும் ஆருவதான விரண்டுமாதத்திற்கு சரந் திராயணத்தையும் ஏழாவதான ஆறுமாதத்திற்கு ஐந்தவ

மென்னும் சாந்திராயண விரதமிரண்டையும் எட்டாவதான வொருவருஷத்திற்கு ஆறுமாத கிருச்ரத்தையும் செய்து ஒவ்வொரு பக்ஷங்களுக்கும் ஒருபொன் இரண்டாவது பக்ஷத்துக்கு இரண்டுபொன் இவ்வண்ணமாக முறையே தானம் செய்யவேண்டும்.

ருதுஸ்நாதா துயாநாரீ பர்தாரம்நோபஸர்பதி
ஸாம்ருதாநரகம்யாதி வை தவ்யம்சபுந:புந:
ருதுஸ்நாதாம் துயோபார்யாம் ஸந்நிதௌநோபகச்சதி
கோராயாம்ப்ருணஹத்யாயாம் யுஜ்யதேநாத்ரஸம்சய:
தரித்ரம்வ்யாதிதம்மூர்கம் பர்தாரம்யாவமந்யதே
ஸாஸுநீஜாயதேம்ருத்வா ஸூகரீசபுந:புந:
பத்யௌஜீவதியாநாரீ உபோஷ்யவ்ரதமாசரேத்
ஆயுஷ்யம்ஹரதேபர்து ஸ்ஸாநாரீ நரகம்வ்ரஜேத்
அப்ருஷ்ட்வாசைவபர்தாரம் யாநாரீகுருதேவ்ரதம்
ஸர்வம்தத்ராக்ஷஸாந்கச்சே தித்யேவம்மநுரப்ரவீத்
பாந்தவாநாம்ஸஜாதீநாம் துர்வ்ருத்தம்குருதேதுயா
கர்ப்பபாதம்சயாகுர்யா ந்நதாம்ஸம்பாஷயேத்க்வசித்
யத்பாபம்ப்ரஹ்மஹத்யாயா த்விகுணம்கர்பபாதநே
ப்ராயஸ்சித்தம்நதஸ்யாஸ்தி தஸ்யாஸ்தயாகோவிதீயதே
நகார்யமாவஸத்யேந நாக்நிஹோத்ரேணவாபுந:
ஸபவேத்கர்மசண்டாலோயஸ்துதர்மபராங்முக: 8

(இ - ள்.) யாதொரு ஸ்திரீ ருதுஸ்நானம்செய்தநாள் துடங்கிபதினறு தினங்களுக்குள் பர்த்தாவை யணுகாமலிருக்கிறளோ அவள் மரித்தபின் நரகத்தை யடைகிறது மன்றி பிறகு அடிக்கடி விதவையாகவும் பிறக்கிருள். எவன் வியாதியற்றவனய் சமீபத்திலிருந்து கொண்டு ருதுஸ்நானம் செய்தபாரியையை யணுகவில்லையோ அவன் பயங்கரமான சிசுஹத்தியில் சேருகிருன். இதில் ஸம்சயமில்லை எந்த ஸ்திரீ தரித்திரனுகவும் வியாதிகிரஸ்தனுகவும் தெரியாதவனுகவுமிருக்கிற பர்த்தாவை யவமானம் செய்கிருளோ அவள் மரித்தபின் நாயாகவாவது பன்றியாகவாவது அடிக்கடி பிறக்கிருள் எந்த ஸ்திரீ பர்த்தா பிழைத்திருக்கையில் உபவாஸமிருக்கிருளோ அவள் பர்த்தாவின் ஆயுளை அபகரிக்கிருள். நரகத்தையு

மடைகிருள். எந்த ஸ்திரீ தன்பர்த்தாவைக்கேளாமல் விரதங்களைச் செய்கிருளோ அவையெல்லாம் ராக்ஷஸர்களைச் சேருமென்று மநுசொன்னர். எவள் பந்துக்கள் ஞாதிகளிவர்களிடத்தில் த்வேஷம்செய்கிருளோ எவள் கர்ப்பத்தையழிக்கிருளோ அவ்விருவரோடு ஒரிடத்திலும் பேசக்கூடாது. பிர்ம்மகத்தியில் எவ்வளவு பாப முண்டோ அவ்வளவுக்கு இரண்டுபங்கு கர்ப்பத்தையழித்ததிலுண்டு, அதற்குப் பிராயச்சித்தமில்லை. அப்படிப்பட்டவளை விடவேண்டியது. எவன் வேதத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களைத் தவிர்ந்து ஐந்தாவதான ஆவஸத்யமென்கிற வக்னியாலும் அக்னிஹோத்ரத்தாலும் காரியமற்றவனு யிருக்கிருனே அவன்கருமத்தால் சண்டாளனுவன்.

வர்ஷவாதாஹ்ருதம்பீஜம் யஸ்யக்ஷேத்ரேப்ரரோஹதி
ஸக்ஷேத்ரீலபதேபீஜம் நபீஜீபாகமர்ஹதி
தத்வத்பரஸ்த்ரியா:புத்ரௌ த்வௌஸம்ருதௌகுண்ட
கௌலபத்யௌஜீவதிகுண்டஸ்து ம்ருதேபர் [கோல
தரீகோலக: 9

(இ - ள்.) வெள்ளம் காற்று இவைகளால் ஒருவனுடைய விரை மற்றொருவனுடைய நிலத்தில் முளைத்தால் அதின்பயனை நிலக்காரன் அடைகிருனேயொழிய விரையை யுடையவன் அடைகிறதில்லை. அத்தன்மையாக பரஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களை யுண்டாக்கினவ னடையான் குண்டன்கோளகன்என்று இருவகைப்பட்டவர்கள் அவர்களில்குண்டன் பதிஜீவித்திருக்கையில் அன்னியனுக்குப் பிறந்தவன். மற்றவன் பதியிறந்தபிறகு ஜனித்தவன்.

ஔரஸ:க்ஷேத்ரஜஸ்சைவ தத்த:க்ருத்ரிமகஸ்ஸுத; 10

(இ - ள்.) ஔரஸன் க்ஷேத்திரஜன் தத்தன் கிருத்திரிமன் என்று பிள்ளைகள் நாலுவகையாம்.

தத்யாந்மாதாபிதாவாபி ஸபுத்ரோதத்தகஸ்ம்ருத: 11

(இ - ள்.) மாதாவாகிலும் பிதாவாகிலும் பிள்ளையில்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டவன் தத்தன் என்னப் படுகிருன்.

பரிவித்தி:பரிவேத்தாச யயாசபரிவித்யதே
ஸர்வேதேநரகம்யாந்தி தாத்ருயாஜகபஞ்சமா:
த்வௌக்ருச்ரௌபரிவித்தேஸ்ஸ்யா கந்யாயா:க்ருச்ரஏவச
க்ருச்ராதிக்ருச்ரோதாதுஸ்சஹோதாசாந்த்
ராயணம்சரேத் 12

(இ - ள்.) மூத்தவன் கலியாணமாகாதிருக்க இளைய வன் கலியாணம்செய்துகொண்டால் மூத்தவன் பரிவித்தி யென்றும் இளையவன் பரிவேத்தாவென்றும் விவாகம் செய்யப்பட்ட பெண்பரிவேதினியென்றும் அந்தப்பெண் கொடுத்தவன் பரி தாதாவென்றும் விவாகம் செய்வித்த புரோஹிதன் பரியஷ்டாவென்றும் பெயர் பெறுவர்கள். இவர்களைவரும் நரகமடைவார்கள். பரிவித்திக்கு இரண்டு கிருச்ரமும் பரிவேதினிக்கு ஒரு கிருச்ரமும் பரிவேத்தா வுக்குகிருச்ராதி கிருச்ரமும் பரியஷ்டாவுக்கு சாந்த்ராயண மும்பரிவேத்தாவுக்கு பரிவித்தியைப்போலவும் பிராயச் சித்தம் செய்யவேண்டும்.

குப்ஜவாமநஷண்டேஷுகத்கதேஷுஜடேஷுச
ஜாத்யந்தேபதிதேமூகேந தோஷ:பரிவேதநே 13

(இ - ள்.) கூனன் குள்ளன் நபும்ஸகன் குழறும் நாக்குள்ளவன் எக்காரியமும் செய்யத்தகாத ஜடன் பிறவிக்குருடன் செவிடன் ஊமை இவர்களுக்கு பரிவே தன தோஷம் கிடையாது.

பித்ருவ்யபுத்ரஸ்ஸாபத்ந்ய:பரநாரீஸுதஸ்ததா
தாராக்நிஹோத்ரஸம்யோகேநதோஷ:பரிவேதநே 14

(இ - ள்.) சிறியதகப்பன்பிள்ளை மாற்றுந்தாயார் பிள்ளை தத்துபுகுந்தபிள்ளை இவர்கள் மூத்தவர்களாயிருந் தாலும் தான்கலியாணம் அக்நிஹோத்ரம் இவைகள் செய்துகொண்டாலும் பரிவேதனதோஷமில்லை.

ஜ்யேஷ்டோப்ராதாயதாதிஷ்டே தாதாநம்நைவகாரயேத்
அநுஜ்ஞாதஸ்துகுர்வீத ஸங்கஸ்யவசநம்யதா 15

(இ - ள்.) மூத்ததமயன் அக்நியாதானம் செய்யாம லிருந்தால் அவனுடைய அனுமதியில்லாமல் இளையவ

தலிகம் செய்யக்கூடாது. பெரியவ னனுமதி பெற்று இளையவன் சங்கருடைய வசனத்தின்படியே ஆதானம் செய்யலாம்.

நஷ்டேம்ருதேப்ரவ்ரஜிதே க்லீபேசபதிதேபதெள
பஞ்சஸ்வாபத்ஸுநாரீணும் பதிரந்யோவிதீயதே 16

(இ - ள்.) ஓடிப்போதல் மரித்தல் சன்னியாசியாகுதல் நபும்ஸகஞக விருத்தல் பதிதனுகுதல் என்கிற ஏதேனு மொன்றை பதியடைந்தால் இந்த ஐந்து ஆபத்துக்களில் ஸ்திரீகள் வேறு புருஷனைக் கலியாணம் செய்து கொள்ள லாம். இது யுகாந்தர விஷயம்

ம்ருதேபர் தரியாநாரீ ப்ரஹ்மசர்யேவ்யவஸ்திதா
ஸாம்ருதாலபதேஸ்வர்கம் யதாதேப்ரஹ்மசாரிண: 17

(இ - ள்.) எந்த ஸ்திரீ தன்பர்த்தா இறந்தபின் பிர்ம்ம சர்யத்தை யனுஷ்டிக்கிருளோ, அவளிறந்தபின் பிர்ம்ம சாரிகளைப்போல் சுவர்க்கத்தை யடைகிருள்.

திஸ்ர.கோட்யோர்தகோடீச யாநிலோமாநிமாநுஷே
தாவத்காலம்வஸேத்ஸ்வர்கே பர்தாரம்யாநுகச்சதி 18

(இ - ள்.) எந்த ஸ்திரீ தன் பர்த்தாவுடன் அனுக மனம் செய்கிருளோ, அவள் மனுஷியனுடைய தேகத்தி லிருக்கிற மூன்றரை கோடிமயிர் அளவானகாலம் சுவர்க் கத்தில் வசிக்கிருள்.

வ்யாளக்ராஹீயதாவ்யாளம் பலாதுத்தரதேபிலாத்
ஏவம்ஸ்த்ரிபதிமுத்த்ருத்ய தேநைவஸஹமோததே 19

(இ - ள்.) பாம்புபிடிப்பவன் எப்படி தன்மந்திர பலத்தால் புத்திலிருந்து பாம்பைப் பிடிக்கிருனே, அப் படியே பதிவிரதையான ஸ்திரீ தன்பர்த்தாவை நரகத்திற் போகாமல் தடுத்து அவனுடன் கூடி சந்தோஷமடைகிருள்

நாலாவது அத்தியாயம் முற்றிற்று

## ஐந்தாவது அத்தியாயம்

வ்ருகஸ்வாநஸ்ருகாலாத்யை ர்தஷ்டோயஸ்துத் விஜோத்தம:
ஸ்நாத்வா ஜபேத்ஸகாயத்ரீம் பவித்ராம்வேதமாதரம் 20

(இ - ள்.) செந்நாய் நாய் குள்ளநரிமுதலான பிராணிகளால் எந்த பிராமணன் கடிக்கப்படுகிருனே, அவன் ஸ்நானம்செய்து பரிசுத்தமாயும் வேதங்களுக்கு மாதாவுமான காயத்ரியை ஜபிக்கக்கடவன்.

கவாம்ஸ்ருங்கோதகேஸ்நாநம்மஹாநத்யாஸ்துஸங்கமே
ஸமுத்ரதர்ஸநாத்வாபி ஸுநாதஷ்டஸ்ஸுசிர்பவேத் 21

(இ - ள்.) நாயால் கடிக்கப்பட்டவன் மாட்டுக்கொம்பின் ஜலத்திலும் மகாநதியின் சங்கமத்திலும் ஸ்நானம் செய்தும் சமுத்திரத்தைப் பார்த்தாகிலும் சுத்தனுகிருன்.

வேதவித்யாவ்ரதஸ்நாத ஸ்ஸுநாதஷ்டோத்விஜோயதி
ஸஹிரண்யோதகேஸ்நாத்வா க்ருதம்ப்ராஸ்யவிஸுத்யதி

(இ - ள்) வேதாத்யயனம்செய்து விருதஸ்நானம் செய்த பிராமணன் நாயால் கடிபுண்டால் ஸ்வர்ணத்தோடு கூடின ஜலத்தில் ஸ்நானம்செய்து நெய்யை சாப்பிட்டு பிறகு சுத்தனுகிருன்.

ஸவ்ரதஸ்துஸுநாதஷ்டோ யஸ்த்ரிராத்ரமுபரவஸேத்
க்ருதம்குஸோதகம்பீத்வா வ்ரதஸேஷம்ஸமாபயேத் 23

(இ - ள்) ஓர் விரதத்தை யனுஷ்டித்துக்கொண்டிருக்கையில் நாயால்கடிப்புண்டாள் மூன்றுநாளுபவாஸமிருந்து நெய்யையும் தர்ப்பஜலத்தையும் சாப்பிட்டு மீதி விரதத்தை முடிக்கக்கடவன்.

அவ்ரதஸ்ஸவ்ரதோவாபி ஸுநாதஷ்டோபவேத்விஜ:
ப்ரணிபாதாத்பவேத்பூதோ விப்ரைஸ்சக்ஷுர்நிரீக்ஷித: 24

(இ - ள்.) விரதமில்லாதவனுமுள்ளவனும் நாயினுல் கடிப்புண்டவன் பிராமணர்களைச் சேவித்து அவர்களால் பார்க்கப்பட்டவனுய் பிராயச்சித்தாதிகாரியாகிருன்.

ஸுநாக்ராதாவலீடஸ்ய நகைர்விலிகிதஸ்யச
அத்பி:ப்ரக்ஷாலநம்ப்ரோக்த மக்நிநாபூரிதாபிதம் 25

(இ - ள்.) நாயால் மோரப்பட்டும் நக்கப்பட்டும் நகத்தால் பூரபட்டுமிருப்பவன் அந்தவிடத்தை ஜலத்திஞலலம்பி நெருப்பில் காய்ச்சிஞல் சுத்தஞகிருன்.

ஸுநாதுப்ராஹ்மணீதஷ்டா ஜம்புகேநவ்ருகேணவா
உதிதம்க்ரஹநக்ஷத்ரம் த்ருஷ்ட்வாஸத்யஸ்ஸுசிர்
பவேத் 26

(இ - ள்.) பிராமண ஸ்திரீயானவள் நாய் குள்ளநரி செந்நாய் முதலியவைகளால் கடிக்கப்பட்டால் அப்போது உதிக்கிற சந்திரன் முதலிய கிரஹங்களேயும் நக்ஷத்திரங்களேயும் பார்த்தால் சுத்தையாகிருள்.

க்ருஷ்ணபக்ஷேயதாஸோமோ நத்ருஸ்யேதகதாசந
யாந்திஸம்வ்ரஜதேஸோம ஸ்தாம்திஸம்வாவலோ
கயேத் 27

(இ - ள்.) ஒருக்கால் கிருஷ்ணபக்ஷத்தில் சந்திரன் தெரியாமல்போஞல் சந்திரன் எந்ததிக்கிலிருக்கிருஞே. அந்ததிக்கையாவது பார்க்கவேண்டும்.

அஸத்ப்ராஹ்மணகேக்ராமே ஸுநாதஷ்டோத்வி
ஜோத்தம:
வ்ருஷம்ப்ரதக்ஷிணீக்ருத்ய ஸத்யஸ்நாத்வாஸு
சிர்பவேத் 28

(இ - ள்.) பிராமணரில்லாத ஊரில் பிராமணன் நாயால் கடிப்புண்டால் காளேயைப் பிரதக்ஷிணம்செய்து ஸ்நாநம் செய்து சுத்தஞகிருன்.

சண்டாலேநஸ்வபாகேந கோபிர்விப்ரைஹ்ரதோயதி
ஆஹிதாக்நிர்ம்ருதோ விப்ரோவிஷேஞத்மஹதோயதி
தஹேத்துபாஹ்மணம்விப்ரோலோகாக்நௌ
மந்த்ரவர்ஜிதம்
ஸ்ப்ருஷ்ட்வாவோட்வாசதக்த்வாச ஸபிண்டேஷுச
ஸர்வதா
ப்ராஜாபத்யம்சரேத்பஸ்சாத் விப்ராஞமநு
ஸாஸநாத் 29

(இ - ள்) சண்டாளனுலாவது சுவபாகனுலாவது பசுக்களாலாவது பிராமணர்களாலாவது ஒரு ஆஹிதாக்நியான பிராமணனிறந்தாலும் அல்லது விஷத்தால் தானே மரித்தாலும் அவனுடைய பங்காளிகளிலொருவன் அவனை லௌகிகாக்நியில் தகனம் செய்து மந்திரமில்லாமல் முடிக்கவேண்டும். அவனைத்தொட்டவனும் வகித்தவனும் கொளுத்தினவனும் பிராமணர் அனுமதியால் பிராஜாபத்யவிரதத்தைச் செய்யவேண்டும்.

தக்தாஸ்தீநிபுநக்ருஹ்பக்ஷீரை:ப்ரக்ஷாலயேத்விஜ:
புநர் தஹேத்ஸ்வாக்நிநாது ஸ்வமந்த்ரேணப்ருதக்ப்
ருதக் 30

(இ - ள்) முன்னே சொன்னபடி க்ருச்சிரம் செய்து பிறகு மறுபடியும் எலும்பைப் பாலினுலலம்பிமறுபடியும் தன்னக்நியால் மந்திரத்தோடு தகனம் செய்யவேண்டும்.

ஆஹிதாக்நிர் த்விஜ: கச்சித் ப்ரவஸங்காலசோதித:
தேஹநாஸமநுப்ராப்தஸ் தஸ்யாக்நிர்வஸதேக்ருஹே
ப்ரேதாக்நிஹோத்ரஸம்ஸ்க்கார ஸ்ரூயதாம்ருஷி
புங்கவா: 31

(இ - ள்.) ஆஹிதாக்நியானவொரு பிராமணன் தன் வீட்டில் அக்நியிருக்க தேசாந்திரம் போயிறந்தால் அவனுக்கு அக்நி ஸம்ஸ்காரத்தை, ஓ முனீச்வரர்களே சொல்லுகிறேன் கேளுங்கள்.

க்ருஷ்ணாஜிநம்ஸமாத்தீர்ய குஸைஸ்துபுருஷாக்ருதிம்
ஷட்சதாநிஸதம்சைவ பலாஸாநாம்சவ்ருந்தத:
சத்வாரிம்ஸச்சிரேதத்யா த்தஸகண்டேதுவிந்யஸேத்
பாஹுப்யாம்துஸதம்தத்யா தங்குளீஷுதசைவது
ஸதம்துஜகநேதத்யாத் த்விஸதம்தூதரேததா
தத்யாதஷ்டௌவ்ருஷணயோ: பஞ்ச மேட்ரேது
விந்யஸேத்
ஏகவிம்ஸதிமூருப்யாம் த்விஸதம்ஜாநுஜங்கயோ:
பாதாங்குளீஷுஷட்தத்யாத்யஜ்ஞபாத்ரம்ததோந்ய
ஸேத்

ஸம்யாம்ஸிஸ்நேவிநிக்ஷிப்ய முஷ்கயோரரணிம்ததா
ஜுஹூஞ்ச தக்ஷிணேஹஸ்தேவாமேது பப்ருதம்ந்யஸேத்
ப்ருஷ்டேது லூகலம்தத்யாத் ப்ருட்ஷேசமுஸலம்ததா
உரஸிக்ஷிப்யத்ருஷதம் தண்டுலாஜ்யதிலாந்முகே
ஸ்ரோத்ரேசப்ரோக்ஷணீம்தத்யா தாஜ்யஸ்தாலீம்துச
க்ஷுஷோ:
கர்ணேநேத்ரேமுகேக்ராணே ஹிரண்யஸகலம்ந்யஸேத்
அக்நிஹோத்ரோபகரண மஸேஷம்தத்ரநிக்ஷிபேத்
அஸௌஸ்வர்க்காயலோகாய ஸ்வாஹேத்யேகாஹு
திம்ந்யஸேத்
தத்யாத்புத்ரோதவாப்ராதா ப்யந்யோவாபிசபாந்தவ:
யதாதஹநஸம்ஸ்கார ஸ்ததாகார்யம்விசக்ஷணை: 32

(இ-ள்) மான்தோலைப்பரப்பி அதில் தர்ப்பங்களாலும் எழுநூறுகணக்குள்ள பலாசமிக்காம்புகளாலும் புருஷாகாரமாகச்செய்து முகத்தில் சமித்து நாற்பதும் கழுத்தில் பத்தும் கைகளுக்கு நூறும் விரல்களுக்கு பத்தும் அரைக்கு நூறும் வயிற்றிற்கு இருநூறும் விருஷணங்களுக்கு எட்டும் சிச்னத்துக்கு, ஐந்தும் துடைகளுக்கு இருபத்தொன்றும் முழங்கால் குதிரை முகங்களுக்கு இருநூறும் கால்விரல்களில் ஆறும் இவ்விதமாக புருஷனுருவாகக்கட்டி பிறகு அதின் அங்கங்களில் கீழ் வருமாறு யக்ய பாத்திரங்களை வைக்கவேண்டும். சிச்னத்தில் சம்யையும் விருஷணங்களில் அரணிக்கட்டையையும் வலக்கையில் ஜுஹு என்னும் பாத்திரத்தையும் இடது கையில் உபபிருத் என்கிற பாத்திரத்தையும் முதுகில் உரலையும் உலக்கையையும் மார்பில் அம்மியையும் வாயில் அரிசி நெய் எள்ளு இவைகளையும் காதில் புரோக்ஷணீபாத்திரத்தையும் கண்களில் ஆஜ்யஸ்தாலியென்கிற நெய் பாத்திரத்தையும் காதிலும் கண்ணிலும் மூக்கிலும் வாயிலும் சுவர்ணகலசத்தையும் ஆகிய இந்த அக்நிஹோத்ரக்கருவிகளை சொன்னவிடங்களில் வைக்கவேண்டியது. இவன் சுவர்க்கலோகத்தின் பொருட்டு ஸ்வாகா என்று ஒரு ஆகுதியையும்செய்யவேண்டும். இவ்வண்ணம் புத்திரனவது பிராதாவாகிலும் வேறு பந்துக்களாகிலும்

தெரிந்தவர்கள் எப்படித் தகனம் சொல்லியிருக்கிறதோ அப்படி செய்யவேண்டும்.

ஈத்ருசம் துவிதிம்குர்யாத் ப்ரஹ்மலோககதிர்த்ருவா
தஹந்தியேத்விஜாஸ்தம்து தேயாந்திபரமாம்கதிம் 33

(இ - ள்.) இவ்வண்ணமான விதியைமுடித்தால் அவனுக்கு பிர்ம்மலோகம் வருவது நிச்சயம். எந்த பிராமணன், இவ்விதமாக தகனம் செய்கிருனே அவன் உத்தம கதியையடைவான்.

அந்யதாகுர்வதேகர்ம த்வாத்மபுத்யாப்ரசோதிதா:
பவந்த்யல்பாயுஷஸ்தேவை பதந்திநரகேஸுசெள. 34

(இ - ள்) தன்புத்தி போனவழியாக எவர்கள் வேறு விதமாகச் செய்கிருர்களோ அவர்களுக்கு ஆயுசு குறைவதோடு அசுத்தமான நரகமும் வரும்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஆருவது அத்தியாயம்

அத:பரம்ப்ரவக்ஷ்யாமி ப்ராணிஹத்யாஸுநிஷ்க்ருதிம்
பராஸரேணபூர்வோக்தாம் மந்வர்தேபிசவிஸ்த்ருதாம் 35

(இ - ள்.) இதன்பிறகு விருத்தபராசரராலும் மனுவினுலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட பிராணிகளைக் கொல்வதாலுண்டான பாவங்களுக்குப் பிராயச்சித்தத்தைச் சொல்லுகிறேன்.

க்ரெளசஸாரஸஹம்ஸாம்ச்ச சக்ரவாகம்சகுட்குடம்
ஜாலபாதம்சஸரப மஹோராத்ரேணஸுத்யதி. 36

(இ - ள்.) க்ரெளஞ்சம் - வண்டாழ்வான் - ஹம்சம் - சக்ரவாகம் - கோழி-வாத்து - சரபம், இவைகளைக்கொன்ருல்-ஒரு நாளுபவாஸ மிருந்தால் சுத்தியுண்டாகும்.

பலாகடிட்டிபெளவாபி ஸுகபாராவதாவபி
அஹிநக்ரவிகாதீச ஸுத்பதேநக்தபோஜநரத் 37

(இ - ள்.) நாரை-சிறுகுருவி கிளி-மாடப்புரு-பாம்பு-முதலி இவைகளைக் கொன்றவன், பகலில்மாத்திர முபவாஸமிருப்பதால் சுத்தனுகிறுன்.

வ்ருககாககபோதாநாம் ஸாரிதித்திரிகாதுக:
அந்தர்ஜலஉபேஸந்த்யே ப்ராணுயாமேநஸுத்யதி 38

(இ - ள்) சென்னய்-காகம்-புரு பெண்கிளி–தித்திரி–இவைகளைக் கொன்றவன், இரண்டு சந்திகளிலும் ஜலத்தின் நடுவிலிருந்து பிராணுயாமத்தைச் செய்வதால் சுத்தனுகிறுன்.

த்ருக்ரஸ்யேநஸஸாதாநா முலுகஸ்யசகாதுக:
அபக்வாஸீதிநம்திஷ்டேத்த்ரிகாலம்மாருதாஸந: 39

(இ - ள் ) கழுகு-பருந்து-ராசாளி-கோட்டான் இவைகளைக் கொன்றவன் ஒருதினம் பாகம்செய்யப்படாததாக புசித்து ஒற்றைநாள் உபவாஸமிருந்து சுத்தனுகிறுன்.

வல்குலீடிட்டிபாநாம்ச கோகிலாகஞ்ஜரீடகே
லாவிகாரக்தபக்ஷேஷு ஸுத்யதேநக்தபோஜநாத் 40

(இ - ள்.) வலகுலி யென்னும்பக்ஷி-மீன்குத்தி-குயில்-வலியன்-லாவிகைஎன்கிறபக்ஷி-கருடபக்ஷி. இவைகளைக் கொன்றவன் பகலில் உபவாஸமிருந்தால் சுத்தனுகிறுன்.

காரண்டவசகோராணும்பிங்கலாகுரரஸ்யச
பாரத்வாஜாதிகம்ஹத்வாஸிவம்பூஜ்யவிஸுத்யதி 41

(இ - ள்.) நீர்காகை-சகோரம்-பெண்கோட்டான்-அன்றில்பக்ஷி-செம்போத்து இவைகளைக் கொன்றவன் சிவனைப் பூசித்தால் சுத்தனுகிறுன்.

பேருண்டசாஷபாஸாம்ஸ்சபாராவதகபிஞ்ஜலௌ
பக்ஷிணும்சைவஸர்வேஷா மஹோராத்ரமபோஜநம் 42

(இ - ள்.) கண்டபேருண்டம் மரங்கொத்தி மணிப்புரு கபிஞ்சல்லென்னும்பக்ஷி, இவைகளையும் இதில் கண்டது தவிர வேறு பக்ஷிகளையும் கொன்றவன் ஒருதினமுபவாஸ மிருக்ககடவன்.

ஹத்வாமூஷகமார்ஜார ஸர்பாஜகரடுண்டுபாந்
க்ருஸரம்போஜயேக்விப்ராந் லோஹதண்டஸ்சதக்ஷிணு 43

(இ - ள்.) பெருச்சாளி - பூனை-சர்ப்பம்-மலைப்பாம்பு-தண்ணீர்ப்பாம்பு இவைகளைக் கொன்றவன் எள் பயறு இவைகளோடு கூடின அன்னத்தை பிராமணர்களுக்கிட்டு எகுதடியை தக்ஷிணையாகக் கொடுத்தால் சுத்தனுகிறுன்.

ஸிம்ஸுமாரம்ததாகோதாம் ஹத்வாகூர்மம்சஸல்யகம்
வ்ருந்தாகபலபக்ஷிசா ப்யஹோராத்ரேணஸுத்யதி 44

(இ - ள்.) முதலை-உடும்பு-ஆமை சல்லியமென்கிற மத்ஸ்யம் முள்ளம்பன்றி, இவைகளைக் கொன்றவன் ஒரு தினம் கத்திரிப்பழத்தை சாப்பிட்டு உபவாஸமிருந்து பிறகு சுத்தனுகிறுன்.

வ்ருகஜம்புகருக்ஷாணும்தரக்ஷுஸ்வாநகாதுக:
திலப்ரஸ்தம்த்விஜேதத்யாத்வாயுபக்ஷோதிநத்ரயம் 45

(இ - ள்.) செந்நாய் - குள்ளநரி - கரடிசிவிங்கி - நாய் இவைகளைக் கொன்றவன் மூன்றுநாளுபவாஸமிருந்து ஒருபடிஎள்தானம்செய்து பிறகு சுத்தனுகிறுன்.

கஜஸ்யசதுரங்கஸ்ய மஹிஷோஸ்ட்ரநிபாதநே
ப்ராயச்சித்தமஹோராத்ரம்த்ரிசந்த்யமவகாஹநம் 46

[இ - ள்.) யானை - குதிரை - எருமைக்கடா - ஒட்டை இவைகளைக் கொன்றவன் ஒருதினம் மூன்றுகாலம் ஸ்நாநம்செய்தால் சுத்தனுகிறுன்.

குரங்கம்வாநரம்ஸிம்ஹம் சித்ரம்வ்யாக்ரம்துகாதயந்
ஸுத்யதேஸத்ரிராத்ரேண விப்ராணும்தர்பணேநச 47

(இ - ள்.) மான் குரங்கு சிங்கம் வரிவேங்கை இவைகளைக் கொன்றுல் மூன்றுநாள் உபவாஸமும் பிராமண ஸந்தர்ப்பணமும் செய்து பிறகு சுத்தியடைகிறுன்..

ம்ருகரோஹித்வராஹாணாமஜாபஸ்தஸ்யகாதுக:
அபாலக்ருஷ்டமஸ்நீயாதஹோராத்ரமுபோஷ்யஸ: 48

(இ - ள்.) மான்சாதிகள் ஒருவகைப்பன்றி சண்டைக் கிடா பெண் ஆடு இவைகளைக் கொன்றவன் ஒருதின முபவாஸமிருந்து உழுதுவிளையாத நெல்லைப் புசித்தால் சுத்தனாகிறான்.

ஏவம்சதுஷ்பதாநாம்ச ஸர்வேஸாம்வநசாரிணாம்
அஹோராத்ரோஷிதஸ்திஷ்டந்ஜபந்வைஜாதவேதசம் 49

(இ - ள்.) கீழ் சொல்லப்பட்டமிருகங்கள் தவிர மற்ற காட்டு மிருகங்களைக்கொன்றவன் ஒருதினமுபவாஸமிருந்துஜாதவேதஸமென்கிற மந்திரஜபத்தைச் செய்ய வேண்டும்.

ஸில்பிநம்காருகம்ஸூத்ரம் ஸ்த்ரியம்வாயஸ்துகாதயேத்
ப்ராஜாபத்யத்வயம்க்ருத்வா வ்ருஷைகாதஸதக்ஷிணா 50

(இ - ள்.) சித்திரம் எழுதுகிறவன், வேலைக்காரன் சூத்திரன், ஸ்திரீ இவர்களைக் கொன்றவன் இரண்டு பிராஜாபத்திய கிருச்ரம் செய்து பதினொன்றுகாளைகளைத் தானம் செய்தால் சுத்தனாகிறான்.

வைஸ்யம்வாக்ஷத்ரியம்வாபிநிர்த்தோஷம்யோபிபாதயேத்
ஸோதிக்ருச்ரத்வயம்குர்யாத் கோவிம்சத்
தக்ஷிணம்ததத் 51

(இ - ள்.) எவன் தோஷமில்லாத வைச்யனையாவது க்ஷத்ரியனையாவது கொல்லுகிறானோ, அவன் இருபது கோதானம் செய்து இரண்டு அதிகிருச்ரம் செய்ய வேண்டும்.

வைஸ்யம்ஸூத்ரம்க்ரியாஸக்தம்விகர்மஸ்தம்த்வி
ஜோத்தமம்
ஹத்வாசாந்த்ரர்யணம்தஸ்யத்ரிம்ஸத்காச்சைவ
தக்ஷிணம் 52

(இ - ள்.) தனது கர்மத்திலிருக்கும் வைச்யன்-சூத்திரன் - தன்கர்மத்தைவிட்ட பிராமணன் இவர்களைக் கொன்றால் முப்பது கோதானமும் சாந்திராயணமும் செய்யவேண்டும்.

சண்டாலம்ஹதவாங்கஸ்சித் ப்ராஹ்மணோ யதிகம்சந
ப்ராஜாபத்யம்சரேத்க்ருச்ரம் கோத்வயம்த க்ஷிணும்ததத்
க்ஷத்ரியேணுபிவைஸ்யேநஸூத்ரேணைவே தரேணவா
சண்டாலஸ்யவதேப்ராப்தே க்ருச்ரார்தே நவிஸுத்யதி 53

(இ - ள்.) பிராமணன் ஒரு சண்டாளனைக்கொன்ருல் அவன் பிராஜாபத்திய கிருச்ரத்தைச் செய்து இரண்டு கோதானம் செய்யவேண்டும். க்ஷத்ரியன் அல்லது வைசியன் அல்லது சூத்திரன், மற்று யாராகிலும் சண்டாளனைக் கொன்ருல் அரைகிருச்ரம்செய்தால் சுத்தனுகிருன்.

சோரஸ்வபாகஸ்சண்டாலோ விப்ரேணுபிஹதோயதி
அஹோராத்ரோஷிதஸ்நாத்வா பஞ்சகவ்யேநஸுத்யதி 54

(இ - ள்.) சண்டாளன் சக்கிலி இவர்கள் திருடனுக வந்தால் அவர்களைப் பிராமணன் கொன்ருல் ஒருதினம் உபவாஸமிருந்து ஸ்நானம்செய்து பஞ்சகவ்யம் சாப்பிட்டு சுத்தியடைகிருன்.

ஸ்வபாகம்வாபிசண்டாளம் விப்ரஸ்ஸம்பாஷதேயதி
த்விஜைஸ்ஸம்பாஷணம்குர்யாத் ஸாவித்ரீந்துஸக்ருஜ்ஜ
பேத் 55

(இ - ள்.) சக்கிலி - சண்டாளன் இவர்களோடு பிராமணன் பேசினல் பிறகு பிராமணர்களோடு பேசியும் காயத்ரியை ஒரு தரம் ஜபித்து சுத்தனுகிருன்.

சண்டாளைஸ்ஸஹஸுத்தந்து த்ரிராத்ரமுபவாஸயேத்
சண்டாளைகபதங்கத்வா காயத்ரீஸ்மரணுச்சுசி: 56

(இ - ள்.) சண்டாளனுடன் தூங்கினவனுக்கு மூன்று நாளுபவாஸத்தை விதிக்க வேண்டும். சண்டாளனுடன் வழிநடந்தவன் காயத்ரியை ஸ்மரித்தால் சுத்தனுகிருன்.

சண்டாளதர்ஸநேஸத்ய ஆதித்யமவலோகயேத்
சண்டாளஸ்பர்சநேசைவ ஸசேலம்ஸ்நாநமாசரேத் 57

(இ - ள்.) சண்டாளனைப் பார்த்த உடனே சூரியனைப் பார்க்க வேண்டும் அவன்பேரில் பட்டால் துணியுடன் ஸ்நானம் செய்ய வேண்டும்.

சண்டாளகாதவாபீஷு பீத்வாஸலிலமக்ரஜ:
அஞ்ஞாநாச்சைகபக்தேநத்வஹோராத்ரேண
ஸுத்யதி 58

(இ-ள்.) சண்டாளனால் வெட்டப்பட்ட நடவாபி களில் தெரியாமல் பிராமணன் தண்ணீர் குடித்தால் ஒரு வேளை போஜனம் செய்தும் தெரிந்து குடித்தால் ஒருதினம் போஜனமில்லாமலும் சுத்தனாகிறான்,

சண்டாளபாண்டஸம்ஸ்ப்ருஷ்டம் பித்வாகூபகதம்ஜலம்
கோமூத்ரயாவகாஹாரஸ்த்ரிராத்ராச்சுத்திமாப்
நுயாத் 59

(இ-ள்.) சண்டாளன் பாத்திரம்பட்ட கிணற்று ஜலத்தைக் குடித்த பிராமணன் மூன்றுநாள் கோமூத் திரத்தையும் யவ அரிசிமாவையும் புசித்து சுத்தனாகிறான்.

சண்டாளகடஸம்ஸ்த்ந்து யத்தோயம்பிபதித்விஜ:
தத்க்ஷணாத்க்ஷிபதேயஸ்து ப்ராஜாபத்யம்ஸமாசரேத்
யதிநோத்க்ஷிபதேதோயம் ஸரீரேயஸ்யஜீர்யதே
ப்ராஜாபத்யம்நதாதவ்யம் க்ருச்ரம்ஸாந்தபநஞ்சரேத் 60

(இ-ள்.) சண்டாளனுடைய பாண்டத்திலிருக்கும் ஜலத்தை குடித்த பிராமணன் பதிதனாவான். அந்த பிராமணன் பிராஜாபத்ய கிருச்ரத்தைச்செய்யக் கடவன். இத்த பிராயச்சித்தமானது அப்படி குடித்தஜலத்தை வாந்திபண்ணினால்தான். அந்த ஜலம் சரீரத்தில் ஜெரித்து விட்டால் ஸாந்தபன மென்கிற விருதத்தைச் செய்ய வேண்டும்.

சரேத்ஸாந்தபநம்விப்ர: ப்ராஜாபத்யமநந்தர:
ததர்தந்துசரேத்வைஸ்ய: பாதம்சூத்ரஸ்யதாபயேத் 61

(இ-ள்,) பிராமணன் குடித்தால் சாந்தபனமும் க்ஷத்திரியன் - பிராஜாபத்யமும் வைச்யன் அதில் பாதியும் சூத்திரன் அதில்காலும் பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

பாண்டஸ்தமந்த்யஜாநாந்து ஜலந்ததிபய:பிபேத்
ப்ராஹ்மண:க்ஷத்ரியோவைஸ்யஸ்ஸூத்ரஸ்சைவப்
ரமாதத:

ப்ரஹ்மகூர்சோபவாஸேந த்விஜாதீநாந் துநிஷ்க்ருதி:
ஸூத்ரஸ்யசோபவாஸேந ததாதாநேகஸக்தித: 62

(இ-ள்.) சண்டாளனுடைய பாத்திரத்திலிருக்கும் ஜலம் - தயிர் - பால் இவைகளை சாப்பிட மூன்றுவர்ணத்தாரும் பிரம்ம கூர்ச்ச பானத்துடன் உபவாஸமிருக்க வேண்டும். சூத்திரனுக்கு உபவாஸத்துடன் சக்திக்கீடாக தானம்செய்வது பிராயச்சித்தம்.

புங்க்தேஜ்ஞாநாத்விஜஸ்ரேஷ்டஸ் சண்டாளாந்
நங்கதஞ்சந
கோமூத்ரயாவகாஹாமோ தஸராத்ரேணஸுத்யதி 63

(இ-ள்.) அறியாமல் சண்டாளன் அன்னத்தைப் புசித்த பிராமணன் பத்துநாள் யவமென்கிற அரிசியை கோமூத்திரத்துடன் சாப்பிட்டு சுத்தனுகிறான்.

ஏகைகங்க்ராஸமஸ்நீயாத் கோமூத்ரம்யாவகஸ்யச
தஸாஹம்நியமஸ்தஸ்ய வ்ரதங்கர்தும்விநிர்திசேத் 64

(இ-ள்) மேற்சொன்னபடி அன்னத்தை புசித்தவன் கோமூத்திரத்துடன் யவஅரிசியை தினம் ஒன்றுக்கு ஒருகபளமாக நியமத்துடன் புசித்து விருதமிருக்க வேண்டும்.

அவிஜ்ஞாதஸ்துசண்டாளோ ய்ஸ்யவேஸ்மநிதிஷ்டதி
விஜ்ஞாதேதூபஸந்நஸ்ய த்விஜா:குர்வந்த்யநுக்ரஹம் 65

(இ-ள்.) சண்டாளன் தெரியாதவனாக ஒருவன் வீட்டிலிருந்து பிறகு தெரிந்தால் அவனும் பிராமணர்களை யடைந்தால் அவனை யவர்கள் அனுக்ரகிக்கிறார்கள்.

முநிவக்த்ரோத்கதாந்தர்மாந காயந்தோவேதபாரகா:
பதந்தமுத்தரேயுஸ்தம் தர்மஞ்ஞா:பாபஸங்கராத் 66

(இ-ள்.) சகல வேதங்களையும் ஓதின தார்மிகர்கள் மகரிஷிகளால் சொல்லப்பட்ட தர்மங்களைச் சொல்லி பதிதனைவனைபாவங்களின் கட்டங்களில் நின்றும் தூர விலக்கிவிடக் கடவர்கள்.

தத்நாசஸர்பிஷா சைவ க்ஷீரகோமூத்ரயாவகம்
புஞ்சீதஸஹப்ருத்யஸ்ச த்ரிஸந்த்யமவகாஹநம் 67

(இ - ள்,) இப்படி சண்டாளஸசுவாஸம் நேரிட்ட வீட்டிற் குடையவனும் அவனைச் சேர்ந்தவர்களும் மூன்று வேளையும் ஸ்நானம்செய்து தயிர் - நெய்-பால் கோமூத்ரம் யவஅரிசி இவைகளை புசிக்கக்கடவன்.

த்ர்யஹம்புஞ்ஜீததத்நாச த்ர்யஹம்புஞ்ஜீதஸர்பிஷா
த்ர்யஹம்க்ஷீரேணபுஞ்ஜீத ஏகைககேநதிநத்ரயம் 68

(இ - ள்.) மூன்றுநாள் தயிருடனும் மூன்றுநாள் நெய்யுடனும் மூன்றுநாள் பாலுடனும் இப்படி ஒவ்வொன்றோடு ஒவ்வொருநாளும் புசிக்கக்கடவன்.

பாவதுஷ்டம்நபுஞ்ஜீத நோச்சிஷ்டக்ரிமிதூஷிதம் 69

(இ - ள்,) மேற்சொன்ன போஜனத்தில் தனது எண்ணத்தில் புசிக்கத்தகாதென்று தோற்றினாலும் எச்சில் புழு இவைகளால் கெட்டதாயிருந்தாலும் அந்த அன்னத்தை புசிக்கக்கூடாது.

ததிக்ஷீரஸ்யத்ரிபலம் பலமேகம்க்ருதஸ்யது 70

(இ - ள்-) தயிர் - பால் இவைகள் மூன்று பலமும் நெய் ஒரு பலமும் இருக்கவேண்டும்.

பஸ்மநாதுபவேச்சுத்தி ருபயோஸ்தாம்ரகாம்ஸ்யயோ:
ஜலசௌசேநவஸ்த்ராணும் பரித்யாகேநம்ருந்மயே 71

(இ - ள்.) தாம்ரம் வெண்கலமிவைகளுக்கு சாம்பலாலும் வஸ்திரங்களுக்கு ஜலத்தாலும் மண்பாத்திரங்களை விடுவதாலும் சுத்தி. இதுவும் சண்டாளசம்மந்த விஷயம்.

குஸும்பகுடகார்பாஸ லவணந்தைலஸர்பிஷீ
த்வாரேக்ருத்வாதுதாந்யாநி தத்யாத்வேஸ்மநிபாவகம் 72

(இ - ள்) குசும்பம் - வெல்லம் - பஞ்சு - உப்பு - எண்ணெய் நெய் தானியங்கள் இவைகளை வாசற்படியில் வைத்து அந்த சண்டாளன் வசித்த வீட்டை நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டும்.

ஏவம்ஸுத்தஸ்தத:பஸ்சாத் குர்யாத்ப்ராஹ்
மண தர்பணம்
த்ரிம்ஸத்காவ்ருஷபைகஞ்ச தத்யாத்விப்ரேஷு
தக்ஷிணும் 73

(இ-ள்.) இந்தப் பிரகாரம் சுத்தனுன பிறகு பிராமண சந்தர்ப்பணம்செய்து முப்பது கோதானமும் ஒருவிருஷப தானமும் செய்து பிராமண தக்ஷிணை நடத்த வேண்டும்.

புநர்லேபநகாதேக ஹோமஜப்யேநஸுத்யதி
ஆதாரேணசவிப்ராணும் பூமிதோஷோநவித்யதே 74

(இ - ள்.) அந்த சண்டாளன் வசித்த வீட்டுமண்ணை அப்புறப்படுத்தி மணியாசனம் செய்து பிராமணர்களை புகச்செய்து சாந்திஹோமம் ஜபங்களைச்செய்தால் அந்த மண்சுத்தமாகிறது.மண்ணுக்குத் தனியாக தோஷமில்லை.

சண்டாளைஸ்ஸஹஸம்பர்கம் மாஸம்மாஸார்தமேவவா
கோமூத்ரயாவகாஹாரோ மாஸார்தேநவிஸுத்யதி 75

(இ - ள்.) ஒருமாதமாவது அரைமாதமாவது சண்டாளரோடு சகவாசம் நேர்ந்தால் யவஅரிசியினுலும் கோமூத்திரத்தாலும் அரைமாதம் போஜனம் செய்து சுத்தனுகிருன்.

ரஜகீசர்மகாரீச லுப்தகீவேணுஜீவநீ
சாதுர்வர்ண்யஸ்யசக்ரு ஹேத்வவிஜ்ஞாதாதுதிஷ்டதி
ஜ்ஞாத்வாதுநிஷ்க்ருதிங்குர்யாத் பூர்வோக்தஸ்யார்த
மேவது
க்ருஹதாஹம்நகுர்வீத ஸேஷம்ஸர்வம்ஸமாசரேத் 76

(இ - ள்.) வண்ணுத்தி சக்கிலியின் ஸ்திரி வேடர் ஸ்திரீ - கூடை கட்டி இவர்கள் நான்குவர்ணத்தாருடைய வீட்டிலிருந்தாலும் மேலே சண்டாளசகவாஸத்துக்குச் சொன்ன பிராயச்சித்தத்தில் பேர்பாதி செய்யவேண்டும். ஆனல் வீட்டைக்கொளுத்த வேண்டியதில்லை.

க்ருஹஸ்யாப்யந்தரங்கச்சேச் சண்டாளோயதிகஸ்யசித்
தமகாராத்விநிர்வாஸ்ய ம்ருத்பாண்டந்துவிஸர்ஜயேத்
ரஸபூர்ணந்துயத்பாண்டம் நத்யஜேத்துகதாசந
கோமயேந துஸம்மிஸ்ரைர்ஜலை: ப்ரக்ஷாளயேத்க்ருஹம்
ப்ராஹ்மணஸ்யவ்ரணத்வாரே பூயஸோணிதஸம்பவே
க்ரிமிருத்பத்யதேயஸ்ய ப்ராயஸ்சித்தங்கதம்பவேத் 77

(இ-ள்.) பிராமணனுடைய விருணத்தில் சீ ரத்த முண்டாய் பிறகு புழுவைத்ததேயானால் பிராயச்சித்தம் என்னவென்ருள்.

கவாம்மூத்ரபுரீஷேண ததிக்ஷீரேணஸர்விஷா
த்ர்யஹம்ஸ்நாத்வாசபீத்வாச க்ரிமிதுஷ்டஸ்ஸு
சிர்பவேத் 78

(இ-ள்.) பசுக்களுடைய மூத்திரம் சாணி தயிர் பால் நெய் இவைசேர்ந்த பஞ்சகவ்யத்தால் மூன்றுநாள் ஸ்நானம்செய்து அதையே சாப்பிடவேண்டும் அதினுல் சுத்தனுகிருன்.

க்ஷத்ரியோபிஸுவர்ணஸ்ய பஞ்சமாஷாந்ப்ரதாபயேத்
கோதக்ஷிணாந்துவைஸ்யஸ்யா ப்யுபவாஸம்விநிர்திஸேத் 79

(இ-ள்.) க்ஷத்திரியன் தனக்கு விருணத்தில் புழு வைத்தால் ஐந்து உளுந்து இடையுள்ள சுவர்ணதானமும் வைச்யன் கோதானமும்செய்து உபவாஸமிருக்க வேண்டும்.

ஸூத்ராணும்நோபவாஸஸ்யாச் சூத்ரோதா
நேநஸுத்யதி 80

(இ-ள்.) சூத்திரர்கள் உபவாஸத்தால் சுத்தியடை யார்கள் தானத்தினுலேயே சுத்தராவார்கள்.

அச்சித்ரமுதியத்வாக்யம் வதந்திக்ஷிதிதேவதா:
ப்ரணம்யசிரஸாக்ராஹ்ய மக்நிஷ்டோமபலம்ஹிதத் 81

(இ-ள்.) பிராமணர்கள் பரிபூர்ணம் என்று வார்த் தையைச் சொன்ஞர்களேயாஞல் அவ்வார்த்தையை வணங்கிக்கேட்க வேண்டும். அது அக்கிஷ்டோமவென்கிற யாகத்தின் பலமுள்ளது.

ஜபச்சித்ரந்தபச்சித்ரம் யச்சித்ரம்யஜ்ஞகர்மணி
ஸர்வம்பவதிநிச்சித்ரம் ப்ராஹ்மணைருபபாதிதம் 82

(இ-ள்.) ஜபம் தவம் யக்யம் இவைகளில் குறையுண்டாயினும் பிராமணர்கள் பூர்ணமாயிற்றென்றால் அவை பூர்ணமாய்விடும்.

வ்யாதிவ்யஸநிநிஸ்ராந்தே துர்பிக்ஷேடாமரேததா
உபவாஸோவ்ரதம்ஹோமோ த்விஜஸம்பாதிதாநிவை 83

(இ-ள்.) வியாதியினால் பீடிக்கப்பட்டவனும் சிரமத்தை யடைந்தவனும் அரசனாலுபத்ரவிக்கப்பட்டவனும் தான் செய்யவேண்டிய உபவாஸம் விருதம் ஹோமம் இவைகளை பிராமணர்களைக்கொண்டு செய்து கொள்ளலாம்.

அதவாப்ராஹ்மணாஸ்துஷ்டாஸ் ஸர்வங்குர்வந்த்
யநுக்ரஹம்
ஸர்வாந்காமாநபாப்நோதி த்விஜஸம்பாதிதைரிஹ 84

(இ-ள்.) இல்லாவிடில் சந்தோஷத்தையடைந்த பிராமணர்கள் அனுக்ரகித்தார்களேயானால் எல்லா இஷ்டத்தையும் அவர்களுடைய நல்வினையா லடைகிறார்கள்.

துர்பலேநுக்ரஹ: ப்ரோக்தஸ்ததாவைபாலவ்ருத்தயோ:
ததோந்யதாபவேத்தோஷஸ் தஸ்மாந்நாநுக்ர
ஹஸ்ம்ருத 85

(இ-ள்,) பலமில்லாதவனுக்கும் பாலனுக்கும் விருத்தனுக்கும் பிராமணர் அனுக்ரஹம் போரும். அப்படியல்லாதவர்கள் தன்காரியத்தைச் செய்யாவிடில் ப்ராயஸ்சித்தம் செய்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு அனுக்ரகம் பயன்படாது.

ஸ்நேஹாத்வாயதிவாலோபாத் பயாதஜ்ஞாநதோபிவா
குர்வந்த்யநுக்ரஹம்யேது தத்பாபந்தேஷுகச்சதி 86

(இ-ள்,) சினேகத்தாலாவது பொருளாசையாலாவது பயத்தாலாவது தெரியாமலாவது சக்தியுள்ளவனுக்கு எவன் அனுக்ரஹம் செய்கிறானோ; அப்படிசெய்தவனுக்கு அவனுடைய பாபம் சம்பவிக்கும்,

ஸரீரஸ்யாத்யயேப்ராப்தே வதந்திநியமந்துயே
மஹத்கார்யோபரோதேந நஸ்வஸ்தஸ்யகதாநச 87

(இ - ள்.) ஒருவனுடைய சரீரத்திற்குத் தீங்குநேரிடுகிற சமயத்தில் எவன் நியமத்தை விதிக்கிறானோ அவன் அவனுடைய அந்திம ஸ்மரணத்துக்குக் கெடுதிசெய்தபடியால் அவனுடைய பாபத்தையடைகிறான்.

ஸ்வஸ்தஸ்யமூடா:குர்வந்தி வதந்திநியமந்துயே
தேதஸ்யவிக்நகர்தார: பதந்திநரகேஸுசௌ 88

(இ-ள்.) சுகமாக விருப்பவனுக்கு பதிலாக எவர்கள் கருமங்களைச்செய்கிறார்களோஅவர்களும், சாஸ்திரமல்லாததை எவர்கள் விதியாகச் சொல்கிறார்களோ அவர்களும் நரகத்தில் விழுகிறார்கள்.

ஸஏவநியமந்த்யக்த்வா ப்ராஹ்மணம்யோவமந்யதே
வ்ருதா தஸ்யோபவாஸஸ்ஸயாந் நஸபுண்யேநயுஜ்யதே 89

(இ - ள்.) பிராமணனால் சொல்லப்பட்ட நியமத்தை விட்டு எவன்பிராமணனை யவமானம்பண்ணி வேறுவிதமாக நியமமிருக்கிறானோ அவனுடைய செய்கை வியர்த்தமானதுடன் புண்ணியமுமில்லை,

ஸஏவநியமோக்ராஹ்யோ யத்யேகோபிவதேத்விஜ:
குர்யாத்வாக்யம்த்விஜாநாந்து அந்யதாப்ரூண
ஹாபவேத் 90

(இ - ள்.) அனேகம் பிராமணர்கள் சொல்லுகிறபடி பிராயச்சித்தம் செய்யவேண்டும், அப்படி வெகுபேர் கிடையாதபக்ஷத்தில் ஒருபிராமணன் வார்த்தையின்படியாவது செய்யவேண்டும். வேறுவிதமாய்ச் செய்தால் பிரம்மகத்தி செய்தவனாவன்.

ப்ராஹ்மணா ஜங்கமந்தீர்த்தம் தீர்த்தபூதாஹிஸாதவ:
தேஷாம்வாக்யோதகேநைவ ஸுத்யந்திமலிநாஜநா: 91

(இ - ள்.) பிராமணர்கள் எங்கும் சஞ்சரிக்கிற தீர்த்தங்கள். சாதுக்கள் தீர்த்தமானவர்கள். அவர்களுடைய வாக்யமாகிற ஜலத்தால் அழுக்கடைந்த ஜனங்கள் சுத்தராகிறார்கள்.

ப்ராஹ்மணோயாநிபாஷந்தே மந்யந்தேதாநிதேவதா:
ஸர்வதேவமயோவிப்ரோ நதத்வசநமந்யதா 92

(இ-ள்.) பிராமணர்கள் எதைச்சொல்லுகிருர்களோ அதையேதேவதைகள் எண்ணுகிருர்கள். எல்லா தேவதைகளுடைய சுரூபம் பிராமணனுதலால் அவர்கள் வார்த்தை விருதாவல்ல.

உபவாஸோவ்ரதம்சைவ ஸ்நாநந்தீர்தம் ஜபஸ்தப:
விப்ரஸம்பாதிதம்யஸ்ய ஸம்பூர்ணம்தஸ்யதத்பலம் 93

(இ-ள்.) உபவாஸம்-விரதம் ஸ்நானம்-ஜபம்-தவம் இவைகளை யெவன் பிராமணர்களால்செய்து கொள்ளுகிருனே அவைகளுக்கு பயன் பூர்ணமாகும்.

அந்நாத்யேகீடஸம்யுக்தேமக்ஷிகாகேஸதூஷிதே
ததந்தராஸ்பருஸேச்சாபஸ்ததந்நம்பஸ்மநாஸ்
பருஸேத் 94

(இ-ள்.) அன்னம் முதலியவைகளில் புழு ஈ மயிர் இவைகளிருந்தால் அவைகளை யெடுத்துப்போட்டு அதில் ஜலத்தால் புரோக்ஷித்து சாம்பலையிட்டு உட்கொள்ள வேண்டும்.

புஞ்ஜாநச்சைவயோவிப்ர:பாதம்ஹஸ்தேநஸம்ஸ்ப்ருசேத்
ஸ்வமுச்சிஷ்டமஸெளபுங்தேயோபுங்தேபிந்நபாஜநே 95

(இ-ள்.) எந்த பிராமணன் சாப்பிட்டுக்கொண்டு இருக்குங் காலத்தில் இடது கையால் காலைத் தொடுகிருனே எவன் வேறு மாதிரியான இரண்டு இலைகளைச் சேர்த்துக்கொண்டு புசிக்கிருனே அவனும் தன் எச்சிலைத் தானே புசிக்கிருன்.

பாதுகஸ்தோநபுஞ்ஜீதபர்யங்கஸ்த: ஸ்திதோபிவா
ஸ்வாநசண்டாலத்ருக்சைவபோஜநம்பரிவர்ஜயேத் 96

(இ-ள்.) பாதக்குறட்டிலிருந்து கொண்டும் கட்டிலிலிருந்து கொண்டும் நின்றுகொண்டும் நாய் சண்டாள

னிவர்களைப்பார்த்துக் கொண்டும் சாப்பிடக்கூடாது அப்படி சாப்பிடும் சாப்பாட்டை விடவேண்டும்.

யதந்நம்ப்ரதிஷித்தம்ஸ்யாதந்நஸுத்திஸ்ததைவச
யதாபராஸரேணோக்தம்ததைவாஹம்வதாமிவ : 97

(இ-ள்.) எந்த அன்னம் விலக்கப்பட்டதோ அந்த அன்னங்களுக்கு எது சுத்தியோ அவைகளை யுங்களுக்கு நான் பராசரர் சொன்னபடி சொல்லுகிறேன்.

ஸ்ருதம்த்ரோணாடகந்யாந்நம்காகஸ்வாரோபகாதிதம்
கேநேதம்ஸுத்யதேசாந்நம்ப்ராஹ்மணேப்யோ
நிவேதயேத் 98

(இ-ள்.) துரோணம் ஆடகம் என்கிற பேருள்ள அளவுகொண்டநெல்லின் அன்னம் காகம் நாய் இவைகள் மோந்த அன்னம் இவைகள் எதினால் சுத்தமாகும்மென்று பிராமணர்களைக் கேட்கவேண்டும்.

காகஸ்வாநாவலீடம்துத்ரோணாந்நம்நபரித்யஜேத் 99

(இ-ள்.) காகம் நாய் நக்கின துரோணம் அளவுள்ள அன்னத்தைவிட வேண்டியதில்லை.

வேதவேதாங்கவித்விப்ரைர்தர்மஸாஸத்ரானுபாலகை :
ப்ரஸ்தத்வாத்ரிம்சதித்ரோண:ஸ்ம்ருதோத்விப்ரஸ்த
ஆடக: 100

(இ-ள்.) வேதம் வேதாங்கங்கள் தெரிந்த பிராமணர்களாலும் தர்மசாஸ்திரத்தைக் காப்பாற்றுகிறவர்களாலும் முப்பத்திரண்டுபடி கொண்டது துரோணமென்றும் இரண்டுபடி ஆடகமென்றும் நிச்சயிக்கப்பட்டது.

ததோத்ரோணாடகந்யாநம்ஸ்ருதிஸ்ம்ருதிவிதோவிது : 101

(இ-ள்.) ஆதலால் வேதம் ஸ்மிருதி தெரிந்தவர்கள் கீழ்ச்சொன்ன துரோணம் ஆடகம் அளவுடைய அன்னத்துக்கு தோஷமில்லையென்று அறிகிறார்கள்.

காகஸ்வாநாவலீடம் துகவாக்ராதம்கரேணவா
ஸ்வல்பமந்நம்த்யஜேத்விப்ரஸ்ஸுத்திர்த்ரோணே
கேபவேத் 102

(இ - ள்.) பிராமணன் காகம் நாய் இவைகளால் நக்கப்பட்டதும் பசு கழுதைகளால் முகரப்பட்டதும் சுவல்பமாயுமிருக்கிற அன்னத்தை விடக் கடவன், அதற்குமேல் துரோண அளவுள்ள அன்னமானுல் சுத்தியுண்டு.

அந்நஸ்யோத்தருத்யதந்மாத்ரம்யஸ்சலாலாஹதம்பவேத்
ஸுவர்ணோதகமப்யுக்ஷ்யஹுதாஸேநோபதாபயேத்
ஹுதாஸநேநஸம்ஸ்ப்ருஷ்டம்ஸுவர்ணஸலிலேநச
விப்ராணும்ப்ரஹ்மகோஷேண போஜ்யம்பவதி
தத்க்ஷணத் 103

(இ - ள்.) கீழ்ச்சொன்ன அளவுடைய அன்னத்தில் எவ்வளவு எச்சில்பட்டதோ அவ்வளவு மாத்திரத்தை யெடுத்தெறிந்து சுவர்ணத்தோடு கூடிய ஜலத்தைப் புரோக்ஷித்து அக்நியில் காட்டினுல் சுத்தமாகும். இப்படி சுவர்ணஜலத்தாலும் அக்னியாலும் சுத்தமாயும் பிராமணர்களால் ருக்குக்களால் ஜபிக்கப்பட்டதுமான கீழ்ச் சொன்ன அன்னம் சுத்தமாகும்.

ஸ்நேஹோவாகோரஸேவாபி தத்ரஸுத்தி: கதம்பவேத்
அல்பம்பரித்யஜேத்தத்ரஸ்நேஹஸ்யபசநேநச
அநலஜ்வாலயாஸுத்திர்கோரஸஸ்யவிதீயதே 104

(இ - ள்.) எண்ணெய் நெய் முதலியவற்றிக்கு சுத்தி எப்படி யென்னில்—வஸ்து அல்பமாயிருந்தால் அதை விடுவதாலும் அதிகமாயிருந்தால் எண்ணேயைக் காய்ச்சுவதாலும் பால்முதலியவற்றிக்கு அடுப்பில் தீயில் வைப்பதாலும் சுத்தியென்று விதிக்கப்படுகிறது,

ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

## ஏழாவது அத்தியாயம்

அதாதோத்ரவ்யஸுத்திஸ்துபராசரவசோயதா 105

(இ - ள்.) கீழேசொன்ன பிராயச்சித்தங்கள் திரவ்ய சுத்தியில்லாமல் பயன்படாதாகையால் முற்பட்ட பராசர வாக்கியத்தின்படி திரவ்யசுத்தி சொல்லப்படுகிறது.

தாரவாணும்துபாத்ராணும்தக்ஷணுச்சுத்திரிஷ்யதே 106

(இ - ள்.) சுருக் சுருவம் முதலிய மரப்பாத்திரங் களுக்கு அதிக அசுத்தியுண்டானுல் வாச்சிமுதலான ஆயுதத்தால் செதுக்கினுல் சுத்தியுண்டாகும்.

பஸ்மநாஸுத்யதேகாம்ஸ்யம்தாம்ரமாம்லேந
ஸுத்யதி 107

(இ - ள்.) வெண்கலப்பாத்திரங்கள் சாம்பலாலும் தாம்ரபாத்திரங்கள் புளியாலும் சுத்தமாகும்.

ரஜஸாஸுத்யதேநாரீவிகலம்யாநகச்சதி 108

(இ - ள்.) வியபிசாரியான ஸ்திரீ அவ்வகையால் கர்ப் பம் தரியாமலிருந்தால் மாஸருதுவினுல் சுத்தையாகிருள்.

நதீவேகேநஸுத்யேத லேபோயதிநத்ருஸ்யதே 109

(இ - ள்.) எந்தவிடத்தில் அசுத்தம் கண்ணில் புலப் படவில்லையோ அந்தவிடத்தில் நதியானது வேகத்தால் சுத்தமாகிறது.

வாபீகூபதடாகேஷுதூஷிதேஷுகதம்சந
உத்தருத்யவைகும்பஸதம்பஞ்சகவ்யேநஸுத்யதி 110

(இ - ள்.) நடவாவி கிணறு தடாகம் இவைகள் தோஷத்தையடைந்தால் நூறுகுடம் ஜலத்தை இறைப்ப தாலும் பஞ்சகவ்யத்தை யதில் சேர்ப்பதாலும் சுத்தமா கின்றன.

அஷ்டவர்ஷாபவேத்கௌரீநவவர்ஷாதுரோஹிணீ
தஸவர்ஷாபவேத்கந்யா அதஊர்வம்ரஜஸ்வலா 111

(இ - ள்.) எட்டுவயதுள்ள பெண் கௌரியென்றும் ஒன்பது வயது பெண் ரோகிணியென்றும் பத்து வயது பெண் கன்னிகை யென்றும் அதற்குமேல் ரஜஸ்வலை யென்றும் பெயர்பெறுவள்.

ப்ராப்தேதுத்வாதஸேவர்ஷேய:கந்யாம்நப்ரயச்சதி
மாஸிமாஸிசஜஸ்தஸ்யா: பிபந்திபிதரோநிஸம் 112

(இ - ள்.) பன்னிரண்டாவது வயதுவந்தபின் யாதொருவன் கன்னிகையை விவாகம்செய்து கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறானோ அவனுடைய பிதுர்க்கள் மாதந்தோறும் அந்தப் பெண்ணினுடைய ரஜஸ்ஸைப் பானம்செய்கிறார்கள்.

மாதாசைவபிதாசைவஜேஷ்டப்ராதாததைவச
த்ரயஸ்தேநரகம்யாந்தித்ருஷ்ட்வாகந்யாம்
ரஜஸ்வலாம் 113

(இ - ள்.) விவாகம்செய்து கொடுக்காமல் பெண் ருதுவானால் அந்தப் பெண்ணின் மாதாவும் பிதாவும் தமயனும் நரகத்தையடைகிறார்கள்.

யஸ்தாம்ஸமுத்வஹேத்கநாயம்ப்ராஹ்மணோமதமோஹித:
அஸம்பாஷ்யோஹ்யபாங்தேயஸ்ஸவிப்ரோ
வ்ருஷலீபதி: 114

(இ - ள்.) அப்படிப்பட்ட ருதுவான பெண்ணை மதத்தால் மோகித்த பிராமணன் கலியாணம்செய்து கொண்டால் அவனிடத்தில் பேசவுங்கூடாது. அவனைப் பங்கிதியில்வைக்கவுங்கூடாது அவன் விருஷலீபதி யென்று பெயர் பெறுவன்.

ய:கரோத்யேகராத்ரேணவ்ருஷளீஸேநவநம்த்விஜ:
ஸபைக்ஷபுக்ஜபந்நித்யம்த்ரிபிர்வஷைர்விஸுத்யதி 115

(இ - ள்,) எவன் ருதுவான பெண்ணை விவாகம் செய்து அவளுடன் ஒருதினம் சேர்கிருனே அவன் தினம் தோறும் பிச்சையிட்டுக்கொண்டு ஜபம்செய்து மூன்று வருஷமிருந்து சுத்தனுகிருன்.

அஸ்தம்கதேயதாஸூர்யே சண்டாலம்பதிதம்ஸ்த்ரியம்
ஸூதிகாஞ்சசவம்சைவகதம்சுத்திர்விதீயதே
ஜாதவேதஸ்ஸுவர்ணம்சஸோமமார்ககம்விலோக்யச
ப்ராஹ்மணுநுகதஸ்சைவஸ்நாநம் க்ருத்வாவிசுத்யதி 116

(இ-ள்.) சூர்யாஸ்தமனமானபின்பு சண்டாளனையும் பதிதனையும் பிரஸவித்த ஸ்திரியையும் சவத்தையும் தொட்டால் எப்படி சுத்தியென்ருல் அக்நியையும் சுவர்ணத்தையும் சந்திரன்வரும் வழியையும்பார்த்து பிராமணர்களால் அனுக்ஞை செய்யப்பட்டு ஸ்நானம்செய்து சுத்தனுகிருன்.

ஸ்ப்ருஷ்ட்வாரஜஸ்வலாநோந்யம்ப்ராஹ்மணீப்
ராஹ்மணீம்ததா
தாவத்திஷ்டேந்நிராஹாராத்ரிராத்ரேணைவசுத்யதி
ஸ்ப்ருஷ்ட்வாரஜஸ்வலாந்நோந்யம்ப்ராஹ்
மணீக்ஷத்ரியாந்ததா
அர்தக்ருச்ரம்சரேத்பூர்வாபாதமேகமநந்தரா
ஸ்பருஷ்ட்ரவாரஜஸ்வலாந்நோயம்ப்ராஹ்மணீவைஸ்ய
ஜாம்ததா
பாதஹீநம்சரேத்பூர்வாபாதமேகமநம்ததா
ஸ்பருஷ்ட்வாரஜஸ்வலாந்நோந்யம்ப்ராஹ்மணீசூத்ர
ஜாம்ததா
க்ருச்ரேணஸுத்யதேபூர்வாஸூத்ராதாநே
நஸுத்யதி 117

(இ - ள்.) ரஜஸ்வலையாயிருக்கிற பிராமணஸ்திரீ ரஜஸ்வலையான வேறு பிராமணஸ்திரீயைத் தொட்டால் மூன்று நாளும் ஆகாரமில்லாமலிருவருமிருக்கவேண்டும், அப்படியே பிராமண ஸ்திரி க்ஷத்திரிய ஸ்திரியைத் தொட்டால் பிராமணஸ்திரீ அரைகிருசிரமும் க்ஷத்திரியஸ்திரீ

கால்கிருசிரமும் செய்யவேண்டும். அப்படியே பிராமண ஸ்திரீ வைச்யஸ்திரீயைத் தொட்டால் பிராமணஸ்திரீ முக்கால்கிருசிரமும் வைச்யஸ்திரீ கால்கிருசிரமும் செய்ய வேண்டும். அப்படியே பிராமணஸ்திரீ சூத்திரஸ்திரீயைத் தொட்டால் பிராமணஸ்திரீ ஒருகிருசிரமும் சூத்திரஸ்திரீ தானமும் செய்யவேண்டும்.

ஸ்நாதா ரஜஸ்வலாயா துசதுர்தேஹநிஸுத்யதி
குர்யாத்ரஜோநிவ்ருத்தௌ துதைவபித்ர்யாதிகர்மச 118

(இ-ள்.) ரஜஸ்வலையான ஸ்திரீ நாலாவதுதினத்தில் ஸ்நானம்செய்யவேண்டியது. அன்றையதினத்தில் ரஜஸ் இல்லாமலிருந்தால் தேவகாரியத்தையும் பிதுர்காரியத்தையும் செய்யலாம்.

ரோகேணயத்ரஜ:ஸ்திரீணுமங்வம்ஹிப்ரவர்ததே
நாஸுசிஸ்ஸாததஸ்தேந தத்ஸாத்வைகாலிகம்மதம் 119

(இ-ள்.) எந்தஸ்திரீக்கு தினந்தோறும் ரோகத்தால் ரஜஸ்பெருகுகிறதோ அந்தஸ்திரீ அதினுல் அசுத்தையாகாள் அந்த ரஜஸ் அகாலத்திலுண்டானது.

ஸாத்வாசாராநதாவத்ஸ்யாத்ரஜோயாவத்ப்ரவர்ததே
ரஜோநிவ்ருத்தௌகம்யாஸ்த்ரீக்ஹெகர்மணி
சைவஷி 120

(இ-ள்.) ஸ்திரீக்கு ரஜஸ் எவ்வளவுகாலம் பெருகுகிறதோ அவ்வளவுகாலம் தேவகாரியம் முதலானதற்கு உபயோகப்படமாட்டாள் ரஜஸ் நீங்கினவுடன் பர்த்தாவைச் சேர்வதற்கும் கிருககார்யங்களுக்கு முபயோகப்படுவள்.

ப்ரதமேஹநிசண்டாலீ த்விதீயேப்ரஹ்மகாதிநீ
த்ருதீயேரஜகீப்ரோக்தாசதுர்தேஹநிஸுத்யதி 121

(இ-ள்.) ரஜஸ்வலையானவள் முதல்நாளில் சண்டாளஸ்திரீயாகவும் இரண்டாவதுநாளில் பிர்ம்மகத்தி செய்தவளாகவும் மூன்ருவதுநாளில் வண்ணரஸ்திரீயாகவும் சொல்லப்படுகிருள் நாலாவதுநாளில் சுத்தையாகிருள்.

ஆதுரேஸ்நாநஉத்பந்நேதஸக்ருத்வோஹ்யநாதுர:
ஸ்நாத்வாஸ்நாதவாஸ்ப்ருஸேதேநம்ததச்சுத்யேத்ஸ
ஆதுரக: 122

(இ-ள்.) ரஜஸ்வலையின் ஸ்பர்சம் முதலிய நிமுத்தங்களால் ஜ்வரம் முதலியவற்ருல் பீடிக்கப்பட்டவனுக்கு தீட்டு நேரிட்டால் ஸ்வஸ்தமாக விருப்பவன் ஸ்நானத்துக்கு ஒருதரம் இவனைத்தொட்டு பத்துஸ்நானம் செய்தால் வியாதிகிரஸ்தனும் சுத்தனுகிருன்.

உச்சிஷ்டோச்சிஷ்டஸம்ஸ்ப்ருஷ்டஸ்ஸுநாஸூத்
ரேணவாத்விஜ:
உபோஷ்யரஜநீமோகாம் பஞ்சகவ்யேநசுத்யதி 123

(இ-ள்.) எச்சிலோடுகூடிய பிராமணன் வேறு உச்சிஷ்டப் பிராமணனுல் தொடப்பட்டாலும் நாயினுல் அல்லது சூத்திரனுல் தொடப்பட்டாலும் ஒருராத்திரி உபவாஸமிருந்து பஞ்சகவ்யம் சாப்பிட்டு சுத்தனுகிருன்.

அநுச்சிஷ்டேநஸூத்ரேணஸபர்ஸேஸ்நாநம்விதியதே
தேநோச்சிஷ்டேநஸமஸ்பருஷ்ட:ப்ரரஜாபத்யம்
ஸமாசரேத் 124

(இ-ள்.) உச்சிஷ்டனல்லாத சூத்திரனுல் பிராமணன் தொடப்பட்டால் ஸ்நானத்தினுல் சுத்தி. உச்சிஷ்ட சூத்திரத்தினுல் தொடப்பட்டால் பிராஜாபத்திய கிருசிரம் செய்யவேண்டும்.

பஸ்மநாஸுதயதேகாம்ஸ்யம்ஸுரயாயந்நலீப்யதே
ஸுராமாத்ரேணஸம்ஸப்ருஷ்டம்ஸுத்ய
தேக்நயுபலேகநை: 125

(இ-ள்.) எந்த வெண்கலபாத்திரம் கள்ளுடன் சேராமலிருக்கிறதோ அது சாம்பலால் சுத்தமாகும் கள்ளுடன்சேர்ந்த வெண்கலம் அக்நியில் காய்சுவதாலும் பூச்சுபபூசுவதாலும் சுத்தமாகும்.

கவாக்ராதாநிகாம்ஸ்யாநிஸ்வகாகோபஹதாநிச
ஸுத்யந்திதசபி:க்ஷாளைஸ்ஸூத்ரோச்சிஷ்டா
நியாநிச 126

(இ - ள்.) பசுமோந்ததும் நாய்காகங்களால் தள்ளப் பட்டதும் சூத்திரனால் எச்சில் செய்யப்பட்டதுமான வெண்கலம் பத்து தரம் அலம்புவதால் சுத்தமாகும்.

கந்டூஷம்பாதஸௌசம்சக்ருத்வாவைகாம்ஸ்யபாஜநே
ஷண்மாஸாந்நிக்ஷிவேத்பூமாவுத்தருத்யபுநாரஹரேத் 127

(இ-ள்.) வெண்கலபாத்திரத்தால் வாய் கொப்பளிப் பதும் கால்கழுவுவதும் செய்தால் அந்த பாத்திரத்தை ஆறுமாதம் பூமியில் புதைத்து சுத்திசெய்து பிறகு உப யோகப்படுத்த வேண்டும்.

ஆயஸேஷ்வாயஸாநாம்சஸீஸஸ்யாக்நௌவி
ஸோதநம் 128

(இ-ள்.) இரும்புபாத்திரங்கள் அசுத்தமானால் அதை மற்றொரு இரும்பு ஆயுதத்தால் ராவுவதாலும் ஈயபாத் திரத்தையுருக்குவதாலும் சுத்தியுண்டாகும்.

தந்தமஸ்திததாஸ்ருங்கம்ரௌப்யஸௌவர்ணபாஜநம்
மணிபாத்ராணிஸங்கச்சேத்யேதாந்ப்ரக்ஷாளயேஜ்ஜலை:
பாஷாணேதுபுநர்கஷ:ஸுத்திரேஷாஹ்யுதாஹ்ருதா 129

(இ - ள்.) யானையின் தந்தத்தினாலும் எலும்பினாலும் மாட்டின்கொம்பினாலும் வெள்ளியாலும் தங்கத்தாலும் ரத்னத்தாலும் சங்கத்தினாலும் செய்யப்பட்ட பாத்தி ரங்கள் அசுத்தமானால் ஜலத்தால் அலம்புவதாலும் வேறு கற்களில் தேய்க்கிறதாலும் சுத்தியுண்டாகும்.

ம்ருந்மயேதஹநாச்சுத்திர்தாந்யம்வைவார்ஜநாதபி 130

(இ - ள்.) மட்பாத்திரங்களுக்கு தீட்டு நேரிட்டால் நெருப்பிட்டுக் கொளுத்தவும், தானியத்துக்குத் தீட்டு நேரிட்டால் புரோக்ஷணித்தும் சுத்திசெய்க.

வேணுவல்கலசீராணும்க்ஷௌமகார்பாஸவாஸஸாம்
ஔர்ணநேத்ரபடாநாம்சப்போக்ஷணச்சுத்திரிஷ்யதே131

(இ - ள்.) மூங்கில் மூங்கிற்பாய் மூங்கில்விசிரி இவைகளுக்கும், மரவுரிவெண்பட்டு வஸ்திரம் பருத்திவஸ்திரம் இவைகளுக்கும், கம்பளம் பூர்ஜமரப்பட்டைகளுக்கும் புரோக்ஷணத்தாலே சுத்தியுண்டாகும்.

மூஞ்ஜோபஸ்கரஸௌர்பாணாம்ஸணஸ்யபலசர்மணும்
த்ருணகாஷ்டஸ்யரஜ்ஜூனாமுதகாப்யுக்ஷணம்மதம் 132

(இ-ள்.) மூஞ்சிப்புல்லாசனம் முறம்சணலாற்செய்த கோணி மாம்பழம் மான்தோல் புல் விறகு கயிறு இவைகளுக்குப் புரோக்ஷணத்தாலே சுத்தியுண்டாகும்.

தூலீகாத்யுபதாநாநிரக்தவஸ்த்ராதிகாநிச
ஸோஷயித்வாதபேநைவப்போக்ஷணச்சுசிதாமியாத் 133

(இ - ள்.) இலவம் பஞ்சு மெத்தை திண்டு ஆசனம் தலையணை செஞ்சாயவஸ்திரம் இவைகளை உலர்த்தினாலும் ப்ரோக்ஷணஞ்செய்தாலும் சுத்தியுண்டாகும்.

மார்ஜாரமக்ஷிகாகீடபதங்கக்ரிமிதர்துரா:
மேத்யாமேதயம்ஸ்ப்ருஸந்தேபிநோச்சிஷ்டம்
மநுரப்ரவீத் 134

(இ - ள்.) பூனை ஈ பூச்சி வீட்டில் புழு இவை சுத்தம் அசுத்தமான வஸ்த்துக்களை ஸ்பர்சிப்பவையாயினும் அவை அசுத்தமாகாவென்று மநு சொல்லியிருக்கிறார்.

மஹீம்ஸ்பருஷ்டவாகதம்தோயம்யாஸ்சாங்யோங்யஸ்ய
விப்ருஷ:
புக்ரோச்சிஷ்டம்ததாஸ்நேஹம்நோச்சிஷ்டம்
மநுரப்ரவீத் 135

(இ-ள்.) காலலம்பும்போதும் ஆசனஞ்செய்யும்போதும் பூமியினின்று தன்மேற்பட்ட ஜலமும், பேசும்போது முகத்தினின்று விழுந்தஜலமும் புசித்துக் கையலம்பு கையில் விடாதிருக்கிற நெய் எண்ணெய்களின் சிக்கும் எச்சிலல்லவென்று மனு சொல்லியிருக்கிறார்.

தாம்பூலேக்ஷுபலேசைவபுக்தேஸ்நேஹாநுலேபநே
மதுபர்கேசஸோமேசநோச்சிஷ்டம்தர்மமதேவிது: 136

(இ-ள்.) தாம்பூலம் கரும்பு பழம் இவற்றைப்புசித்த கையிலுள்ள நெயசகிக்கல், மதுபர்க்தம், ஸோமம், இவைகளுக்குரியாயமாகத்தீட்டில்லை.

ரத்யாகர்தமதோயாநிநாவ:பம்தாஸ்த்ருணநிச
மரருதார்கேணஸ¬த்யம்திபக்வேஷ்டகசிதாரிச 137

(இ-ள்.) தெருவிலுள்ள சேற்றுஜலம் ஓடம் வழி புல் சுட்டசெங்கள் கட்டடங்களான மரத்தடியிலுள்ள மேடை இவைகளுக்குச் சண்டாளஸ்பரிசத்தாலுண்டான தோஷம் காற்றினாலும் சூரியனாலும் சுத்திசெய்யப்படும்.

அதுஷ்டாஸ்ம்ததராதாராவாதோத்தூதாஸ்சரேணவ:
ஸ்திரியோவ்ருத்தாஸ்சபாலாச்சநதுஷ்யந்திகதாசந 138

(இ-ள்.) கமண்டல முதலியஜல பாத்திரத்திலிருந்து வாயில் ஒரேதாரையாக விழும்ஜலமும், பலவிடங்களில் னின்று காற்றினால் காலஸ்நானஞ் செய்யாவிடினும் மாதர்விருத்தர் பாலர் இவர்கள் எக்காலமும் புநிதமானவர்களே.

தேஸபங்கேப்ரவாஸேவாவ்யாதிஷ¬வ்யஸநேஷ்வபி
ரக்ஷேதேவஸ்வதேஹாநிபஸ்சாந்தர்மம்ஸமாசரேத் 139

(இ-ள்.) வேற்றரச துன்பம்வந்த விடத்தும், தேசாந்தரம் போயிருக்கையிலும், வியாதி பீடாகாலத்திலும், யஜமானன்கட்டளை முடிக்கையிலும், தன்னுடலுக்குச் சிரமமுண்டான காலத்திலும் ஒருவன் தன்னைப் புத்திர களத்திராதிகளுடன் மேல்சொன்ன ஸ்த்திவிஷயத்தைக் கவனியாமலே ரக்ஷித்து ஆபத்துவிலகினபின் சாஸ்திரீயமான சுத்தியைச் செய்யக்கடவன்.

யேநகேநசதர்மேணம்ருதுநாதாருணேநவா
உத்தரேத்தீநமாத்மாநம்ஸமர்தோமர்தமாசரேத் 140

(இ-ள்.) சுத்தியான பொருளாற் செய்ததருமம் மிருதுஎன்பர். வியாதிபீடையில் முலைப்பால் குடித்தல் மாமிசம் புசித்தல் முதலியதர்மம் குரூரம்என்பர். இவற்றி

லேதேனுமொரு தர்மத்தால் வியாதியால் மெலிந்துள்ளவன் தன்னைக்காத்து வியாதிநீங்கி சுகமான பின் தர்மத்தைச் சரியாய்ச் செய்யக்கடவன்.

ஆபத்காலேஸமுத்தீர்ணேஸௌசாசாரம்துசிந்தயேத்
ஸுத்திம்ஸமுத்தரேத்பஸ்சாத்ஸ்வஸ்தோதர்
மம்ஸமாசரேத் 141

(இ-ள்) ஆபத் காலமொழிந்து சுகப்பட்டபின் சௌசாரத்தையும் பிராயச்சித்த காண்டத்திற் சொன்ன சத்தியையுஞ் செய்யக்கடவன். மேல்சொல்லிய இரண்டு தர்மத்தையும் நோய்முதலிய துன்பங்கள் நீங்கியபிறகே செய்யக்கடவன்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

## எட்டாவது அத்தியாயம்

### பிராயச்சித்த காண்டம்

கவாம்பந்தநயோக்த்ரேஷுபவேந்ம்ருதிரகாமத:
அகாமக்ருதபாபஸ்யப்ராயஸ்சித்தம்கதம்பவேத் 142

(இ-ள்.) கட்டுத்தறியில் கயிற்றினுல் இழுக்கப் பட்டு பசுக்களுக்கு மரணம் நேரிட்டால் இவனுக்குத்தெரியாமல் நேரிட்ட அந்த பாபத்திற்கு பிராயச்சித்தம் எது வென்ருல்.

வேதவேதாங்கவிதுஷாம்தர்ம்மஸாஸ்த்ரம்விஜாநதாம்
ஸ்வதர்மரதவிப்ராணும்ஸ்வகம்பாபம்நிவேதயேத் 143

(இ-ள்.) வேதம் அதின் அங்கங்கள் இவை தெரிந்தவர்களாயும் தர்மசாஸ்திரம் அறிந்தவர்களாயும் தங்கள் வர்ணச்ரம தர்மத்திலிருக்கிற பிராமணர்களிடத்தில் தன் பாபத்தைத் தெரிவிக்கவேண்டும்.

ஸாவித்ர்யாஸ்சாபிகாயத்ர்யாஸ்ஸந்த்
யோபாஸ்த்யக்நிகார்யயோ:
அஜ்ஞாநாத்க்ருஷிகர்த்தாரோப்ராஹ்மணாம
தாரகா: 144

(இ - ள்.) ஸவிதாவைச் சொல்லுகிறதான காயத்ரீ யென்கிற மந்திரத்தை யறியாமலும் சந்தியாவந்தனம் ஔபாஸனம் முதலியவைகளைச் செய்யாமல் கேவலம் ஜீவனோபாயமாகப் பயிர் செய்கிறவர்கள் பேருக்குமாத் திரம் பிராமணர்கள். இவர்களிடத்தில் மேற்கூறியபடி தெரிவிக்கக்கூடாது.

அவ்ரதாநாமமந்த்ராணும்ஜாதிமாத்ரோபஜீவிநாம்
ஸஹஸ்ரஸஸ்ஸமேதாநாம்பரிஷத்த்வம்நவித்யதே 145

(இ - ள்.) பிராஜாபத்யம் முதலிய விருதங்களைச் செய்யாதவர்களும் வேத மோதாதவர்களும் பிராமண னென்று சொல்லி ஜீவிக்கிறவர்கள் அனேகம் கும்பல் கூடினாலும் அது பரிஷத் ஆகாது.

யத்வதந்திதமோமூடாமூர்காதர்மமதத்வித:
தத்பாபம்ஸததாபூத்வா தத்வக்த்ருநதிகச்சதி 146

(இ - ள்.) அக்யானத்தால் மூடர்களும் தங்களைப் பண்டிதர்களாக நினைத்தவர்களும் இதற்கு இது பிராயச் சித்தமென்று தெரியாதவர்களும் எந்த பிராயச்சித்தத் தை விதிக்கிருர்களோ, அந்த பிராயச்சித்தத்தால் போக வேண்டிய பாவம் அனேகவிதமாக மாறி அந்த பிராயச் சித்தம் சொன்னவர்களைச் சேருகிறது.

அஜ்ஞாத்வா தர்மஸாஸ்த்ராணிப்ராயஸ்சித்தம்ததாதிய:
ப்ராயஸ்சித்தீபவேத்பூத:கில்பிஷம்பரிஷத்வ்ரஜேத் 147

(இ - ள்.) தெரியாதவனுய் எவன் பிராயஸ்சித்தம் விதிக்கிருனே அப்படி விதிப்புண்டவன் சுத்தனுவான்; விதித்த பரிஷத் அந்த பாவத்தையடையும்.

சத்வாரோவாத்ரயோவாபியம்ப்ரூயுர்வேதபாரகர:
ஸதர்ம்மஇதிவிஜ்ஞேயோநேதரைஸ்துஸஹஸ்ரஸ: 148

(இ - ள்.) வேதந் தெரிந்தவர்கள் நாலு அல்லது மூன்றுபேர்கள் யாதொரு தர்மத்தைச் சொல்லுகிருர் களோ, அதுவே தர்மம் என்று அறியவேண்டும். மற்றபேர் ஆயிரம்பேர் சொன்னுலும் தர்மமல்ல.

ப்ரமாணமார்கம்மார்க்கந்தோயே தர்மம்ப்ரவதந்திவை
தேஷாமுத்விஜதேபாபம்ஸத்பூதகுணவாதிநாம் 149

(இ-ள்.) தர்மசாஸ்திரங்களை யாலோசித்து எவர்கள் தர்மஞ்சொல்லுகிறார்களோ, உண்மையான குணங்களைச் சொல்லுகிற அவர்களைக்கண்டு பாபம் நடுங்குகிறது.

யதஸ்மநிஸ்திதம்தோயம்மாருதார்க்கேண ஸுஷ்யதி
ஏவம்பரிஷதாதேஸாந்நாஸயேத்தஸ்ய துஷ்க்ருதம் 150

(இ-ள்.) கல்லிலிருக்கும் ஜலம் எவ்வண்ணமாகக் காற்றினாலும் வெயிலினாலும் உலர்ந்துவிடுகிறதோ, அவ்வண்ணமாகவே பரிஷத்தானது தன் சொல்லினால் பாவியின் பாவத்தைப்போக்கும்.

நைவகச்சதிகர்தாரம்நைவகச்சதிபர்ஷதம்
மாருதார்காக்நிஸம்யோகாத்பாபம்நஸ்யதிதோயவத் 151

(இ-ள்.) அப்படி பிராயஸ்சித்தம் செய்தபிறகு அந்த பாவம் செய்தவனையும் சேருகிறதில்லை. பரிஷத்தையும் சேருகிறதில்லை. தானே ஜலம் காற்று நெருப்பு வெயிலிவைகளின் சம்பந்தத்தால் வற்றுகிறதுபோல் நசித்து விடுகிறது.

சத்வாரோவாத்ரயோவாபிவேதவந்தோக்நிஹோத்ரிண:
ப்ராஹ்மணாநாம்ஸமர்த்தாயேபரிஷத்ஸாபிதீயதே
அநாஹிதாக்நயோயேசவேதவேதாங்கபாரகா:
பஞ்சத்ரயோவா தர்மஜ்ஞா:பரிஷத்ஸாப்ரகீர்திதா 152

(இ-ள்.) வேதங்கள் தெரிந்தவர்களாயும் அக்னிஹோத்ரம் செய்தவர்களுமான பிராமணர்கள் மூன்று அல்லது நாலுபேர் பிராமணர்களுக்குள் சமர்த்தர்களாகவிருந்தால் அது பரிஷத் என்னப்படும். அக்னிஹோத்ரம் செய்யாதவர்களாக வேதம் அதின் அங்கங்களையும் அறிந்த பிராமணர்கள் தர்மசாஸ்திரந் தெரிந்தவர்களாக ஐந்து அல்லது மூன்றுபேரிருந்தால் அது பரிஷத் என்னப்படும்.

முநீநாமாத்மவித்யாநாம்த்விஜாநாம்யஜ்ஞயாஜிநாம்
வேதவ்ரதேஷுஸ்நாதாநாமேகோபிபரிஷத்பவேத்

பஞ்சபூர்வேமயாப்ரோக்தாஸ்தேஷாம்சா ஸம்பவேத்ர்ய:
ஸ்வவ்ருத்திபரி துஷ்டாயேபரிஷத்ஸாப்ரகீர்திதா 153

(இ - ள்.) பிரம்ம வித்தை யுணர்ந்து தியானம்செய்பவர்களாயும் யாகசீலர்களாகவும் பிராஜாபத்யம் முதலான விருதஸ்நாதர்களாகவுமிருக்கிற பிராமணர்களுக்குள் ஒருத்தரிருந்தாலும் அது பரிஷத்தாகும். முதலில் ஐந்து பேர் நான் சொன்னது முக்யம். அப்படி யில்லாவிட்டால் மூன்று பேரிருக்கவேண்டும். தங்களுக்குக் கிடைத்திருக்கும் விருத்தியால் சந்தோஷப் படுபவர்களிருந்தால் அது பரிஷத்தாகும்.

அதஊர்த்வம் துயேவிப்ரா: கேவலம்நாமதாரகா:
பரிஷத்த்வம்நதேஷ்வஸ்திஸஹஸ்ரகுணீதேஷ்வபி 154

(இ - ள்.) இப்படி யன்றிக்கே எந்த பிராமணர்கள் வேதமோதாமலும் தர்மமறியாமலும் கேவலம் பிராமணனென்கிற நாமத்தை மாத்திரம் தரித்திருக்கிறர்களோ, அவர்களில் அனேகம்பெயர் கூடினலும் அது பரிஷத்தாகாது.

யதாகாஷ்டமயோஹஸ்தியதாசர்மமயோம்ருக:
ப்ராஹம்ணஸ்த்வநதீயாநஸ்த்ரயஸ்தேநாமதாரகா: 155

(இ – ள்.) மரத்தால் செய்த யானை எப்படியோ, தோலினல் செய்த மான் எப்படியோ, அப்படியே அத்யயனம் செய்யாத பிராமணனும் இம்மூன்றுபேரும் கேவலம் பேரைமாத்திரம் தரிப்பவர்கள்.

க்ராமஸ்தாநம்யதாஸஂந்யம்யதாகூபஸ்துநிர்ஜல:
யதாஹுஂதமநக்நௌசஅமந்த்ரப்ராஹ்மணஸ்ததா 156

(இ - ள்.) ஜனங்களில்லாத கிராமம்போலவும் ஜலமில்லாதகிணறு போலவும் ஹோமத்திற்குரித்தாகாத வக்னியில் செய்யப்பட்ட வாகுதிபோலவும் வேதமோதாத பிராமணன் ஆகிருன்.

யதாஷண்டோபலஸ்த்ரீஷுஂயதாகௌஷராபலா
யதாசாஜ்ஞேபலம்தாநம்ததாவிப்ரோந்ருசோபல: 157

(இ - ள்-) நபும்ஸகன் ஸ்திரீகளிடத்தில் எப்படி பயன்படானோ, களர்பூமியானது எப்படி பயனற்றதோ, தெரியாதவனிடத்தில் தானம் எப்படி பயன்படாதோ, அப்படியே வேதமோதாத பிராமணன் பயன்படான்.

சித்ரகர்மயதாநேகைரங்கைருந்மீல்யதேஸனை:
ப்ராஹ்மண்யமபிநத்வத்திஸம்ஸ்காரைர்மந்த்ர
பூர்வகை: 158

(இ - ள்.) அனேகமான வர்ணங்களால் மெதுவாக சித்திரமானது எப்படி யேற்படுகிறதோ, அப்படியே மந்திரங்களை முன்னிட்ட ஸம்ஸ்காரங்களால் பிராம் மண்ய முண்டாகிறது.

ப்ராயஸ்சித்தம்ப்ரயச்சந்தியெத்விஜாநாமதாரநா:
தேத்விஜா பாபகர்மாணஸ்ஸமேதாநரகம்யயு: 159

(இ - ள்.) பேர்மாத்திரமுள்ள எந்த பிராமணர்கள் பிராயச்சித்தத்தை விதிக்கிறார்களோ, அந்த பாவிகளான பிராமணர்கள் கும்பலாக நரகத்தை யடைகிறார்கள்.

யேபடந்தித்விஜாவேதம்பஞ்சயஜ்ஞரதாஸ்சயே
த்ரைலோக்யம்தாரயந்த்யேகேபஞ்சேந்த்ரியரதாஅபி 160

(இ - ள்.) எந்த பிராமணர்கள் வேதமோதுகிறார்களோ, எவர்கள் பஞ்சயக்யங்களைச் செய்கிறார்களோ, அந்த பிராமணர்கள் ஐந்து இந்திரியங்கள் சென்றவழி சென்றபோதிலும் மூன்று லோகத்தையு முத்தரிப்பிக்கிறார்கள்.

ஸம்ப்ரணீதஸ்மஸாநேஷுதீப்தோக்நிஸ்ஸர்வபக்ஷக:
ஏவம்சவேதவித்விப்ரஸ்ஸர்வபக்ஷோஹிதைவதம் 161

(இ - ள்.) ஸ்மசானங்களில் சவங்களுக்கு உபயோகப் படுத்தி மூட்டப்பட்ட அக்னியானது எப்படி ஸர்வத்தை பக்ஷித்தபோதிலும் ஜ்வலித்துக்கொண்டுசுத்தனுகிறானோ; அப்படியே ஸர்வான்னத்தையுமுட்கொண்டபோதிலும் வேதமறிந்த பிராமணன் தெய்வமாகிறான்.

அமேத்யாநிசஸர்வாணிப்ரக்ஷிப்யந்தேயதோதகே
ததைவகில்பிஷம்ஸர்வம்ப்ரக்ஷிபேச்சத்விஜோத்தமே 162

(இ - ள்.) எல்லா அசுத்த வஸ்துக்களும் ஜலத்தில் பட்டபோதிலும் எப்படி ஜலத்துக்கு தோஷமில்லையோ, அப்படியே எல்லா பாவங்களைப் பிராமணன் சுமந்தாலும் தோஷமில்லை.

காயத்ரீரஹிதோவிப்ரஸ்ஸூத்ராதப்யஸுசிர்பவேத்
காயத்ரீப்ரஹ்மதத்வஜ்ஞாஸ்ஸம்பூஜ்யம்
தேஜனைர்த்விஜா: 163

(இ - ள்.) காயத்ரி யில்லாத பிராமணன் சூத்திரனிலும் அதிக அசுத்தனாகிறான். காயத்ரியின் தத்வத்தையும் வேதத்தின் தத்வத்தையுமறிந்த பிராமணர் ஜனங்களால் பூஜிக்கப்படுகிறார்கள்.

துஸ்ஸீலோபித்விஜ:பூஜ்யோநதுசூத்ரோஜிதேந்த்ரிய:
க:பரித்யஜ்யகாம்துஷ்டாம்துஹேத்ஸீரவதீம்கரீம் 164

(இ—ள்.) பிராமணன் கெட்டநடத்தையை யுடையவனாயிருந்தபோதிலும் பூஜிக்கத்தக்கவன். சூத்திரன் ஜிதேந்திரியனாயிருந்தாலும் பூசிக்கத்தக்கவனல்லன். எவன் பசு துஷ்டமாயிருந்தால் அதைவிட்டு பாலுள்ளதாயிருந்தாலும் கழுதையைக் கறக்கப்பார்ப்பன்.

தர்மஸாஸ்த்ரரதாரூடாவேதகட்கதராத்விஜா:
க்ரீடார்தமபியம்ப்ரூயுஸ்ஸதர்ம:பரம:ஸ்ம்ருத: 165

(இ—ள்.) தர்மசாஸ்திரமாகிற தேரிலேறி வேதமாகிற கத்தியைக்கொண்ட பிராமணர் விளையாட்டின்பொருட்டாகிலும் எதைச் சொன்னாலும் அதுவே உயர்ந்த தர்மம்.

சாதுர்வைத்யோவிகல்பீசஅங்கவித்தர்மபாடக:
த்ரயஸ்யாஸ்ரமிணோமுக்யா:பர்ஷதேஷாதஸாவரா 166

(இ-ள்.) நாலு வேதங்களைமாத்திரம் அறிந்தவர்களும் தர்மம், பரிஷத் பிராயச்சித்தத்தின் கிரமம் இவைகளையுமறிந்தவர்களும், சோதிடம் முதலிய வேதங்களின் ஆறு

அங்கங்களையு மறிந்தவர்களும், தர்மசாஸ்திரங்களையு மறிந்தவர்களும் பத்துபேருக்குக் குறையாமலிருந்தால் அது பரிஷத்தாகும்.

ராஜ்ஞஸ்சாநுமதேஸ்தித்வாப்ராயஸ்சித்தம்விநிர்திசேத்
ஸ்வயமேவநகர்தவ்யம்கர்த்தவ்யாஸ்வல்பநிஷ்க்ருதி: 167

(இ - ள்.) பிராயச்சித்தம் விதிக்கிற புருஷன் அரசனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு பிராயச்சித்தம் விதிக்க வேண்டும். பிராயச்சித்த மல்பமாயிருந்தால் தானே விதிக்கலாம்.

ப்ராஹ்மணும்ஸ்தாநதிக்ரம்யராஜாகர்தும்யதீச்சதி
தத்பாபம்ஸநதாபூத்வாராஜாநமதிகச்சதி 168

(இ - ள்.) அந்த பிராமணர்களை மீறி அரசன் செய்ய இச்சித்தானேயானுல் அந்த பாவமானது அனேகம் பங்காக மாறி அரசனையே யடையும்.

ப்ராயஸ்சித்தம் ஸதாதத்யாத்தேவதாய தநாக்ரத:
ஆத்மக்ருச்ரம் தத:க்ருத்வா ஜபேத்வை வேதமாதரம். 169

(இ - ள்.) பிராயச்சித்தங்களை தேவாலயத்துக்கு எதிரில் விதிக்கவேண்டும். அப்படி பிராயச்சித்தம் விதித்த பிறகு தான் க்ருச்ரம் செய்துகொண்டு காயத்ரியை ஜபிக்கவேண்டும்.

ஸசிகம் வபநம்க்ருத்வா த்ரிஸந்த்ய மவகாஹநம்
கவாம மத்யேவஸேத்ராத்ரௌ திவாகாஸ்சாப்ய
நுவ்ரஜேத் 170

(இ - ள்.) தெரியாமல் கோவதம்செய்தவன் குடுமி வைத்துக்ஷௌரம் செய்துகொண்டு மூன்று சந்திகளிலும் ஸ்நானம் செய்துகொண்டு இரவில் மாடுகளின் நடுவிலிருந்தும் பகலில் பசுக்களைப் பின் செல்வதையும் செய்ய வேண்டும்.

உஷ்ணேவர்ஷதிஸீதேவாமாருதேவாதிவாப்ருஸம்
நகுர்வீதாத்மநஸ்த்ராணம்கொரக்ருத்வா துஸக்தித: 171

(இ-ள்.) வெயிலிலும் மழையிலும் குளிரிலும் பெருங் காற்றிலும் மாட்டைக் காப்பாற்ருமல் தன்னைமாத்திரம் காப்பாற்றக்கூடாது.

ஆத்மநோயதிவாங்யேஷாம் க்ருஹேக்ஷேத்ரேகலேதவா
பக்ஷயந்தீம்நகதயேத் பிபந்தம்சைவவச்ஸகம் 172

(இ-ள்.) தன்னுடையதா யிருந்தாலும் பிறருடையதா யிருந்தாலும் வீட்டிலாவது நிலத்திலாவது மேய்கிற பசுவையாவது ஊட்டுகிற கன்றையாவது ஒருவரிடத்திலும் சொல்லக்கூடாது.

பிபந்தீஷ¬பிபேத்தோயம் ஸம்விஸந்தீஷ¬ஸம்விஸேத்
பதிதாம்பங்கலக்நாம்வா ஸர்வப்ராணைஸ்ஸ
முத்தரேத் 173

(இ-ள்.) பசுக்கள் நீர்குடித்தால் தானும் நீர்குடித்தும் அவை படுத்தால் தானும் படுத்தும் அவைகள் விழுந்தபோதிலும் சேற்றிலகப்பட்டாலும் தன் சக்தியுள்ள வளவும் எடுத்தும் விடவேண்டும்.

ப்ராஹ்மணர்தேகவார்தேவா யஸ்துப்ராணுங்பரித்யஜேத்
முச்யதேப்ரஹ்மஹத்யாயா கோப்தாகோர்ப்
ராஹ்மணஸ்யச. 174

(இ-ள்.) பிராமணன் பொருட்டும் பசுவின் பொருட்டும் எவன் பிராணனை விடுகிருனே அப்படி பசுவையும் பிராமணனையும் காப்பாற்றினவன் பிரம்மகத்தியில் நின்றும் நீங்குகிருன்.

கோவதஸ்யாநுரூபேண ப்ராஜாபத்யம்விநிர்திசேத்
ப்ராஜாபத்யம்தத: க்ருச்ரம்விபஜேச்சசதுர்விதம் 175

(இ-ள்-) கோவதத்திற்கு அனுகுணமாக பிராஜாபத்ய கிருச்ரத்தை விதிக்கவேண்டும், மேலே சொல்லப் போகிறபடி பிராஜாபத்ய கிருச்ரத்தை நாலுவிதமாகப் பிரிக்கவேண்டும்.

ஏகாஹமேகபக்தாஸீ சைகாஹம்நக்தபோஜந:
அயாசிதாஸீசைகாஹ மேகாஹம்மாருதாஸந:
திநத்வயம்சைகபக்கோ த்விதிநம்நக்தபோஜந:
திநத்வயமயாசீஸ்யா த்த்விதிநம்மாருதாஸந:
த்ரிதிநம்சைகபக்தாஸி த்ரிதிநம்நக்தபோஜந:
திநத்ரயமயாசீஸ்யா த்த்ரிதிநம்மாருதாஸந:
சதுரஹம்த்வேகபக்தாஸீ சதுரஹம்நக்தபோஜந:
சதுர்திநமயாசீஸ்யாச் சதுரஹம்மாருதாஸந: 176

(இ - ள்.) ஒருநாள் பகலில் மாத்திரம் போஜனமும் ஒருநாள் ராத்திரியில் மாத்திரம் போஜனமும் ஒருநாள் கிடைத்ததைப் புசித்தும் ஒருநாள் உபவாஸமுமிருந்தால் இது ஒருவித பிராஜாபத்யம். இப்படியே இரண்டுதினம் பகலிலும் மறுபடி இரண்டுதினம் ராத்திரியிலும் மற்ற இரண்டுதினம் கிடைத்ததைப் புசித்து மறுபடி இரண்டு தினம் உபவாஸமிருந்தா லிது இரண்டாவது பிராஜாபத்யம். இப்படியே மூன்றுதினம் பகலிலும் மற்ற மூன்று தினம் இரவிலும் மறுபடி மூன்றுதினம் கிடைத்ததைப் புசித்து மறுபடி மூன்றுதின முபவாஸமிருந்தாலிது மூன்ருவது பிராஜாபத்யம். இப்படியே நாலுதினம் பகலிலும் மற்ற நாலுதினம் இரவிலும் மறுபடி நாலுதினம் கிடைத்ததைப் புசித்து மறுபடி நாலுதின முபவாஸமிருந்தாலிது நாலாவது பிராஜாபத்யம்.

ப்ராயஸ்சித்தேஸமாசீர்ணே குர்யாத்ப்ராஹ்மண
போஜநம்
விப்ராணும்தக்ஷிணும் தத்யாத்பவித்ராணிஜபேத்விஜ: 177

(இ - ள்.) பிராயச்சித்தமோ கூறியபடி முடிந்தபிறகு பிராமணர்களுக்கு போஜனம் செய்துவைத்து தக்ஷிணையும்கொடுத்து பரிசுத்தமான மந்திரங்களை ஜபிக்க வேண்டும்.

ப்ராஹ்மணாந்போஜயித்வா து கோக்நஸ்ஸுத்
யேந்நஸம்ஸய: 178

(இ-ள்.) பசுவைக் கொன்றவன் பிராமணபோஜனம் செய்துவைத்தபிறகு சந்தேகமில்லாமல் சுத்தனுகிருன்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஒன்பதாவது அத்தியாயம்.

கவாம்ஸம்ரக்ஷணர்தாய நதுஷ்யேத்ரோதபந்தயோ :
தத்வதந்துநதம்வித்யா த்காமகாரக்ருதம்ததா 179

(இ-ள்.) பசுக்களைக் காப்பாற்றுவதற்காகத் தடுப்பதும் கட்டுவதும் செய்வதால் அது இறந்தால் அது கோவதமாகமாட்டாது. மேற்சொல்லிய தடுத்தலும் கட்டுதலும் புத்திபூர்வமாகச் செய்யப் பட்டதாகிலும் வதமாகாது.

தண்டாதூர்தவம்யதங்யேந ப்ரஹாராத்யதிபாதயேத்
ப்ராயச்சித்தம்யதாப்ரோக்தம் த்விகுணம்
கோவதேசரேத் 180

(இ-ள்.) மேல்சொல்லப்போகிற தண்டப்பிரமாணத்திற்கு மேற்பட்ட கழியால் பசுவை யடித்துக்கொன்றால் மேலே கோ வதத்திற்குச் சொன்ன பிராயச்சித்தத்திற்கு இரண்டுபங்கு செய்யவேண்டும்.

ரோதபந்தநயோக்த்ராணி பாதஸ்சேதிசதுர்விதம் 181

(இ-ள்.) ரோதம் (தடுத்தல்) பந்தனம் (கட்டுதல்) யோக்த்ரம் (கட்டுத்தாம்பு) பாதம் (அடித்தல்) இந்த நான்கு விதமும் கோவதத்திற்குக் காரணமாகும்.

ஏகபாதம்சரேத்ரோதே த்வௌபாதௌபந்தநேசரேத்
யோக்த்ரேஷுபாதஹீநம் ஸ்யாச்சரேத்ஸர்வம்
நிபாதநே 182

(இ-ள்.) ரோதம் என்ற நிமித்தத்தால் கோவதம் நேர்ந்தால் மேற்சொன்ன கோ வதபிராயச்சித்தத்தில் கால் பங்கும் பந்தநத்தால் நேர்ந்தால் அரைபங்கும் யோக்த்ரத்தால் நேர்ந்தால் முக்கால்பங்கும் பாதத்தால் நேர்ந்தால் முழுப்பங்கும் செய்யவேண்டும்.

கோஷ்டேவாபிக்ருஹேவாபி துர்கேஷ்வப்யஸமஸ்தலே
நதீஷ்வதஸமுத்ரேஷு த்வந்யேஷுசநதீமுகே
தத்ததேஸேம்ருதாகாவ ஸ்தம்பநாத்ரோதஉச்யதே 183

(இ-ள்.) கட்டுத்தறியிலாவது வீட்டிலாவது போகக் கூடாதவிடத்திலாவது மேடுபள்ளமான விடத்திலாவது ஆற்றிலாவது சமுத்திரத்திலாவது வேறு கிணறு முதலிய திலாவது நதியின் சங்கமத்தியிலாவது கொளுத்தின சாம்பலிலாவது பசுக்கள் தடுக்கப்பட்டிறந்தால் அது ரோதமென்னப்படும்.

யோக்த்ரதாமகதோ ரைஸ்சகண்டாபரணபூஷணை:
க்ருஹேவாபிவநேவாபி பத்தாஸ்யாத்கௌர்ம்ருதாயதி
ததேவபந்தநம்வித்யா த்காமாகாமக்ருதம்யதி 184

(இ - ள்.) பூட்டாங்கயிறு தாமணிக்கயிறு கழுத்துக் காபரணமான மணி முதலிய பூஷணங்கள் இவைகளால் வீட்டிலாவது காட்டிலாவது கட்டினபடி மாடு இறந்தால் அது தெரிந்து செய்தாலும் தெரியாமற் செய்தாலும் பந்தனமெனப்படும்.

ஹலேவாஸகடேபங் க்தௌப்ருஷ்டேவாபீடி தோநரை:
கோபதிர்ம்ருத்யுமாப்நோதி யோக்த்ராத்
பவதிதத்வத: 185

(இ - ள்.) ஏரிலாவது வண்டியிலாவது புணயிலாவது தார்கோலால் பின்பக்கத்தில் குத்துவதாலாவது மனிதர்களால் மாடு இறந்தாலிது யோக்த்ரத்தால் நேரிட்ட கோவதமெனப்படும்.

மத்த:ப்ரமத்த உன்மத்த ஸ்சேதநோவாப்யசேதந:
காமாகாம க்ருதக்ரோதோ தண்டைர்ஹ ந்யாததோபலை:
ப்ரஹ்ருதாவாம்ருதா வாபிதத்தேதுர்விநிபாதநே 186

(இ - ள்.) பணச்செருக்கால் மதித்தவனும் கள்குடித்தல் முதலியவைகளால் மதித்தவனும் வியாதி முதலியதுகளால் பயித்தியம்பிடித்தவனும்தெரிந்தவனுயிருந்தாலும் தெரியாதவனு யிருந்தாலும் கொல்லவேணு மென்கிற எண்ணத்தோடாவது அல்லது அபுத்தி பூர்வமாயாவது உண்டான கோபத்தால் தடிகளாலாவது கற்களாலாவது அடித்தாலும் அல்லது கொன்றாலும் அது பாதமென்கிறதாலுண்டான வதமாகும்.

அங்குஷ்டமாத்ர ஸ்தூலஸ்து பாஹுமாத்ரப்ரமாணக:
ஆர்த்ரஸ்து ஸபலாசஸ்ச தண்டஇத்ய பிதீயதே 187

(இ - ள்.) கட்டைவிரல் பெருமனுள்ளதாய் கை நீளமுள்ளதாய் பச்சையாயும் இலைகளோடு கூடினதாயுமிருக்கிற கழிக்கு தண்டமென்று பெயர்.

மூர்சித:பதிதோவாபி தண்டேநாபி ஹதஸ்யது
உத்திதஸ்து யதாகச்சே த்பஞ்சஸப்ததஸைவதா
க்ராஸம்வாயதி க்ருஹ்ணீயாத் தோயம்வாபி பிதேத்யதி
பூர்வம்வ்யாத்யுப ஸ்ருஷ்டச்சேத்ப்ராயஸ்சித்தம்
நவித்யதே 188

(இ - ள்.) மூர்ச்சித்து கிடந்தாலும் விழுந்துபோனாலும் தண்டத்தினாலடிபட்டபசு பிறகு எழுந்து ஐந்து அல்லது ஏழு அல்லது பத்து அடிபோனாலும் புல்தின்றாலும் தண்ணிகுடித்தாலும் முன்னிட்டவியாதியா லிப்படி நேர்ந்தாலும் அந்தவதத்திற்கு பிராயச்சித்தமில்லை.

பிண்டஸ்தேபாதமேகந்து த்வெளபாதௌ கர்மஸம்மிதே
பாதோநம்வ்ரதமுத்திஷ்டம் ஹத்வாகர்ப்பமசேதநம் 189

(இ - ள்.) வீர்யம் இளகியிராமல் உண்டைகட்டின கர்ப்பம்தரித்த பசுவையடித்தால் கால்கிருச்ரமும் அந்த உண்டைகெட்டியான கர்ப்பத்தோடுகூடிய பசுவையடித்தால் அரைகிருச்ரமும் கைகால்முளைத்து உயிரில்லாத கர்ப்பத்தோடுகூடிய பசுவையடித்தால் முக்கால் கிருச்ரமும் செய்யவேண்டும்.

பாதேங்கரோமவபநம் த்விபாதேஸ்ம ஸ்ருஞோபிச
த்ரிபாதேதுஸிகாவர்ஜம் ஸஸிகம்துநிபாதநே 190

(இ - ள்.) பாதகிருச்ரத்தில் சரீரத்தில் க்ஷௌரமும் அரைகிருச்ரத்தில் மீசையுடன் கூடவும் முக்கால் கிருச்ரத்தில் குடுமிமிகுதியாக சர்வாங்கமும் பாதம் நேர்ந்தால் சிகையுடனும் க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டும்.

பாதேவஸ்த்ரயுகம்சைவ த்விபாதேகாம்ஸ்யபாஜநம்
த்ரிபாதேகொவ்ருஷம்தத்யாச் சதுர்தேகோத்வயம்
ஸ்ம்ருதம் 191

(இ - ள்.) பாதகிருச்ரத்தில் இரண்டு துணிகளின் தானமும் அரைகிருச்ரத்தில் வெண்கல பாத்ரதானமும் முக்கால்கிருச்ரத்தில் ஒரு காளைமாட்டின் தானமும் பாதத்தில் இரண்டு கோதானமும் செய்யவேண்டும்.

நிஷ்பந்நஸர்வகாத்ரஸ்து த்ருஸ்யதேவாஸசேதந:
அங்கப்ரத்யங்கஸம்பூர்ணோ த்விகுணம்கோவ்ர
தம்சரேத் 192

(இ-ள்.) இணையான பசுவின்கர்ப்பம் அவயவங்களெல்லாமுண்டாய் உயிருமுண்டாய் ஒன்றும் குறையாமலிருந்தால் அந்தபசுவுக்கு வதம் நேர்ந்தால் கோவதத்திற்கு இரண்டுபங்கு பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

பாஷாணேநாபிதண்டேந காவோயேநாபிகாதிதா:
ஸ்ருங்கபங்கேசரேத்பாதம் த்வௌபாதாவஸ்திபஞ்ஜநே
த்ரிபாதம்சைககர்ணேது சரேத்ஸர்வம்நிபாதநே 193

(இ - ள்.) கற்களாலாவது தண்டத்தாலாவது பசுக்களையடித்து அதனால் பசுவின்கொம்பு முறிந்தால் கால்கிருச்ரமும் எலும்பு ஒடிந்தால் அரைகிருச்ரமும் காதொன்றறுந்தால் முக்கால் கிருச்ரமும் பாதம் நேர்ந்தால் பூர்ண கிருச்ரமும் செய்யவேண்டும்.

ஸ்ருங்கபம்கேஸ்திபங்கேச கடிபங்கேததைவச
யதிஜீவதிஷண்மாஸாந் ப்ராயஸ்சித்தம் நவித்யதே 194

(இ - ள்.) கொம்பொடிந்தும் எலும்பொடிந்தும் இடுப்பொடிந்தும் ஆறுமாத மந்தபசு ஜீவித்திருந்தால் பிராயச்சித்தமில்லை.

வ்ரணபங்கேதுகர்தவ்யம் ஸ்நேஹாப்யங்கஸ்துபாணிநா
யவஸஸ்சோபஹர்தவ்யோ யாவத்த்ருடபலோபவேத் 195

(இ - ள்.) மேற்சொன்னபசு தேறுகிற வரையில் அதின் விருணத்தில் தான் எண்ணெயிடவேண்டும் அப்பசுவுக்கு தேறுகிற வரையில் புல்முதலியவற்றையும் போடவேண்டும்.

யாவத்ஸம்பூர்ணஸர்வாங் கஸ்தாவத்ஸம் போஷயேந்நர:
கோரூபம்ப்ராஹ்மணஸ்யாக்ரே நமஸ்க்ருத்வாவிஸர்
ஜயேத் 196

(இ - ள்.) அந்தப்பசுவின் அங்கங்கள் முன்போலக் கட்டுகிறவரையில் அந்தப்பசுவைக் காப்பாற்றவேண்டும். பிறகு பிராமணனுக்குக் கெதிரில் அந்தப்பசுவின் ரூபத்தைச் சேவித்துவிடக்கடவன்.

யத்யஸம்பூர்ணஸர்வாங் கோதீநதேஹோபவேத்ததா
கோகாதகஸ்யதஸ்யார்தம் ப்ராயஸ்சித்தம்விநிர்திஸேத் 197

(இ - ள்.) அப்படி ஓடிந்தபோதிலும் அடித்தபுண் ணாறாமலும் அதின்தேகமு மிளைத்துமிருந்தால் கோவதம் செய்தவனுக்கு விதித்தபிராயச்சித்தத்தில் அப்படி யடித் தவனுக்கு விதிக்கவேண்டும்.

அந்யத்ராங் கநலக்ஷ்மாப்யாம் வாஹநேமோசநேததா
ராத்ரௌஸம்கோபநார்தம்துநதுஷ்யேத்
ரோதபந்தயோ: 198

(இ - ள்.) சிலகிரியைகளில் சூடுபோட்டும் சில அடையாளங்கள் செய்துமிருக்கிற கோக்கள் தவிர மற்ற மாடுகளின்பேரில் மூட்டை ஏற்றும்போது இரணமுண் டானாலும் ராத்திரியில் ரக்ஷிப்பதற்காக தடுப்பதிலும் கட்டுவதிலும் தோஷமில்லை.

அதிவாஹே திதாஹேச நாஸிகாச்சேதநேததா
நதீபர்வதஸஞ்சாரே ப்ராயஸ்சித்தம்விநிர்திஸேத் 199

(இ - ள்.) அதிகசுமைமையை யேற்றுகிறது சூடுபோடு கிறதைக் காரணமின்றியில் செய்வது மூக்குக்குத்துவது ஆறு மலையிவைகளில் ஓட்டிவிப்பது இவைகளைச் செய்த வனுக்குப் பிராயச்சித்தம் விதிக்கவேண்டும்.

அதிதாஹேசரேத்பாதம் த்வௌபாதௌவாஹநேசரேத்
நாஸிக்பேபாதஹீநம்து சரேத்ஸர்வம் நிபாதநே 200

(இ - ள்.) சூடுபோடுவதைக் காரணமின்றியில் செய்தவனுக்கு கோவத பிராயச்சித்தத்தில் கால்பங்கும் அதிபாரம் ஏற்றினவனுக்கு அரைப்பங்கும் மூக்குக்குத்தினவனுக்கு முக்கால்பங்கும் கொன்றவனுக்கு பூர்ணபிராயச்சித்தமும் செய்யவேண்டும்.

காஷ்டலோஷ்டகபாஷாணைஸ் ஸஸ்த்ரேணைவோத்த
தாபலாத்
வ்யாபாதயதியோகாந்து தஸ்யஸுத்திம் விநிர்திசேத்
சரேத்ஸாந்தபநம்காஷ்டே ப்ராஜாபத்யம் துலோஷ்டகே
தப்தக்ருச்ரம்துபாஷாணே ஸஸ்த்ரபாதேதி க்ருச்ரகம்201

(இ - ள்.) கட்டை, மண்ணுங்கட்டி, கல், அல்லது கத்தி இவைகளால் கோவை எவன் கொல்லுகிருனே அவனுக்கு பிராயச்சித்தம் - கட்டையாற் கொன்றவனுக்கு சாந்தபனமும் மண்கட்டியால்கொன்றவனுக்குப் பிராஜாபத்யமும் கற்களால்கொன்றவனுக்கு தப்தகிருச்ரமும் கத்தியால்கொன்றவனுக்கு அதிகிருச்ரமும் விதிக்கவேண்டும்.

பஞ்சஸாந்த பநேகாவ: ப்ராஜாபத்யே ததாத்ரய :
தப்தக்ருச்ரே பவந்த்யஷ்டா வதிக்ருச்ரேத்ரயோதஸ 202

(இ- ள்.) கீழ்ச்சொன்ன சாந்தபனவிருதத்தில் ஐந்து கோதானமும் பிராஜாபத்யத்தில் மூன்றுகோதானமும் தப்தகிருச்ரத்தில் எட்டுகோதானமும் அதிகிருச்ரத்தில் பதின்மூன்று கோதானமும் செய்யவேண்டும்.

ப்ரமாபணே ப்ராணப்ருதாம் தத்யாத்தத் ப்ரதிரூபகம்
தஸ்யாநுரூபம் மூல்யம்வா தத்யாதித்ய ப்ரவீந்மநு : 203

(இ-ள்.) பிராணிகளைக்கொன்ருல் கொன்றபிராணிக்கு சமானரூபமுள்ள பிராணியையாவது அதற்கு சரியான கிரயத்தையாவது தானம் செய்யவேண்டுமென்று மனு சொன்னர்.

தஹநாத்து விபத்யேத அநட்வாந் யோக்த்ரயந் த்ரித :
உக்தம்பராஸரேணைவ ஹ்யேகபாதம்யதாவிதி 204

(இ - ள்.) கட்டுத்தறியில் கட்டப்பட்டபடி தீயினால் மாடு இறந்தால் அந்த மாட்டைக் கட்டினவன் பராசரரால் சொல்லப்பட்ட பிராஜாபத்யத்தில் கால்பங்கு செய்யக்கடவன்.

ரோதனம்பந்தனம்சைவ பார: ப்ரஹரணம்ததா
துர்க்கப்ரேரணயோக்த்ரம்ச நிமித்தாநிவதஸ்யஷட் 205

(இ - ள்.) தடுத்தல், கட்டுதல், சுமை, அடித்தல், செல்லக்கூடாத விடத்தில் செல்லவைத்தல் புணைகட்டுதல் இந்த ஆறும் கோவதத்திற்குக் காரணங்களாகும்.

பந்தபாஸஸுகுப்தாங்கோம்ரியேதயதிகோபஸு:
பவநேதத்ரபாபீஸ்யாத் ப்ராயஸ்சித்தார்தமர்ஹதி 206

(இ-ள்.) கட்டுக்கயிற்றால் சுற்றிக்கொண்டு பசுவானது எந்த வீட்டில் மரிக்கிறதோ அந்த வீட்டுக்காரன் பாபியாகிறான் அவனுக்கு கோவதப்பிராயச்சித்தத்தில் பாதி பிராயச்சித்தம்.

நநாரிகேளைர்நசஸாணபாஸைர்நசாபிமௌஞ்ஜைர்ந
சவல்கச்ருங்கலை:
ஏதைஸ்துகாவோயதிபந்தநீயாபத்வாபிதிஷ்டேத்
பரஸும்க்ருஹீத்வா. 207

(இ - ள்.) தென்னநார்க் கயிறுகளாலும் சணப்பைக் கயிறுகளாலும் முஞ்சிப்புல்லின் கயிறுகளாலும் பஞ்சு நூற்கயிறுகளாலும் இரும்பு சங்கிலிகளாலும் பசுக்கள் கட்டத் தக்கவைகளல்ல. அப்படி கட்டினாலும் அதற்கு அபாயத்தில் விடுவிக்கும்பொருட்டு கத்தியைக் கைக்கொண்டருகிலிருக்கவேண்டும்.

குஸை:காஸைஸ்சபத்நீயாத் கோபஸும்
தக்ஷிணாமுகம் 208

(இ - ள்.) கோக்களை தர்ப்பக்கயிற்றாலும் நாணல் கயிற்றாலும் தெற்கு முகமாகக் கட்டவேண்டும்.

பாஸலக்நாக்நி தக்தேது ப்ராயஸ்சித்தம் நவித்யதே 209

(இ - ள்.) கயிற்றில் நெருப்புப்பற்றிக்கொண்டு பசுவில்பற்றி பசு இறந்தாலதற்குப் பிராயச்சித்தமில்லை.

யதிதத்ரபவேத்காஷ்டம் ப்ராயஸ்சித்தம்கதம்பவேத்
ஜபித்வாபாவநீம்தேவீம் முச்யதேதத்ரகில்பிஷாத் 210

(இ - ள்.) அந்த தர்ப்பை நாணல்கயிறுகளில் வேர் கட்டையிருந்து அதில் தீப்பற்றி பசுவின்கழுத்தில் பற்றி ஞல் பரிசுத்தமான காயத்ரியை ஜபித்து பாவத்திலிருந்து விடப்படுகிருன்.

ப்ரேரயன்கூபவாபிஷு வ்ருக்ஷச்சேதேஷு பாதயந்
கவாஸநேஷு விக்ரீணம் ததாப்ராப்நோதிகோர்வதம் 211

(இ - ள்.) கிணறு நடவாபி இவைகளில் மாட்டை யோட்டினுலும் மரம்வெட்டுகிறவிடத்தில் லோட்டி ஞலும் மாடுதின்கிறவர்களுக்கு வித்தாலும் கோவதத் தையடைகிருன்.

ஆராதிதஸ்துய:கச்சித் பிந்நவக்ஷாயதாபவேத்
ஸ்ரவணம்ஹ்ருதயம்பிந்நம் மக்நோவாகூபஸங்கடே
கூபாதுத்க்ரமணேநைவ பக்நோவாக்ரீவபாதயோ:
ஸஏவம்ரியதேதத்ர த்ரீந்பாதாம்ஸ்துஸமாசரேத். 212

(இ - ள்) விருஷபோத் ஸர்ஜனம்முதலான கிரியை களில் விட்டுத் துறத்தப்பட்ட எருதானது மார்பிளந் தாலும் காதறந்தாலும் வயிறுகிழிந்தாலும் பாழுங்கிணற் றில் மூழ்கினுலும் கிணற்றிலிருந்து கிளம்புங்காலத்தில் கால்கழுத்து முறிந்தாலும் மேல்கூறிய விருஷபமிறந்தால் முக்கால் கிருச்ரம் பிராயச்சித்தம் விருஷபத்தைவிட்டவன் செய்யவேண்டியது.

கூபகாதேதடாபந்தே நதீபந்தேப்ரபாஸு ச
பாநீயேஷுவிபந்நாநாம் ப்ராயஸ்சித்தம்நவித்யதே. 213

(இ - ள்.) நடவாபியிலும் பெரிய தடாகத்திலும் அணைக்கட்டிலும் பெரிய மரத்தொட்டிகளிலும் தண்ணி குடிக்கச்சென்று கோக்களிறந்தால் அவை யுடைய வனுக்கு பிராயச்சித்தமில்லை.

கூபகாதேநதீகாதே தடாகாதேததைவச
அந்யேஷுதர்மகாதேஷு ப்ராயஸ்சித்தம்
நவித்யதே. 214

(இ - ள்.) தர்மத்துக்கு வெட்டப்பட்ட கிணற்றிலும் ஆற்றிலும் தடாகத்திலும் வேறுதர்மத்திற்கு வெட்டப் பட்ட வாய்க்கால் முதலியதுகளில் பசுவிழுந்திறந்தால் தர்மஞ்செய்தவனுக்கு பிராயச்சித்தமில்லை.

வேஸ்மத்வாரேநிவாஸேஷு யோநர:காதுமிச்சதி
ஸ்வகார்யக்ருஹகாதேஷுப்ராயஸ்சித்தம்வி
நிர்திஸேத். 215

(இ - ள்.) தர்மத்துக்கல்லாமல் தன்வீட்டின் வாசலி லாவது வீட்டிலாவது பள்ளம்வெட்டியிருந்து அதில் பசு விழுந்திறந்தால் பிராயச்சித்தம் விதிக்கவேண்டும்.

நிஸிபந்தநிரோதேஷு ஸர்பவ்யாக்ரஹதேஷுச
அக்நிவித்யுத்விபந்நாஸு ப்ராயஸ்சித்தம்நவித்யதே. 216

(இ - ள்) இரவில் கட்டுத்தறியிலும் அடைத்தவிடத் திலும் சர்ப்பத்தினலாவது புலியினலாவது அறையப் பட்டாலும் நெருப்பு இடி இவைகளால் பசு இறந்தால் அவைகளைக் கட்டினவனுக்கு பிராயச்சித்தமில்லை.

க்ராமகாதேஸரெளகேண வேஸ்மபங்காந்நிபாதநே
அதிவ்ருஷ்டிஹதாநாம்ச ப்ராயச்சித்தம் நவித்யதே 217

(இ - ள்.) கிராமத்தில் சண்டைநடக்கையில் பாணம் விழுவதாலும் வீடு இடிந்துவிழுவதாலும் அதிகமழையி ஞலுமிறந்தால் பிராயச்சித்தமில்லை.

ஸங்க்ராமேநிஹதாயேச யேதக்தாவேஸ்மகேஷுச
தாவாக்நிக்ராமகாதேஷு ப்ராயஸ்சித்தம்நவித்யதே. 218

(இ - ள்.) யுத்தத்திலடிக்கப்பட்ட பசுக்கள் விஷயத் திலும் சத்துருக்களால் கொளுத்தப்பட்ட வீட்டிலிறந்த பசுக்கள் விஷயத்திலும் காட்டுத்தீயா லெரிக்கப்பட்ட கிராமத்தி லிருக்கும் பசுக்கள்விஷயத்திலும் பிராயச்சித்த மில்லை.

யந்த்ரிதாகௌச்சிகித்ஸார்தம் கூடகர்ப்பவிமோசநே
யத்நேக்ருதேவிபத்யேத ப்ராயஸ்சித்தம்நவித்யதே. 219

(இ - ள்.) வைத்யம் செய்வதற்கு கட்டப்பட்ட பசுவும் கன்று போடமாட்டாத காலத்தில் சிகிச்சை செய்ய யத்தனிக்கப்பட்ட பசுவுமிறந்தால் அப்படிசெய்ய ஆரம்பித்தவனுக்கு பிராயச்சித்தமில்லை.

வ்யாபந்நாநாம்பஹூநாம்ச பந்தநேரோதநேபிசா
பிஷங்மித்யாப்ரசாரேண ப்ராயசித்தம்விநிர்திஸேத். 220

(இ - ள்) கட்டுத்தறியிலாவது தடுத்து அடைத்த விடத்திலாவது வயித்யம் செய்வதில் பிசகினாலாவது ஒரு ராத்திரியில் அனேகம் பசு மாடிறந்தால் முன்சொன்ன பிராயச்சித்தத்தை யிரட்டித்து செய்யவேண்டும்.

கோவ்ருஷாணும்விபத்தௌச, யாவந்த:ப்ரேக்ஷகாஜநா :
அநிவாரயதாம்தேஷாம் ஸர்வேஷாம்பாதகம்பவேத் 221

(இ-ள்) பசுக்களும் காளைகளும் ஆபத்தையடையுங் காலத்தில் பார்த்துக்கொண்டிருந்தால் அவைகளைவிலக் காவிடில் அப்படியிருந்தவர்களுக்கு பாதகமுண்டு.

.ஏகோஹதோயைர் பஹூபிஸ்ஸமேதைர்ந ஜ்ஞாய தேயஸ்ய ம்ருதோபிகாதாத்! திஷ்டேநதேஷா முபலப்ய ஹந்தா நிவர்த்தநீயோ ந்ருபஸந்நியுக்தை:. 222

(இ - ள்.) அனேகம்பேர் மாட்டையடித்தபோதிலும் யாருடைய அடியினுலிறந்ததோ அது தெரியாமற் போனல் அவனை யரியும்பொருட்டு அரசனல் ஏற்படுத்தப் பட்டவர்கள் தைவிகமாக சாக்ஷியத்தைக்கொண்டு நிச்சயப்படுத்தவேண்டும்.

ஏகாசேத்பஹூபி:காசித்தை வாத்வ்யாபாதிதாயதி
பாதபாதம்துஹத்யாயாம் சரேயுஸ்தேப்ருதக்ப்ருதக். 223

(இ-ள்.) ஒரு பசு அனேகர்களால் கொல்லப்பட்டால் ஒவ்வொருவரும் தனித்தனியே கால்பங்கு பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

ஹதேஷூருதிரம்த்ருஸ்யம்வ்யாதிக்ரஸ்த: க்ருஸோபவேத்
லாலாபவதிதந்தேஷூ ஏவமந்வேஷணம்பவேத். 224

(இ-ள்.) கொன்றால் ரத்தம்வடியும்; வியாதியாயின் இளைக்கும்; பாம்புகடித்தால் பற்களில் நீர்வடியும் என்று இறந்தமாட்டை காரணமாராயவேண்டும்.

க்ராஸார்தம்சோதிதோவாபி அத்வாநம்சைவகச்சதி. 225

(இ-ள்.) அடித்தபிறகு அவனாலேவப்பட்டு புல் மேயப்போன போதிலும் அந்த பசுவின் எலும்பு ஒடிந்திருப்பதை சோதித்து பிராயச்சித்தம் சொல்லவேண்டும்.

மநுநாசைவமேகேந ஸர்வஸாஸ்த்ராணிஜாநதா
ப்ராயஸ்சித்தம்துதேநோக்தம் கோக்நஸ்சாந்த்
ராயணம்சரேத். 226

(இ-ள்.) சகல சாஸ்திரங்களையுமுணர்ந்த ஒப்பற்ற மனுவினாலும் கோவதத்திற்கு சாந்திரராயண விருதத்தைப் பிராயச்சித்தமாக சொல்லப்பட்டது.

கேஸாநாம்ரக்ஷணார்தாய த்விகுணம்வ்ரதமாசரேத்
த்விகுணேவ்ரதஆதிஷ்டே தக்ஷிணாத்விகுணாபவேத். 227

(இ-ள்.) மேலே கூறப்பட்டபடி க்ஷௌரம் செய்துக் கொள்ளாதவன் இரண்டுபங்கு விரதமும் இரட்டித்த தக்ஷிணையும் கொடுக்கக்கடவன்.

ராஜாவாராஜபுத்ரோவா ப்ராஹ்மணோவாபஹுஸ்ருத:
அக்ருத்வாவபநம்தஸ்ய ப்ராயஸ்சித்தம்
விநிர்திஸேத். 228

(இ-ள்.) அரசனாவது அரசன் பிள்ளையாவது மிகவும் தெரிந்த பிராமணராவது கோவதம் செய்தால் அவர்களுக்கு க்ஷௌரத்தை விதியாமல் தெரிந்த பிராயச்சித்தம் விதிக்கவேண்டும்-

ஸர்வாந்கேஸாந்ஸமுத்ருத்யச் சேதயேதங்குலத்வயம்
ஏவம்நாரீகுமாரீநாம் ஸிரஸோமுண்டநம்ஸ்ம்ருதம். 229

(இ-ள்.) பதியுடன் கூடின ஸ்திரீகளுக்கும் கன்னிகைகளுக்கும் கோவதப் பிராயச்சித்தத்தில் எல்லா மயிர்களையுந் தூக்கிக் கட்டி நுனியிலிரண்டு அங்குலம்கத்திரிக்கவேண்டும்.

நஸ்த்ரியா:கேஸவபநந் தூரேஸயநாஸநம்
நசகோஷ்டேவஸேத்ராத்ரௌ நதிவாகா
அநுவ்ரஜேத் 230

(இ - ள்.) ஸ்திரீகளுக்கு மேற்சொன்னது தவிர வேறு க்ஷௌரமில்லை. ஊருக்கு வெளியில் மாட்டுடன் சயனமும் உட்கார்ந்தது மில்லை தொழுவத்தில் ராத்திரி வஸிக்கவேண்டாம்; பகலில் மாட்டுடன்பின் செல்ல வேண்டாம்.

நதீஷுஸங்கமேசைவ அரண்யேஸுவிஸேஷத:
நஸ்த்ரீஞமஜிநம்வாஸோ வ்ரதமேவஸமாசரேத். 231

(இ - ள்.) ஆறுகளிலும் ஆற்றின் சந்திகளிலும் காட்டிலும் திரிய வேண்டாம். தோல்முதலானவைகளை யுடுக்க வேண்டாம் விருதத்தை மாத்திரம் செய்யவேண்டும்.

குர்யாத்ரிஸவ்ணஸ்நாநம் ஸுராஞமர்சநம்ததா
பந்துமத்யேவ்ரதம்தாஸாம் க்ருச்ரம்சாந்த்ராய
ஞதிகம். 232

(இ - ள்.) ஸ்திரீ மூன்று சந்தியிலும் ஸ்நானமும் தேவதார்ச்சனமும் சாந்திராயணவிருதமும் செய்யவேண்டும். இவைகளை பந்துக்களின் நடுவிலிருந்துச் செய்ய வேண்டும்.

க்ருஹேஷுஸததம்திஷ்டேத் சுசிர்நியமமாசரேத். 233

(இ - ள்.) எக்காலத்திலும் ஸ்திரீகள் வீட்டிலிருக்க வேண்டும் பரிசுத்தமாகவிருந்து விருதத்தை நடத்த வேண்டும்.

இஹயோகோவதம்க்ருத்வா ப்ரச்சாதயிதுமிச்சதி
ஸயாதிநரகம்கோரம் காலஸூத்ரமஸம்ஸயம். 234

(இ - ள்.) இவ்வுலகத்தில் எவன் கோவதம்செய்து அதை வெளியிடாமல் மறைக்கிருனே; அவன் உக்ரமான காலசூத்ரமென்னும் நரகத்தையடைகிருன்.

விமக்தோநரகாதஸ்மா ந்மர்த்யலோகேஷு ஜாயதே
க்லீபோ து:கீசகுஷ்டீச ஸப்தஜந்மாநிவைநர:.
தஸ்மாத்ப்ரகாஸயேத்பாபம் நிர்திஷ்டவ்ரதமாசரேத்
ஸ்த்ரீபாலந்ருபகோவிப்ரே ஷ்வதிகோபம்விஸர்
ஜயேத், 235

(இ - ள்.) மேற்கூறிய நரகத்திலிருந்து விடுபட்டு இப் பூமியில் ஏழுபிறப்பு நபும்ஸகனுகவும் துக்கமுடையவனுக வும் குஷ்டரோக முடையவனுகவும் பிறக்கிருன்.

(தஸாக.) ஆதலால் பாவத்தைப் பிரகாசம்செய்து சொன்ன விருதத்தைச் செய்ய வேண்டும். ஸ்திரீ, பாலர் கள், அரசர்கள், பசுக்கள், பிராமணர் இவர்களிடத்தில் கோபம் செய்யக்கூடாது.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

## 10-வது அத்தியாயம்

சாதுர்வர்ண்யேஷுஸர்வேஷு ஹிதாம்வக்ஷ்யாமி
நிஸ்க்ருதிம்
அகம்யாகமநேசைவ சுத்யைசாந்த்ராயணம்சரேத். 236

(இ - ள்.) பிர்ம்ம க்ஷத்திரிய வைச்ய சூத்திரர்க ளென்கிற நான்கு வர்ணங்களிலும் இதமான பிராயச்சித் தத்தைச் சொல்லுகிறேன். புணரத்தகாத ஸ்திரீயைப் புணர்ந்தால் சுத்தியடைவதின்பொருட்டு சாந்திராயண விருதத்தைச் செய்யவேண்டும்.

ஏகைகம்ஹ்ராஸயேத்க்ராஸம் க்ருஷ்ணேசுக்லே
சவர்தயேத்
அமாவாஸ்யாம்நபுஞ்ஜீத ஹ்யேஷசாந்த்ராயணே
விதி: 237

(இ - ள்.) கிருஷ்ணபக்ஷத்தில் தினம் ஒவ்வொருகபள மாக அன்னத்தைப் பதினைந்து கபளங்களில்நின்றும் குறைக்கவேண்டும், சுக்லபக்ஷத்தில் தினம் ஒவ்வொரு கபளமாக விருத்தி செய்ய வேண்டும். அமாவாசையில்

போஜனம் செய்யக்கூடாது. இதுவே சாந்திராயண விருதத்தின் விதி.

குக்குடாண்டப்ரமாணந்து க்ராஸம்வைபரிகல்பயேத்
அந்யதாபாவதோஷேண நதர்மோநசசுத்யதி. 238

(இ - ள்.) மேற்சொன்னபடி புசிக்கிற கபலம் கோழி முட்டை ப்ரமாணமாக விருக்கவேண்டும். அதற்கு மேற்பட்டால் அந்த தோஷத்தால் பரலோகத்திற்குக் காரணமான தர்மமும் கிடையாது. அந்தவிருதம் செய்பவன் சுத்தியடையான்.

ப்ராயச்சித்தே தத்ஸீர்ணே குர்யாத்ப்ராஹ்மண
போஜநம்
கோத்வயம்வஸ்த்ரயுக்மம்ச தத்யாத்விப்ரேஷு
தக்ஷிணாம். 239

(இ - ள்.) மேற்சொன்ன விதமாகப் பிராயச்சித்தம் முடிந்தபிறகு பிராமண போஜனம் செய்துவைப்பதுடன் இரண்டு கோதானமும் இரண்டு வஸ்திரதானமும் பிராமணர்களுக்கு தக்ஷிணையும் கொடுக்கவேண்டும்.

சண்டாலீம்வாஸ்வபாகீம்வா அநுகச்சதியோத்விஜ:
த்ரிராத்ரமுபவாஸித்வாவிப்ராணும நுஸாஸநாத்
ஸஸிகம்வபநம்க்ருத்வா ப்ராஜாபத்யத்வயம்சரேத்
கோத்வயம்தக்ஷிணும்தத்யாச்சுத்திம்பாராஸரோ
ப்ரவீத் 240

(இ - ள்.) பிராமணன் சண்டாள ஸ்திரீயையாவது சக்கிலிஸ்திரீயையாவது புணர்ந்தால் பிராமணர்களுடைய அனுமதிபெற்று மூன்றுநாள் உபவாஸமிருந்து சிகையுடன் வபனம் செய்துகொண்டு இரண்டு பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரண்டு கோக்களை தக்ஷிணையாகக்கொடுத்து சுத்தியடைகிருனென்று பராசரர் சொன்ஞர்.

க்ஷத்ரியோவாதவைஸ்யோவா சண்டாலீம்கச்சதோயதி
ப்ராஜாபத்யத்வயம்குர்யாத் தத்யாத்கோமிதுநத்
வயம். 241

(இ - ள்.) க்ஷத்திரியனாவது வைச்யனாவது சண்டாள ஸ்திரீயைப் புணர்ந்தால் இரண்டு பிராஜாபத்ய கிருச்ரத்தைச்செய்து விருஷபங்களோடுகூடின இரண்டு பசுக்களை தானம்செய்யவேண்டும்.

ஸ்வபாகீம்வா தசண்டாலீம் சூத்ரோவாயதிகச்சதி
ப்ராஜாபத்யஞ்சரேத் க்ருச்ரம்சதுர்கோமிதுநம்
ததத். 242

(இ - ள்.) சூத்திரன் சண்டாள ஸ்திரீயையாவது சக்கிலி ஸ்திரீயையாவது புணர்ந்தால் பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து விருஷபங்களோடு கூடின நான்கு கோ தானம் செய்ய வேண்டும்.

மாதரம்யதிகச்சேத்து பகிநீம்ஸ்வஸுதாம்ததா
எதாஸ்துமோஹிதோகத்வா த்ரீணிக்ருச்ராணிஸஞ்சரேத்
சாந்த்ராயணத்ரயம்குர்யா ஸ்சிச்நக்சேதேந
ஸுத்யதி. 243

(இ - ள்.) தாயையாவது தங்கையையாவது தன் பெண்ணையாவது எவன் மோகித்தவனாய்ப் புணர்கிறானோ; அவன் மூன்று கிருச்ரங்களைச்செய்து மூன்று சாந்திராயணங்களையும்செய்து சிச்னத்தையறுத்தபிறகு சுத்தியடைகிறான்.

மாத்ருஷ்வஸ்ருகமேசைவ மாத்மமேட்ரநிகர்தநம். 244

(இ - ள்.) தாயுடன்பிறந்த சிறுதாயாரைப் புணர்ந்தாலும் மேற்சொன்னவண்ணமாகவே சிச்னத்தையறுக்கவேண்டும்.

அஜ்ஞாநேநதுயோகச்சேத் குர்யாச்சாந்த்ராயணத்வயம்
தஸகோமிதுநம்தத்யாத் சுத்திம்பாராஸரோப்ரவீத். 245

(இ - ள்.) தெரியாமல் மேற்சொன்னவர்களைப் புணர்ந்தால் இரண்டு சாந்திராயணம்செய்து விருஷபங்களோடுகூடிய பத்து கோதானமும் செய்து சுத்தனாகிறானென்று விருத்த பராசரர்சொன்னார்.

பித்ருதாராம்த்ஸமாருஹ்யமாதுராப்தாந்துப்ராத்ருஜாம்
குருபத்நீம்ஸ்நுஷாம்சைவ ப்ராத்ருபார்யாம்ததைவச.
மாதுலா நீம்சகோத்ராம்ச ப்ராஜாபத்யத்ரயம்சரேத்
கோத்வயம்தக்ஷிணாம்தத்யாச் சுத்யதே நாத்ரஸம்ஸய: 246

(இ - ள்.) தாயைத்தவிர மாற்றாந்தாய்களையும் தாய்க்குத் துணைவியானவளையும் உடன் பிறந்தவனுடைய பெண்களையும் குருவின் பத்நியையும் மருமகளையும் உடன் பிறந்தவன் மனைவியையும் அம்மான் மனைவியையும் தன் கோத்திரத்தில் வந்தவளையும் புணர்ந்தவன் மூன்று பிராஜாபத்யங்களைச் செய்து இரண்டு கோக்களை தக்ஷிணையாகக் கொடுத்து சுத்தனாகிறான்.

பஸுவேஸ்யாதிகமநே மஹிஷ்யுஷ்டீம்கபீம்ததா
கரீம்சஸூகரீம்கத்வா ப்ராஜாபத்யம்ஸமாசரேத். 247

(இ - ள்.) பசுக்களையும் தாஸி முதலியவர்களையும் புணர்ந்தாலும் எருமை, ஒட்டை, குரங்கு, கழுதை, பன்றி இவைகளைப் புணர்ந்தாலும் பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்யவேண்டும்.

கோகாமீசத்ரிராத்ரேண காமேகாம்ப்ராஹ்மணோ
ததத் 248

(இ - ள்.) பசுவைப்புணர்ந்த பிராமணன் த்ரிராத்ர கிருச்ரத்தையும் ஒருகோதானத்தையும் செய்யவேண்டும்.

மஹிஷ்யுஷ்ட்ரீகரீகாமீ த்வஹோராத்ரேணஸுத்யதி. 249

(இ - ள்.) எருமை. ஒட்டகம். கழுதை யிவைகளைப் புணர்ந்தவன் ஒருதின கிருச்ரத்தால் சுத்தனாகிறான்.

டாமரேஸமரேவாபி துர்பிக்ஷேவா ஜநக்ஷயே
பந்தீக்ராஹேபயார்தௌவாஸதாஸ்வஸ்த்ரீம்
நிரீக்ஷயேத் 250

(இ - ள்.) தேசங்களுடைய உபத்திரவத்திலாவது யுத்தத்திலாவது அன்னமில்லாதகாலத்திலாவது வியாதி முதலிய பீடைகளால் ஜனங்கள் நசிக்கையிலாவது காரா

இருகத்திலாவது பயத்தினு லுண்டான பீடையிலாவது இக்காலங்களில் தன் ஸ்திரீயை ரக்ஷித்து நோக்கக் கடவன்.

சண்டாளைஸ்ஸஹஸம்பர்கம் யாநாரீகுருதேதத:
விப்ராந்தஸாவராங்க்ருத்வா ஸ்வகம்தோஷம்
ப்ராகாஸயேத்
ஆகண்ட ஸம்மிதேகூபே கோமயோதககர்த்தமே
தத்ரஸ்தித்வாநிராஹாரா த்வஹோராத்ரேணநிஷ்க்ர
ஸஸிகம்வபநம்க்ருத்வா புஞ்ஜீயாத்யாவகோதநம் [மேத்-
த்ரிராத்ரமுபவாஸித்வா த்வேகராத்ரம்ஜலேவஸேத்.
ஸங்கபுஷ்பலதாமூலம் பத்ரம்வாகுஸுமம்பலம்
ஸுவர்ணம்பஞ்சகவ்யஞ்ச க்வாதயித்வாபிபேஜ்ஜலம்.
ஏகபக்தம்சரேத்பஸ்சாத் யாவத்புஷ்பவதிபவேத்
வ்ரதம்சரதிதத்யாவ த்தாவத்ஸம்வர்ததேபஹி: 251

(இ - ள்.) பிராமணஸ்திரீயானவள் சண்டாளனேடு புணர்ந்தால் அந்த ஸ்திரீ பத்துக்குமேற்படாத பிராமணர்களை பரிஷத்தாக வேற்படுத்திக்கொண்டு தன் தோஷத்தைப் பிரகாசம் செய்யவேண்டும். பிறகு கழுத்தளவுமான பள்ளத்தில் சாணிஜலத்தை நிறைத்து ஒருதினம் அதில் ஆஹாரமில்லாமலிருந்து பிறகு மறுநாள் குடுமியுடன் சேர்த்து க்ஷௌரம் செய்துகொண்டு யவத்தால்சமைத்த அன்னத்தையுண்டு பிறகு மூன்றுநாள் உபவாஸமிருந்து பிறகு ஒருநாள் ஜலத்தில் கழுத்தளவாக நின்று சங்குப்பூஎன்கிற ஒருவித ஓஷதிகொடி, கிழங்கு, இலை, பூ, பழம், சுவர்ணம், பஞ்சகவ்யம் இவைகளையிட்டு ஜலத்தைக்கொதிப்பித்துக்குடித்து பிறகு ரஜஸ் உண்டாகிறவரையில் ஒருநாளைக்கு ஒருவேளை சாப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டும் இவ்விருதம் முடியும்வரையில் வெளியிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கவேண்டும்.

ப்ராயஸ்சித்தேததஸ்சீர்ணே குர்யாத்ப்ராஹ்மண
போஜநம்
கோத்வயம்தக்ஷிணும்தத்யா ச்சுத்திம்பாராஸரோப்ர
வீத். 252

(இ - ள்.) மேற்சொன்னவிதமாகப் பிராயச்சித்தம் முடிந்தபிறகு பிராமணபோஜனம் செய்வித்து இரண்டு கோதானம் செய்யவேண்டும் மென்று விருத்த பராசரர் சொன்னார்.

சாதுர்வர்ண்யஸ்யநாரீணும் க்ருச்சரம்சாந்த்ராயணம் ஸ்ம்ருதம்
யதாபூமிஸ்ததாநாரீ தஸ்மாத்தாந்நதுதூஷயேத். 253

(இ - ள்.) நான்குவர்ணத்திய ஸ்திரீகளுக்கும் பொதுவாக உண்டான சங்கமத்திற்கு சாந்திராயனம் விதிக்கப் பட்டது. பூமி யெப்படியோ; அப்படியே ஸ்திரீகளும். ஆகையால் அவர்களை தூஷிக்கக்கூடாது

பந்தீக்ராஹேணயாபுக்தா ஹத்வாபத்வாபலாத்பயாத்
க்ருத்வாஸாந்தபநம்க்ருச்ரம்ஸுத்திம்பாராஸ ரோப்ரவீத்.
ஸக்ருத்புக்தாதுயாநாரீ நேச்சந்தீபாபகர்மபி:
ப்ராஜாபத்யேநஸுத்யேத ருதுப்ரஸ்ரவணேநச. 254

(இ - ள்.) எந்த ஸ்திரீ காராகிருகத்திலும் பலாத்காரத்தாலும் பயமுறுத்தியும் கொல்வதாகச்சொல்லியும் கட்டியும் அனுபவிக்கப் பட்டாளோ; அந்த ஸ்திரீ ஸாந்தபந கிருச்ரத்தைச்செய்து சுத்தையாகிறளென்று விருத்த பராசரர் சொன்னார்.

தன்னிச்சையில்லாமல் துஷ்டர்களால் ஒருக்கால் அனுபவிக்கப்பட்ட ஸ்திரி பிராஜாபத்ய கிருச்ரத்தாலும் ரஜஸ்ஸு கண்டத்தாலும் சுத்தையாகிறுள்.

பதத்யர்தம்ஸரீரஸ்ய யஸ்யபார்யாஸுராம்பிபேத்
பதிதார்தசரீரஸ்ய நிஷ்க்ருதிர்நவிதீயதே. 255

(இ - ள்.) எவனுடைய பெண்டாட்டியானவள் கள்ளைக்குடிக்கிறளோ அவளுடைய பர்த்தாவுக்கு சரீரத்தில் பாதிபதிதமாகிறது அப்படிபாதி பதிதமானவனுக்கு பிராயச்சித்தங்கிடையாது. ஆனல் சுராபானத்துக்கு எந்த பிராயச்சித்தமோ; அதுதானிதுக்கும் பிராயச்சித்தம்.

காயத்ரீம்ஜபமாநஸ்து க்ருச்ரம்ஸாந்தபநம்சரேத் 256

(இ - ள்.) பாதிபதிதமான சரீரமுள்ளவன் விருதம் முடியுமளவும் காயத்திரியை சபித்துக்கொண்டு சாந்தபன கிருச்ரத்தைச் செய்யக்கடவன்.

கோமூத்ரம்கோமயம் க்ஷீரம்ததிஸர்பி:குஸோதகம்
ஏகராத்ரோபவாஸஸ்ச க்ருச்ரம்ஸாந்தபநம்ஸ்ம்ருதம்.257

(இ - ள்.) கோமூத்திரம், கோமயம், பால், தயிர், நெய், தர்ப்பை ஜலம் இவைகளில் ஒவ்வொன்றை முறையே ஒவ்வொருநாளாகப் புசித்து கடைசிநாளில் உபவாஸமிருந்தால் சாந்தபனம் என்னும் விருதமாகும்.

ஜாரேண ஜநயேத்கர்ப்பம் ம்ருதேவ்யக்தேகதேபதௌ
தாம்த்யஜேதபரேராஸ்ட்ரே பதிதாம்பாபகாரிணீம். 258

(இ ள்.) எந்த ஸ்திரீ தன்புருஷனிறந்தாலும் போன விடம் தெரியாதிருந்தாலும் தேசாந்தரம் போயிருந் தாலும் பரபுருஷனுல் கர்ப்பந்தரிக்கிருளோ அப்படிப் பட்ட பாவத்தைச்செய்தவளை ஓட்டிவிடவேண்டும்.

ப்ராஹ்மணீ துயதாகச்சேத் பரபும்ஸாஸ்மங்விதா
ஸாதுநஷ்டாவிநிர்தேஸ்யா நதஸ்யாகமநம்புந: 259

(இ - ள்.) பிராமணஸ்திரீ வேறு புருஷனேடு கூடிக் கொண்டு ஓடிப்போனுல் மறுபடியும் அவள் வீட்டுக்கு வரத்தகுந்தவளன்று. அவள் நஷ்டையென்று சொல்லப் படுவள்.

காமாங்மோஹாத்துயாகச்சேத் த்யக்த்வாபந்தூங்பதிம்
ஸுதாங்
ஸாதுநஷ்டாபரேலோகே மாநுஷேஷு விசேஷத:. 260

(இ - ள்.) எந்தஸ்திரீ பந்துக்களையும் பதியையும் பிள்ளைகளையும் விட்டு தேசாந்தரத்தில் காமத்திளுலாவது அக்யானத்தாலாவது வசிக்கிருளோ அவள் மனுஷிய லோகத்தில் நஷ்டையென்னப்படுவள். பரலோகத்திலும் விசேஷமாக நஷ்டையாவள்.

மதமோஹகதாநாரீ க்ரோதாத்தண்டாதிதாடிதா
அத்விதீயாகதாசைவ புநராகமநம்பவேத். 261

(இ - ள்.) மதித்தவளும் சித்தப்பிரமங்கொண்ட ஸ்திரீயும் தடி முதலியவற்ருலடிக்கப்பட்டவளும் வேருெருவரும் சகாயமில்லாமல் ஓடிப்போய் மறுபடி திரும்பி வந்தால் வரலாம்.

தஸமேதுதிநேப்ராப்தே ப்ராயஸ்சித்தம்நவித்யதே
தஸாஹம்நத்யஜேஜ்நாரீம் த்யஜேந்நஷ்டஸ்
ருதாம்ததா. 262

(இ - ள்.) மேற்சொன்னபடி அடிக்கப்பட்டு ஓடினவள் பத்தாவதுநாள் திரும்பிவந்தால் அவளை பிராயச்சித்தம் செய்து சேர்த்துக் கொள்ளக்கூடாது. மேற்சொன்ன பத்துநாளைக்குள் அவள் நஷ்டையென்று கேள்விப்படா விட்டால் பிராயச்சித்தம்செய்து சேர்த்துக் கொள்ள லாம். அதற்குள் நஷ்டையாளுளென்று கேட்டால் அவளை விட்டுவிடவேண்டியது.

பர்தாசைவசரேத்க்ருச்ரம் க்ருச்ரார்தம்
சைவபாந்தவா: 263

(இ - ள்.) ஓடிப்போய் பத்துநாளைக்குள் வியபிசாரம் செய்தாளென்று கேள்விப்பட்ட பிறகு அவளுடைய புருஷன் ஒரு கிருச்ரத்தையும் அவன் பந்துக்கள் அரை கிருச்ரத்தையும் செய்யவேண்டும்

தேஷாம்புக்த்வாசபீத்வாச அஹோராத்ரேண
ஸுத்யதி 264

(இ - ள்.) அப்படி பிராயச்சித்தம் செய்து கொள் ளாதவர்களின் வீட்டில் புசித்தவர்களும் ஜலம் குடித் தவர்களும் ஒருதினம் உபவாஸமிருக்கவேண்டும்.

ப்ராஹ்மணீ துயதாகச்சேத் பரபும்ஸாவிவர்ஜிதா
கத்வாபும்ஸஸ்ஸதம்யாதி த்யஜேயுஸ்தாம்து
கோத்ரிண:. 265

(இ - ள்.) பிராமணஸ்திரீ கோபித்தவளாய் கிரகத் தைவிட்டு ஒரு புருஷனேடும் சேராமல் வெளியேபோனு லும் நூறு புருஷர்களோடு சேர்ந்தவள் போலாகிருள். ஆகையால் அவளை பந்துக்கள் விடவேண்டும்.

பும்ஸாயதிக்ருஹம்சுச்சேத் ததஸ்²த்தம்க்ருஹம்பவேத்
பதிமாத்ருக்ருஹம்கச்சேஜ்ஜாரஸ்யைவதுதத்க்ருஹம். 266

(இ-ள்.) கீழ்ச்சொன்ன பதிதஸ்திரீ தன்சோரபுருஷனோடு தன்பதிமாதா சோரபுருஷன் இவர்களுடைய வீட்டில் வசிக்கப்புகுந்தாலும் அந்தகிருகம் சண்டாளன் வசித்த கிருகம்போல் அசுத்தமாகும்.

உல்லிக்யதத்க்ருஹம்பஸ்சாத் பஞ்சகவ்யேநஸேசயேத்
த்யஜேச்சம்ருண்மயம்பாத்ரம் வஸ்த்ரம்காஷ்டஞ்ச
ஸோதயேத்
ஸம்பாராங்சோதயந்ஸர்வாங் கோகேஸைஸ்சப
லோத்பவாங்
தாம்ராணிபஞ்சகவ்யேந காம்ஸ்யாநிதஸபஸ்மபி:.
ப்ராயச்சித்தம்சரேத்விப்ரோ ப்ராஹ்மணைருபபாதிதம்
கோத்வயம்தக்ஷிணும் தத்யாத்ப்ராஜாபத்யத்வயம்சரேத்
இதரேஷாமஹோராத்ரம் பஞ்சகவ்யம்சயோதநம்
உபவாஸைர்வ்ரதை: புண்யை ஸ்நாநஸந்த்யார்சநாதிபி:.
ஜபஹோமதயாதாநை ஸ்ஸு²த்யந்தேப்ராஹ்மணாதய:
ஆகாஸம்வாயுரக்நிஸ்ச மேத்யம்பூமிகதம்ஜலம்.
நதுஷ்யந்திசதர்பாச்ச யக்ஞேஷு²சமஸாயதா. 267

(இ-ள்.) மேற்சொன்ன பதிதை பிரவேசித்த வீட்டின் மண்ணைக்கீறி பஞ்சகவ்யத்தால் புரோக்ஷித்து மண் பாண்டங்களை யப்பாற்போட்டு துணி மரங்களை நனைத்து வேறு சாமக்ரிகளை சோதித்து தேங்காய் குடுக்கைமுதலானவைகளை பசுவின்மயிரால் சோதித்து தாம்ரங்களை பஞ்சகவ்யத்தாலும் வெண்கலங்களை பத்து தரம் சாம்பலிட்டலம்புவதாலும் சுத்திசெய்யவேண்டும். அந்த வீட்டு பிராமணனும் பிராமணர்களால் விதிக்கப்பட்ட இரண்டு பிராஜாபத்தியத்தையும் இரண்டு கோதானத்தையும் செய்யவேண்டும். அவ்வீட்டிலுள்ள இதரர்களும் ஒருநாளுபவாஸமிருந்து பஞ்சகவ்வியம் சாப்பிட வேண்டும். உபவாஸங்களாலும் விருதங்களாலும் புண்யங்களாலும் ஜபம் ஹோமம் தேவதார்ச்சனை முதலியவைகளாலும் ஜீவகாருண்யம் சந்தியை ஸ்நானம்

தான மிவைகளாலும் பிராமணர் முதலியவர்கள் சுத்தரா கிறார்கள். அதில் ஆகாயம், காற்று, நெருப்பு, பூமியில் விழுந்தஜலம் தர்ப்பம் இவைகள் யாகத்தில் சமஸ என்னும் பாத்திரம் போல் சுத்தமானவைகள்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினொருவது அத்தியாயம்.

அமேத்யரேதோகோமாம்ஸம் சண்டாலாந்நமதாபிவா
யதிபுக்தந்துவிப்ரேண க்ருச்ரம்சாந்த்ராயணஞ்
சரேத். 268

(இ - ள்.) அமேத்யமென்கிற மலமூத்ரங்கள் பட்ட அன்னம் சுக்லம் பசுமாம்சம் சண்டாளனுடைய அன்னம் இவைகளை பிராமணன் புசித்தால் சாந்திரா யணக்ருச்ரம் செய்யவேண்டும்.

ததைவக்ஷத்ரியோவைஸ்யோ ப்யர்த்தம்சாந்த்ராயணஞ்
சரேத்
சூத்ரோப்யேவந்ததாபுங்தே ப்ராஜாபத்யம்
ஸமாசரேத் 269

(இ - ள்.) அப்படிப்பட்ட அன்னத்தை க்ஷத்திரிய னுவது வைசியனுவது புசித்தால் அரைசாந்திராயணம் செய்யவேண்டும். சூத்திரனப்படி புசித்தால் பிராஜா பத்யம்செய்யவேண்டும்.

பஞ்சகவ்யம்பிபேச்சூத்ரோ ப்ரஹ்மகூர்ச்சம்பிபேத்விஜ:
ஏகத்வித்ரிசதுர்காவோ தத்யாத்விப்ராத்யநுக்ரமாத்.270

(இ - ள்.) சூத்திரன் பிராயச்சித்தம் செய்தபின் பஞ்சகவ்யத்தையும் பிராமணன் க்ஷத்ரியன் வைச்யன் இவர்கள் பிரம்மகூர்ச்ச பஞ்சகவ்யத்தையும் சாப்பிட வேண்டும். பிராமணன் முதலாக கிரமமாய் ஒன்று இரண்டு மூன்று நான்கு கோதானங்கள் செய்ய வேண்டும்.

ஸூத்ராந்நம்ஸூதகாந்நஞ்ச அபோஜ்யஸ்யாந்நமேவச
ஸங்கிதம்ப்ரதிஷித்தாந்நம் பூர்வோச்சிஷ்டம்ததைவச.
யதிபுக்தந்துவிப்ரேண அஜ்ஞாநாதாபதோபிவா
ஜ்ஞாத்வாஸமாசரேத்க்ருச்ரம் ப்ரஹ்ம
கூர்ச்சேநபாவநம். 271

(இ-ள்.) சூத்திரனுடைய அன்னமும் தீட்டு உடையவர்களுடைய அன்னமும் சாப்பிடத்தகாதவர்களுடைய அன்னமும் சந்தேகப்பட்ட அன்னமும் விதியால் விலக்கப்பட்ட அன்னமும் பாத்திரத்தில் பரிமாறி புசிக்கப்பட்டு காலாந்தரத்தில் மீந்திருக்கும் மந்த அன்னமும் பிராமணனல் அக்யானத்தாலாவது ஆபத்திலாவது புசிக்கப்பட்டு பிறகு தெரிந்தால் பிராஜாபத்யக்ருச்ரத்தை பஞ்சகவ்யத்துடன் செய்யவேண்டும்.

பாலைர்நகுலமார்ஜாலை ரந்நமுச்சேஷிதம்யதா
திலதர்ப்போதகை:ப்ரோக்ஷ்ய ஸுத்யதேநாத்ர
ஸம்ஸய: 272

(இ-ள்.) குழந்தைகளாலும் கீரி பூனை இவைகளாலும் அன்னம் எச்சிலாக்கப்பட்டால் எள் தர்ப்பம் ஜலம் இவைகளால் புரோக்ஷித்து சுத்தமாக்கிக் கொள்ளலாம்.

ஏகபங்த்யபவிஷ்டாநாம் விப்ராணும்ஸஹபோஜநே
யத்யேகோபித்யஜேத்பாத்ரம் ஸேஷமந்நம்நபோஜயேத்.
மோஹாத்புஞ்ஜீதயஸ்தத்ர பங்தாவுச்சிஷ்டபோஜநே
ப்ராயச்சித்தஞ்சரேத்விப்ர:க்ருச்ரம்ஸாந்தபநஞ்
சரேத். 273

(இ-ள்.) பிராமணர்கள் ஒருவரிசையாக வுட்கார்ந்து போஜனம் செய்கையில் ஒருவன் போஜனபாத்திரத்தை விட்டு எழுந்தால் மற்றவர்களும் புசிக்கக்கூடாது தெரியாமல் புசித்தவன் சாந்தபன கிருச்ரம் செய்யவேண்டும்.

பீயூஷம்ஸ்வேதலசுநம் வ்ருந்தாகபலக்ருஞ்ஜநம்
பலாண்டுவ்ருக்ஷநிர்யாஸ தேவஸ்வகரகாநிச.
உஷ்ட்ரீக்ஷீரம்ம்ருகீக்ஷீர மஜ்ஞாநாத்புஞ்ஜதேத்விஜ:
த்ரிராத்ரமுபவாஸேந பஞ்சகவ்யேநஸுத்யதி. 274

(இ-ள்.) பசு பிரஸவித்து பத்துநாளைக்குட்பட்ட பால் ஒட்டகத்தின்பால், மானின்பால், வெள்ளுள்ளி,

வெண்கத்திரி, கஞ்சா, வெங்காயம், மரங்களின்பிசின், தேவதைகளின் தோட்டத்திலுண்டானவைகள். இவைகளை த்விஜன் புசித்தால் மூன்றுநாளுபவாஸமிருந்து பஞ்சகவ்யம்சாப்பிட்டு சுத்தனுகிறுன்.

மண்டூகம்பக்ஷயித்வாது மூஷிகாமாம்சமேவச
ஜ்ஞாத்வாவிப்ரஸ்த்வஹோராத்ரம் யாவகாந்நேந
ஸு‌த்யதி. 275

(இ-ள்.) தவளை, எலி, இவைகளின் மாம்சத்தைத் தெரியாமல் புசித்தால் ஒரு பகலும் ஒரு ராத்திரியும் யவ அன்னத்தால் சுத்தனுகிறுன்.

க்ஷத்ரியஸ்சாபிவைஸ்யஸ்ச க்ரியாவந்தௌஸு‌சிவ்ரதௌ
தத்க்ருஹேஷு த்விஜைர்போஜ்யம் ஹவ்யகவ்யேஷு
நித்யஸ:. 276

(இ-ள்.) க்ஷத்திரியர் வைச்யர் இவர்கள் தங்களுக்குரிய கிரியைகளைச்செய்தும் பரிசுத்தமானவிருதத்துடனுமிருந்தால் பிராமணர்கள் அவர்களுடைய ஹவ்யகவ்யங்களில் அவர்கள் வீட்டில் போய்தானம் வாங்கலாம்.

க்ருதம்க்ஷீரம்ததாதைலம் பக்ஷயம்ஸ்நேஹேநபாசிதம்
கத்வாநதீதடேவிப்ரோ யுஞ்ஜீயாச்சூத்ரபோஜநம். 277

(இ-ள்.) நெய், பால், எண்ணை, எண்ணையாற்செய்த பக்ஷயங்கள் இவைகள் சூத்திரனுடையதாகிலும் நதிக்கரையில் கொண்டுபோய் பிராமணன் புசிக்கலாமென்று த்வாபரயுகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மத்யமாம்ஸரதம்நித்யம் நீசகர்மப்ரவர்த்தகம்
தம்ஸூத்ரம்வர்ஜயேத்விப்ர ஸ்வபாகமிவதூரத: 278

(இ-ள்.) கள், மாம்ஸம், இவைகளில் அக்கிரமம் கெட்டகாரியங்களைச் செய்துகொண்டுமிருக்கிற சூத்திரர்களை பிராமணன் சக்கிலியைப்போல் தூரவிடவேண்டும்.

த்விஜஸிஸ்ருஷணரதாந் மத்யமாம்ஸவிவர்ஜிதாந்
ஸ்வகர்மநிரதாந்நித்யம் தாந்ஸூத்ராந்நத்யஜேத்விஜ:279

(இ-ள்.) இருபிறப்பாளர்களான தனக்கு முந்தினவர்களுடைய சுச்ரூஷையில் முயன்றும், கள், மாம்ச, மிவைகளைத் தவிர்ந்தும் தன் தொழிலிலிருந்தும் வருகிற அந்த சூத்திரர்களை விடக்கூடாது.

அஜ்ஞாநாத்புஞ்ஜதேவிப்ர ஸ்ஸூத்தகேம்ருதகேபிவா
ப்ராயஸ்சித்தம்கதம்தேஷாம் வர்ணேவர்ணேவிநிர்தி [சேத்.
காயத்ர்யஷ்டஸஹஸ்ரேண ஸுத்திஸ்யாத்
ஸூத்ரஸூதகே

வைஸ்யேபஞ்சஸஹஸ்ரேண த்ரிஸஹஸ்ரேணக்ஷத்ரியே.
ப்ராஹ்மணஸ்யயதாபுங்கே த்வேஸஹஸ்ரேதுஜாபயேத்
அதவாவாமதேவ்யேந ஸாம்நாசைகேநஸுத்யதி.

(இ-ள்.) பிராமணன் மரணசௌசத்திலாவது ஜநநாசௌசத்திலாவது தெரியாமல் சூத்திரன் முதலியவர்களின் தீட்டன்னத்தைப் புசித்தால் பிராயச்சித்தம் எப்படி எனில்-தீட்டுள்ள சூத்திரனன்னத்தைப் பிராமணன் புசித்தால் எண்ணுயிரம் காயத்திரிஜபத்தாலும் தீட்டுள்ள வைச்யனன்னத்தைப் புசித்தால் ஐயாயிரம் காயத்திரியாலும் தீட்டுள்ள க்ஷத்திரியன்னத்தைப் புசித்தால் மூவாயிரம் காயத்திரியாலும் தீட்டுள்ள பிராமணனன்த்தைப் புசித்தா லிரண்டாயிரம் காயத்திரியாலும் இல்லாத பட்சத்தில் வாமதேவ்யமென்கிற ஒரு ஸாமத்தைச் சொல்வதாலும் சுத்தனுகிருன்.

ஸுஷ்காந்நம்கோரஸம்ஸ்நேஹம்ஸூத்ரவேஸ்மந ஆகதம்
பக்வம் விப்ரக்ருஹேஸக்தம் போஜ்யம்
தந்மநுரப்ரவீத். 281

(இ-ள்.) நெல் அரிசி முதலானவை, பால் எண்ணை இவைகளை சூத்திரன் வீட்டிலிருந்து பிராமண கிருகத்தில் கொண்டுவந்து பாகம் செய்தால் அவற்றை புசிக்கலாமென்று மனு சொன்னுர்.

ஆபத்காலேதுவிப்ரேண புக்தம்ஸூத்ரக்ருஹேயதி
மநஸ்தாபேநஸுத்யேத த்ருபதாம்வா ஜபேச்சதம். 282

(இ-ள்.) ஆபத் காலத்தில் பிராமணன் சூத்திரர் வீட்டில் போஜனம் செய்தால் பிறகு பச்சாத்தாபத்தால் சுத்தனுகிருன். இல்லாவிடில் துருபதை யென்னும் ருக்கை நூறுதரம் ஜபித்தாலும் சுத்தியடைவான்.

தாஸநாபித கோபால குலமித்ரார்தசீலிந:
ஏதேஸூத்ரேஷுபோஜ்யாரந்நா யஸ்சாத்மாநம்
நிவேதயேத். 283

(இ-ள்.) சூத்திரர்களுக்குள் தாஸன் நாவிதன் கோபாலன் குலமித்ரன் அர்த்தசீலி ஆத்மநிவேதகன் இந்த ஆறுபேரிடத்திலும் பிராமணர்கள் நெய் பால் தயிர் முதலியவைகளை வாங்கி சாப்பிடலாம்.

ஸூத்ரகந்யாஸமுத்பந்நோ ப்ராஹ்மணேநதுஸம்ஸ்க்ருத:
ஸம்ஸ்காராத்து பவேத்தாஸ அஸம்ஸ்காராத்துநாபித:
க்ஷத்ரியாச்சூத்ரகந்யாயாம் ஸுதோஜாயேதநாமத:
ஸகோபால இதிஞ்ஞேயோபோஜ்யோவிப்ரைர்நஸம்ஸய:
வைஸ்யகந்யாஸமுத்பூதோ ப்ராஹ்மணேநதுஸம்ஸ்க்ருத:
ஸஹார்திக இதிஞ்ஞேயோ போஜ்யோவிப்ரைர்ந
ஸம்ஸய:. 284

(இ-ள்.) சூத்திரஸ்திரீயினிடத்தில் பிராமணனுலுண்டாய் பிராமணனுல் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவன் தாஸனென்றும், அப்படியுண்டாய் ஸம்ஸ்காரம் செய்யப்படாதவன் நாவிதனென்றும், சூத்திரஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன் பெயரினுல் கோபாலன் என்றும், வைச்யனுக்கு சூத்திரஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் குலமித்திரனென்றும், வைசியஸ்திரீயினிடத்தில் பிராமணனுலுண்டாய் பிராமணனுல் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவன்-ஆர்த்திகன்-அல்லது அர்த்தசீலியென்றும், மனது-வாக்-காயம்-இவைகளின் தொழிலால் பிராமணனையே சரணமடைந்த சூத்திரன் ஆத்மநிவேதக னென்றும் பெயர்பெறுவர். இவர்களிடத்தில் பிராமணர்சந்தேகமில்லாமல் புசிக்கலாம்.

பாண்டஸ்திதமபோஜ்யேஷு ஜலம்ததிக்ருதம்பய:
அகாமதஸ்துயோபுக்தே ப்ராயஸ்சித்தம்கதம்பவேத்.
ப்ராஹ்மண:க்ஷத்ரியோவைஸ்ய ஸ்ஸூத்ரோவா
உபஸர்பதி
ப்ரஹ்மகூர்சோபவாஸேனயோஜ்யாவர்ணஸ்யநிஷ்க்ருதி:.

சூத்ராணும்நோபவாஸஸ்ஸ்யா ச்சூத்ரோதா
நோநஸூத்யதி
ப்ரஹ்மகூர்சமஹோராத்ரம் ஸ்வபாகமபிஸோதயேத். 285

(இ-ள்.) சாப்பிடத்தகாத நீசஜாதிகளிடத்திலிருந்து பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் இவர்கள் ஜலம் தயிர் நெய் பால் இவைகளை அவர்கள் பாத்திரத்தோடு குடித்தால் பிராயச்சித்த மென்னவெனில்-ஒரு நாளுபவாஸத்துடன் பிர்ம்ம கூர்ச்ச பஞ்சகவ்யத்தைப் புசித்து சுத்தராகிறார்கள். சூத்திரர்களுக்கு உபவாஸம் விதிக்கத்தக்கதன்று. அவர்கள் தானத்தால் சுத்தராகிறார்கள். ஒருபகல் ஒரு ராத்திரியுபவாஸத்துடன் பிர்ம்ம கூர்ச்ச பஞ்சகவ்யத்தை சாப்பிட்டால் சுத்தமாக்கும்.

கோமூத்ரம்கோமயம்க்ஷீரம் ததிஸர்பி:குஸோதகம்
நிர்திஷ்டமபஞ்சகவ்யந்து பவித்ரம்பாபஸோதநம். 286

(இ-ள்.) பசுவின் மூத்திரம் கோமயம் பால் தயிர் நெய் தர்ப்பத்தோடுகூடியஜலம் இவைகள் சேர்ந்தால் பரிசுத்தமாயும் பாவங்களைப்போக்கத் தக்கதாயுமிருக்கிற பஞ்சகவ்வியமென்னப்படும்.

கோமூத்ரம்க்ருஷ்ணவர்ணயா: ஸ்வேதாயாஸ்சைவ
கோமயம்
பயஸ்சதாம்ரவர்ணயா: ரக்தாயாக்ருஹ்யதேததி 287

(இ-ள்.) கோமூத்திரம் கறுத்த பசுவிடத்திலிருந்தும் வெளுத்த பசுவினிடத்திலிருந்து கோமயமும் தாமிரம் போன்றவர்ணமுள்ள பசுவினிடத்திலிருந்து பாலும் சிவந்த பசுவினிடத்திலிருந்து தயிரும் கிரகிக்கவேண்டும்.

கபிலாயாக்ருதம்க்ராஹ்யம் ஸர்வம்காபிலமேவச.
மூத்ரமேகபலம்தத்யா தங்குஷ்டார்தம்துகோமயம்.
க்ஷீரம்ஸப்தபலம்தத்யாத் ததித்ரிபலமுச்யதே
க்ருதமேகபலம்தத்யாத் பலமேகம்குஸோதகம். 288

(இ-ள்.) கபிலைப்பசுவிலிருந்து நெய்யும் எல்லாமும் கபிலையிலிருந்தாவது கிரகிக்கலாம். கோமூத்திரமொரு

பலமும் பால் ஏழுபலமும் தயிர் மூன்றுபலமும் நெய் ஒரு பலமும் ஒருபலம் தர்பஜலமும் பெருவிரலின் மேல் பாகத்தில் பாதியளவு கோமயமுமிருக்க வேண்டும்.

காயத்ர்யாதாயகோமூத்ரம் கந்தத்வாரே திகோமயம்
ஆப்யாயஸ்வேதிசக்ஷீரம் ததிக்ராவ்ணஸ்ததாததி.
ததாசுக்ரமஸீத்யாஜ்யம் தேவஸ்யத்வாகுஸோதகம்
பஞ்சகவ்யம்ருசாபூதம் ஸ்தாபயேதக்நிஸந்நிதௌ. 289

(இ-ள்.) காயத்திரியால் கோமூத்திரத்தையும், கந்தத்வாரா என்கிற ருக்கால் கோமயத்தையும், ஆப்யாயஸ்வ என்கிற மந்திரத்தால் பாலையும், ததிக்ராவ்ண என்கிற ருக்கால் தயிரையும், சுக்ரமஸி என்கிறதால் நெய்யையும், தேவஸ்யத்வா என்கிறதால் தர்ப்ப ஜலத்தையும் கிரகித்துருக்கினால் பரிசுத்தமான அந்த பஞ்சகவ்யத்தை அக்னியின் சமீபத்தில் வைக்கவேண்டும்.

ஆபோஹிஷ்டேதிசாலோட்ய மாநஸ்தோகேபி
மந்த்ரயேத். 290

(இ-ள்.) ஆபோஹிஷ்டா என்கிறதால் கலந்து மான ஸ்தோக என்கிறதால் ஜபிக்க வேண்டும்.

ஸப்தாவராஸ்துயேதர்பா அச்சிந்நாக்ராஸ்ஸுகத்விஷ:
ஏதைருத் த்ருத்யஹோதவ்யம் பஞ்சகவ்யம்யதாவிதி. 291

(இ-ள்.) ஏழு தர்ப்பங்களை நுனிகெடாமலும் உலர்ந்ததிலும் கிளிபிரம் போன்றுமிருக்கும் தர்ப்பங்களால் எடுத்து கிரமப்படி பலாசிலையினால் அக்னியில் ஹோமஞ் செய்ய வேண்டும்.

இராவதீ இதம் விஷ்ணுர்மாநஸ்தோகேதுஸம்வதீ
ஏதாபிஸ்சைவஹோதவ்யம் ஹுதசேஷம்பிபேத்
த்விஜ:. 292

(இ-ள்.) இராவதீ என்றும் இதம் விஷ்ணு ஒன்றும் மானஸ்தோக என்றும் சம்வதி என்றும் சொல்லுகிற மந்திரங்களால் ஹோமஞ் செய்யவேண்டும். ஹோமஞ் செய்து மிகுந்ததை சாப்பிடவேண்டும்.

யத்த்வகஸ்திகதம்பாபம் தேஹேதிஷ்டதிதேஹிநாம்
ப்ரஹ்மகூர்சோதஹேத்ஸர்வம் ப்ரதீப்தாக்நிரி
வேந்தநம். 293

(இ - ள்.) பிராணிகளினுல் செய்யப்பட்டு தோலிலும் எலும்பிலும் ஒட்டியிருக்கும் பாவத்தை பிரம்ம கூர்ச்ச மானது எரிகிற அக்னியாவது விறகைப்போல் கொளுத்திவிடும்.

பவித்ரம்த்ரிஷுலோகேஷு தேவதாபிரதிஷ்டிதம்
வருணச்சைவகோமூத்ரே கோமயேஹவ்யவாஹந:
தத்நிவாயுஸ்ஸமுத்திஷ்ட: ஸோம:க்ஷீரேக்ருதேரவி:. 294

(இ - ள்.) தேவதைகள் பஞ்சகவ்யத்தில் வசிப்பதால் மூன்றுலோகத்திலு மது உயர்ந்தது. கோமூத்திரத்தில் வருணனும் கோமயத்தில் அக்நியும் தயிரில் வாயுவும் பாலில் சந்திரனும் நெய்யில் சூரியனும் வசிக்கிருர்கள்.

பிபத:பதிதம்தோயம் போஜநேமூகநிஸ்ருதம்
அபேயம்தத்விஜாநீயாத்புக்த்வாசாந்த்ராயணம்
சரேத். 295

(இ - ள்.) தண்ணீர் குடிக்குங்காலத்தில் வாயிலிருந்து பாத்திரத்தில் விழுந்த மிகுதி தண்ணீர் குடிக்கத் தக்கதன்று. அப்படி யதை திரைவர்ணிகர் குடித்தால் சாந்திராயணஞ் செய்யவேண்டும்.

கூபேதுபதிதம்த்ருஷ்ட்வா ஸ்வஸருகாலம்சமர்கடம்
அஸ்திசர்மாதிபதிதம் பீத்வாமேத்யா அபோத்விஜ:
நாரம்துகுணபம்காகம் விட்வராஹம்கரோஷ்ட்ரகம்.
காவயமஸாப்ரதீகம்ச மாயூரம்கட்கஜம்ததா
வைய்யாக்ரமார்க்ஷம்ஸைம்ஹ்யம் வாகூபேயதிநிமஜ்ஜதி.
தடாகஸ்யாதத்ருஷ்டஸ்ய பீதம்ஸ்யாதுதகம்யதி
ப்ராயச்சிதம்பவேத்பும்ஸ: க்ரமேணைதேநஸர்வச:.
விப்ரஸ்ஸுத்யேத்த்ரிராத்ரேண க்ஷத்ரியஸ்துதிநத்வயாத்
ஏகாஹேநதுவைஸ்யஸ்துஸுத்ரோநக்தேந
ஸுத்யதி. 296

(இ - ள்,) கிணற்றில் விழுந்திருக்கின்ற நாய் நரி குரங்கு எலும்பு தோல் இவைகளைப் பார்த்து அக்கிணற்றின் நீரைக்குடிக்கக்கூடாது. மனிதன் காகம் நாட்டுப் பன்றி கழுதை ஒட்டகம் கவயமென்னும் மிருகம் புலி கரடி சிங்கம் இவைகள் கிணற்றிலாவது தடாகத்திலாவது மூழ்கி யிறந்து அதின் பிணத்தைப் பார்த்து பிறகு அதின் நீரைக்குடிக்கக்கூடாது. அப்படி குடித்தால் கீழ்வருமாறு பிராயச்சித்தம் செய்யவேண்டும். பிராமணன் குடித்தால் மூன்றுநாள் உபவாஸமும் க்ஷத்திரியன் குடித்தால் இரண்டுதினமும் வைச்யன் ஒருதினமும் சூத்திரன் ஒருராத்திரியும் உபவாஸமிருக்கவேண்டும்.

பரபாகநிவ்ருத்தஸ்ய பரபாகரதஸ்யச
அபசஸ்யசபுக்த்வாந்நம் த்விஜச்சரந்த்ராயணம்
சரேத். 297

(இ - ள்.) பரபாக நிவ்ருத்தனுடையவும் பரபாகரதனுடையவும் அபச னென்பவனுடையவும் அன்னத்தை திரைவாணி கர்புஜித்தால் சாந்திராயணம் செய்யவேண்டும்.

அபசஸ்யதுயத்தாநம் தாதுச் சாஸ்யகுத:பலம்
தாதாப்ரதிக்ருஹீதாச த்வெளதெளநிரயகாமிநௌ. 298

(இ-ள்.) அபசனுக்கு தானம் கொடுக்கக்கூடாது. அவனுக்குக் கொடுத்த தானம் பயனற்றது. அப்படி கொடுத்தவன் வாங்கினவனிருவரும் நரகமடைவார்கள்.

க்ருஹீத்வாக்நிம்ஸமாரோப்ய பஞ்சயக்யாந்நநிர்வபேத்
பரபாகநிவ்ருத்தோஸௌ முநிபி:பரிகீர்த்தித:. 299

(இ-ள்.) அக்னியை கிரகித்துக்கொண்டு அதாவது விவாகம் செய்துகொண்டு ஆத்ம சமாரோபணம் செய்துகொண்டு பஞ்ச யக்யத்தைச் செய்யாதவனைப் ப்ரபாக நிவ்ருத்தன் என்று இருஷிகள் சொல்வார்கள்.

பஞ்சயஜ்யாந்ஸ்வயம் க்ருத்வா பராந்நேநோபஜீவதி
ஸததம்ப்ராதருத்தாய பரபாகரதஸ்துஸ: 300

(இ-ள்.) தினம்தோறும் பஞ்ச யக்யஞ் செய்து கொண்டு அயலானுடைய அன்னத்தாலேயே ஜீவிக்கிறவன் பரபாகரதன் என்னப்படுவன்.

க்ருஹஸ்ததர்மோயோவிப்ரோ ததாதிபரிவர்ஜித:
ருஷிபிர்தர்மதத்வஜ்ஞை ரபச:பரிகீர்த்தித:. 301

(இ-ள்.) கிருகஸ்த தர்மத்திலிருந்துகொண்டு தானமற்றவனுயிருக்கும் பிராமணன் அபசனென்று தர்மம் தெரிந்த இருஷிகள் சொல்லுவார்கள்.

யுகேயுகே துயேதர்மா ஸ்தேஷுதேஷுசயேத்விஜா:
தேஷாம்நிந்தாநகர்தவ்யா யுகரூபாஹிதேத்விஜா: 302

(இ-ள்.) யுகங்கள்தோறும் எந்த தர்மங்கள் சொல்லப்பட்டதோ அந்த யுகங்கள்தோறும் எந்தெந்த த்விஜர்களோ அவர்களை நிந்திக்கக் கூடாது. அவர்கள் யுகத்தையனுசரித்திருப்பவர்கள்.

ஹூம்காரம் ப்ராஹ்மணஸ்யோக்த்வா த்வம்காரம்
சகரீயஸ:
ஸ்நாத்வா திஷ்டந்நஹஸ்சேஷ மபிவாத்யப்ரஸாத
யேத். 303

(இ - ள்.) பிராமணனைப்பார்த்து ஹூங்காரத்தைச் செய்தவனும் பெரியவர்களை நீயென்று சொல்லியும் ஸ்நானம்செய்து மீதிதினம் உபவாஸமிருந்து அவர்களை சேவித்து தெளிவித்துக் கொள்ளவேண்டியது.

தாடயித்வா த்ருணேநாபி கண்டேபத்வாபிவாஸஸா
விவாதேவாபிநிர்ஜித்ய ப்ரணிபத்யப்ரஸாதயேத். 304

(இ - ள்.) புல்லினாலாவது பிராமணனையடித்தும் கழுத்தில் துணியைச்சுற்றியும் பிராமணனை வாதத்தில் ஜயித்துமிருக்கிறவன் அவர்களைத் தெளிவித்துக்கொள்ள வேண்டியது.

அபகூர்யத்வஹோராத்ரம் த்ரிராத்ரம்க்ஷிதிபாதநே
அதிக்ருச்ரம்சருதிரே க்ருச்ரோப்யந்தரஸோணிதே. 305

(இ - ள்.) பிராமணனை யடிக்கும்பொருட்டு கை யோங்கினவன் ஒருதின முபவாஸமும் கீழேதள்ளினல்

மூன்றுநாளும், ரத்தம் புறப்படச்செய்தால் கிருச்ரமும் உள்காயம்பட்டால் அதிகிருச்ரமும் பிராயச்சித்தமும் செய்யவேண்டும்.

நவாஹமதிக்ருச்ரஸ்ஸ்யாத் பாணிபூராந்நபோஜநம்
த்ரிராத்ரமுபவாஸஸ்ஸ்யா ததிக்ருச்ரஸ்ஸஉச்யதே. 306

(இ-ள்.) ஒன்பதுநாள் விருதமிருந்தால் அதிகிருச்ரம் என்னப்படும். அதில் முதல் மூன்றுநாள் மத்தியாந்ந போஜனமும் இரண்டாவது மூன்றுநாள் ராத்திரிபோஜனமும் கடைசி மூன்றுநாளும் சுத்தஉபவாஸமு மிருக்கவேண்டும். சாப்பிடுகிற ஆறுநாளும் தன்கைகள் நிறைந்த அன்னமாத்திரமே சாப்பிடவேண்டும்.

ஸர்வேஷாமேவபாபாநாம் ஸங்கரேஸமுபஸ்திதே
தஸஸாஹஸ்ரமப்யஸ்ய காயத்ரீஸோதநம்பரம். 307

(இ-ள்.) இதற்குமுன் சொல்லப்படாத எல்லா விதமான. பாபங்களுக்கும் பிராயச்சித்தமாக காயத்ரியைப் பதினாயிரம் தரம் ஜபிக்கவேண்டும்; இதுவே உத்தமமான பிராயச்சித்தம்.

பதினொருவது அத்தியாயம் முற்றிற்று.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

துஸ்வப்நம்யதிபஸ்யேத்து வாந்தேதுக்ஷுரகர்மணி
மைதுநேப்ரேததூமேச ஸ்நாநமேவவிதீயதே. 308

(இ-ள்.) கெட்டகனவைக்கண்டாலும் வாந்திசெய்தாலும் க்ஷெளரம்செய்துகொண்டாலும் புணர்ந்தாலும் பிரேதத்தின் புகைபட்டாலும் ஸ்நாநஞ் செய்யவேண்டியது.

அஞ்ஞாநாத்ப்ராஸ்யவிண்மூத்ரம் ஸுராசம்
ஸ்ப்ருஷ்டமேவச
புநஸ்ஸம்ஸ்காரமர்ஹந்தி த்ரயோவர்ணாத்விஜாதய:. 309

(இ-ள்.) த்விஜர்என்கிற மூன்றுவர்ணத்தாரும் தெரியாமல் மல மூத்திரத்தையாவது கள்ளுடன் சம்பந்தப்பட்டதை யாவது சாப்பிட்டால் மறு உபாயனம் செய்துகொள்ளவேண்டும்.

*அஜிநம்மேகலா தண்டோ பைக்ஷசர்யாவ்ரதாநிச*
*நிவர்தந்தேத்விஜாதீநாம் புநஸ்ஸம்ஸ்காரகர்மணி.* 310

(இ-ள்.) அப்படி மறுஉபநயனம் செய்துகொள்ளுங் காலத்தில் கிருஷ்ணஜினம்மிஞ்சி தண்டம் பிச்சை யெடுத்தல் விருதம் இவைகள் தேவையில்லை.

*விண்மூத்ரஸ்யசஸுத்யர்தம் ப்ராஜாபத்யம்சமாசரேத்*
*பஞ்சகவ்யஞ்சகுர்வீதஸ்நாத்வாபீத்வாஸுசிர்ப*
*வேத்.* 311

(இ-ள்.) அறியாமல் மலமூத்திரங்களைப் பானம் செய்தால் பிராஜாபத்ய கிருச்சரத்தையும் பஞ்சகவ்யத்தால் ஸ்நானத்தையும் அப்பஞ்சகவ்யபானத்தையும் செய்யவேண்டும்.

*ஜலாக்நிபதநேசைவ ப்ரவ்ரஜ்யாநாஸகேஷுச*
*ப்ரத்யாவஸிதபர்ணாநாம கதம்ஸுத்திர்விதீயதெ.*
*ப்ராஜாபத்யத்வயேநைவ தீர்தாபீகமநேநச*
*வ்ருஷைகாதஸ்தாநேந வர்ணஸ்ஸுத்யந்திதேத்ரய:.*
*ப்ராஹ்மணஸ்யப்ரவக்ஷ்யாமி வநம்கத்வாசதுஷ்பதே*
*ஸஸிகம்பவநம்க்ருத்வா ப்ராஜாபத்யத்வயம்சரேத்.*
*கோத்வயம்தக்ஷிணாம்தத்யாச் சுத்திம்பாராஸரோப்ரவீத்*
*முச்யதேதேநபாபேந ப்ராஹ்மணத்வம்சகச்சதி.* 312

(இ-ள்.) ஜலம் அக்னி இவைகளில் விழுந்து மீண்டாலும் மகாப்ரஸ்தானமென்கிற மரணாந்தமான காரியத்தில் நின்றும் மீண்டாலும் நான்குவர்ணத்தாருக்குப் பிராயச்சித்தமேதெனில் - இரண்டு பிராஜாபத்யம்செய்து தீர்த்த யாத்திரைசெய்தும் விருஷபத்துடன் கூடின பத்து கோதானஞ்செய்தும் பிராமணன் தவிர மூன்று வர்ணத்தாரும் சுத்தராகிறார்கள். பிராம்மணனுக்குச் சொல்லுகிறேன். நற்சந்தியில் குடிமியுடன் க்ஷௌரஞ் செய்துகொண்டு காட்டைச் சென்று இரண்டு பிராஜாபத்யத்தைச் செய்து இரண்டு கோதானமுஞ்செய்து சுத்தனாகிறானென்று விருத்தபராசரர் சொன்னார். அந்த பாவத்தில் நின்று மவன் நீங்கி பிராமண்யத்தையும் அடைகிறான்.

ஸ்நாநா நிபஞ்சபுண்யாநி கீர்திதாநிமநீஷிபி:
ஆக்நேயம்வாருணம் ப்ராஹ்மம் வாயவ்யம்திவ்ய
மேவச. 313

(இ - ள்.) தெரிந்தவர்களால் ஆக்னேயமென்றும் வாருணயமென்றும் பிராம்மமென்றும் வாயவ்யமென்றும் திவ்யமென்றும் ஸ்நானம் ஐந்துவிதமாகச் சொல்லப்பட்டது.

அக்நேயம்பஸ்மநாஸ்நாந மவகாஹம் துவாருணம்
ஆபோஹிஷ்டே திசப்ராஹ்மம் வாயவ்யம்கோரஜஸ்
ம்ருதம்.
யத்துஸாதபவர்ஷேண தத்ஸ்நாநம்திவ்யமுச்யதே
தத்ரஸ்நாத்வா துகங்காயாம் ஸ்நாதோபவதிமாநவ: 314

(இ - ள்.) சாம்பலைப் பூசிக்கொள்வது ஆக்னேயமென்றும் தண்ணீரில் மூழ்குவது வாருணமென்றும் ஆபோஹிஷ்டா என்கிற மந்திரத்தால் புரோக்ஷிப்பது பிராம்மமென்றும் பசுவின் குளம்பு தூளியில் நிற்பது வாயவ்யமென்றும் வெயிலுடன் கூடினமழையில் நனைவது திவ்யமென்றும் பெயர்பெறும். இவைகளில் ஒவ்வொன்றைச் செய்தால் கங்கையில் ஸ்நாநஞ் செய்தவனாகிறான்.

ஸ்நாதும்யாந்தம்த்விஜம்ஸர்வே தேவா: பித்ருகணை
ஸ்ஸஹ
வாயுபூதாஸ் துகச்சந்தி த்ருஷ்ணார்தாஸ்ஸலிலார்திந: 315

(இ - ள்.) மூழ்கப்போகிற இருபிறப்பாளனை தேவர்கள் பிதுர்க்களுடன்கூட காற்றுக்களாகவிருந்துகொண்டு தாகித்தவர்களாய் ஜலம்வேண்டிப் பின் செல்லுகிறார்கள்.

நிராஸாஸ்தேநிவர்தந்தே வஸ்த்ர நிஷ்பீடநேக்ருதே
தஸ்மாந்நபீடயேத்வஸ்த்ரம க்ருத்வாபித்ருதர்பணம். 316

(இ - ள்.) அப்படிவந்ததே வரும் பிதுர்க்களும் துணியைப் பிழிந்தால் ஆசையற்றும் போய்விடுகிறார்கள். ஆகையால் அவர்களுக்குத் தர்ப்பணஞ்செய்யாமல் வஸ்திரத்தைப் பிழியக்கூடாது.

ரோமகூபேஷ்வவஸ்தாப்ய யஸ்தீலஸ்தர்பயேத்பித்ருன்
தர்பிதாஸ்தேநஸர்வேது ருதிரேணமலேநச. 317

(இ - ள்.) தர்ப்பணஞ்செய்கையில் மயிருள்ள சரீரத்தில் எள்ளை வைத்துக்கொண்டு எவன் தர்ப்பணஞ்செய்கிறானோ அவனுடைய பிதுர்க்கள் ரக்தத்தாலும் மலத்தாலும் தர்ப்பிக்கப்படுகிறார்கள்.

அவதூநோதிய: கேஸாந் ஸ்நாத்வாப்ரஸ்ரவதோத்விஜ:
ஆசாமேத்வாஜலஸ்தோபி ஸபாஹ்யபித்ருதைவதை:318

(இ - ள்.) எவன்ஸ்நானஞ்செய்தவுடன் மயிர்களை யுதறுகிறானோ. ஜலத்திலிருந்தே ஆசமனஞ் செய்கிறானோ, அவன் பிதுர்தேவதைகளால் விலக்கப்படுகிறான்.

ஸிர: ப்ராவ்ருத்யகண்டம்வா முக்தகச்சஸிகோபிவர
விநாயஜ்ஞோபவீதேந ஆசாந்தோப்யஸுசிர்ப்
பவேத் 319

(இ - ள்.) சிரஸில் துணிகட்டிக்கொண்டாவது கழுத்தில் கட்டிக்கொண்டாவது கச்சமில்லாமலாவது தலையவிழ்த்துக்கொண்டாவது யக்ஞோபவீதத்தைச் சரியாக இட்டுக்கொள்ளாமலாவது ஆசமனஞ்செய்தாலும் அசுத்தனவன்.

ஜலேஸ்தலஸ்தோநாசாமே ஜ்ஜலஸ்கஸ்சபஹிஸ்தலே
உபேஸ்ப்ருஷ்ட்வாஸமாசாந்த உபயத்ரஸுசிர்
பபேத் 320

(இ - ள்.) ஜலத்திலிருந்து கொண்டு கரையில் ஜலம் விழும்படியாகவும் கரையில் நின்றுகொண்டு ஜலத்தில் ஜலம் விழும்படியாகவும் ஆசமனஞ் செய்யக்கூடாது. ஒருகால் ஜலத்திலும் மற்றொருகால் கரையிலுமாக ஆசமனஞ் செய்தால் இரண்டு இடத்திலும் சுத்தனவன்.

ஸ்நாத்வாபீத்வாக்ஷுதேஸுப்தே புக்தேஉரத்யாப்ர
ஸர்பணே
ஆசர்ந்த:புநராசாமே த்வாஸோபிபரிதாயச. 321

(இ - ள்.) ஸ்நாநம்செய்தபிறகும் தண்ணீர் குடித்தபிறகும் தும்மல் இருமல் செய்தபிறகும் தூங்கினபிறகும்

சாப்பிட்டபிறகும் தெருவில் போய்வந்தபிறகும் துணி யுடுத்திக்கொண்டபிறகும் இரண்டு ஆசமனம் செய்ய வேண்டும்.

க்ஷுதேநிஷ்டீவநேசைவ தந்தோச்சிஷ்டே ததாந்ருதே
பதிதாநாம்சஸம்பாஷே தக்ஷிணம்ஸ்ரவணம்ஸ்
ருஸேத். 322

(இ - ள்.) தும்மல் செய்தாலும் காறியுமிழ்ந்தாலும் பற்களின் எச்சிலிலும் பொய் சொன்னாலும் பாபி களுடன் பேசினாலும் வலது காதைத் தொடவேண்டும்.

அக்நிராபஸ்சவேதாஸ்ச சோமஸூர்யாநிலாஸ்ததா
ஸர்வஏவதுவிப்ரஸ்ய ஸ்ரோத்ரேதிஷ்டந்திதக்ஷிணே. 323

(இ - ள்.) பிராமணனுடைய வலதுகாதில் அக்நி அப்பு வேதங்கள் சந்திரன் சூரியன் காற்று எல்லாரும் வசிக்கிறார்கள்.

பாஸ்கரஸ்யகரை:பூதம் திவாஸ்நாநம்ப்ரஸஸ்யதே
அப்ரஸஸ்தம்நிஸிஸ்நாநம் ராஹோரந்யத்ரதர்ஸ
நாத். 324

(இ - ள்.) சூரியகிரணங்களால் பரிசுத்தமான மத்தி யானஸ்நானமே யுயர்ந்தது; ராத்திரிஸ்நாநம் சந்திரகிர கணம்தவிர மற்ற காலங்களில் அவ்வளவு உயர்ந்ததன்று.

ஸ்நாநம் தாநம்ஜபோஹோம: கர்தவ்யேராஹுதர்ஸநே
அந்யதாத்வஸுசீராத்ரி ஸ்தஸ்மாத்தாம் பரிவர்ஜ
யேத். 325

(இ - ள்.) சந்திரகிரகணத்தில் ஸ்நாநம், தானம், ஜபம், ஹோமம் இவைகளைச் செய்யக்கடவன். மற்றராத் திரிகள் அப்படி யுயர்ந்ததல்லாததுடன் அபரிசுத்தமான துகள். ஆகையால் மற்றராத்திரிகளில் இவைகளை செய் யக்கூடாது.

மருதோவஸவோருத்ரா ஆதித்யாஸ்ஸைவதேவதா:
ஸர்வேஸோமம்ப்ரதீயந்தே தஸ்மாத்தாநம் துஸங்க்
ரஹே. 326

(இ - ள்.) மருத்துக்கள், வசுக்கள், ருத்திரர்கள், ஆதித்யர்கள் இந்ததேவதைகள் சந்திரகிரகணகாலத்தில் சந்திரனை யடைகிறார்கள் ஆகையாலக்காலத்தில் தானம் உயர்ந்தது.

கலயஜ்ஞேவிவாஹேச ஸங்க்ராந்தௌக்ரஹணேததா
ஸர்வயாம்தரநமஸ்த்யேவ நாந்யத்ரைவம்வீதியதே. 327

(இ - ள்.) கலயக்யத்திலும் விவாகத்திலும் சூர்ய சங்கிராந்தியிலும் கிரகணத்திலும் ராத்திரியில் தானம் செய்யலாம் மற்றராத்திரியில் இப்படி தானம்செய்யக் கூடாது.

புத்ரஜந்மநியஞ்ஞேச ததாசாத்யயகர்மணி
ராஹோஸ்சதர்ஸநேதாநம் ப்ரஸஸ்தம்நாந்யதாநிஸி. 328

(இ – ள் ) பிள்ளை பிறந்தபோதும் யக்ஞத்திலும் மரணத்திலும் சந்திரகிரகணத்திலும் ராத்திரியில் தான முயர்ந்தது. மற்றராத்திரியிலுயர்ந்ததல்ல.

மஹாநிஸாதுவிஜ்ஞேயா மத்யஸ்தப்ரஹரத்வயம்
ப்ரதோஷபஸ்சிமௌயாமௌ திநவத்ஸ்நாநமா
சரேத். 329

(இ - ள்.) ராத்திரி நாலுயாமத்தில் நடுவிலிரண்டு யாமமும் மகாநிசையென்று பெயர்பெறும். முதல் கடைசி யாமங்களில் பகலைப்போன்றதாகையால் ஸ்நானம் செய்யலாம்.

சைத்யவ்ருக்ஷஸ்சிதிர்யூப ஸ்சண்டாலஸ்ஸோமவிக்ரயீ
ஏதாம்ஸ்துப்ராஹ்மணஸ்ப்ருஷ்ட்வா ஸவாஸாஜல
மாவிஸேத். 330

(இ – ள்.) ச்மசானவிருக்ஷம் சிதையின்மரம் யக்யத்தின் யூபஸ்தம்பம் சண்டாளன் சோமலதைவிற் கிறவன். இவைகளை பிராமணன் தொட்டால் உடுத்த வுடையுடன் ஸ்நானம்செய்யவேண்டும்.

அஸ்திஸசஞ்யநாத்பூர்வம் ருதித்வாஸ்நாநமாசரேத்
அந்தர்தஸாஹேவிபரஸ்ய ஹ்யூர்த்வமாசமநம
பவேத். 331

(இ - ள்.) மரித்த பத்துநாட்களுக்குள் மரித்தவனைப் பற்றி அஸ்திஸஞ்சயனத்துக்குமுன் அழுதபிராமணன் ஸ்நானம்செய்யவேண்டும். சஞ்சயனத்திற்குபிறகு அழுதால் ஆசமனம் செய்யவேண்டும்.

ஸர்வம்கங்காஸமம்தோயம் ராஹுக்ரஸ்தேதிவாகரே
ஸோமக்ரஹேதநைவோக்தம் ஸ்நாநதாநாதி
கர்மஸு. 332

(இ - ள்.) சூரியகிரகணத்திலாவது சந்திரகிரகணத்திலாவது எல்லாஜலமும் ஸ்நாநம்செய்யவும் தானம் முதலியது செய்யவும் கங்கைக்கு சமானமாகும்.

குசபூதம்துயத்ஸ்நாநம் குஸேநோபஸ்ப்ருஸேத்திவிஜ:
குஸேநோத்த்ருததோயம்யத் ஸோமபாநஸமம்ப
வேத். 333

(இ - ள்.) தர்ப்பத்தினால் பரிசுத்தமான ஸ்நானமும் தர்ப்பபவித்திரத்தோடு ஆசமனமும் தர்ப்பதோடு சம்பந்தப்பட்டு எடுக்கப்பட்ட ஜலமும் சோமபானத் தோடொக்கும்.

அக்நிகார்யபரிப்ரஷ்டா ஸ்ஸந்த்யோபாஸநவர்ஜிதா:
வேதம்சைவாநதீயாநா ஸ்ஸர்வேதேவ்ருஷலாஸ்
ம்ருதா:. 334

(இ - ள்.) அக்நி காரியங்களை விட்டவர்களும் சந்தியாவந்தனத்தை விட்டவர்களும் வேதாத்யயன மில்லாதவர்களும் சூத்திரர்களுக்கு சமானமாவர்கள்.

தஸ்மாத்வ்ருஷலபீதேந ப்ராஹ்மணேநவிசேஷத:
அத்யேதவ்யோப்யேகதேஸோ யதிஸர்வம்நஸ்க்யதே. 335

(இ - ள்.) ஆதலால் சூத்திரத் தன்மையிலிருந்து நடுங்கினவன் விசேஷித்துப் பிராமணன் வேதத்தை முற்றுமுணர அசக்தனாகில் ஒருபாகமாகிலும் அத்தியயனஞ் செய்யவேண்டும்.

ஸூத்ராந்நரஸபுஷ்டஸ்ய ஹ்யதீயாநஸ்யநித்யஸ:
ஜபதோ ஜுஹ்வதோவாபி கதிரூர் த்வாநவித்யதே. 336

(இ-ள்.) தினம்தோறும் அத்யயனம் செய்தபோதிலும் ஜபம்செய்தபோதிலும் ஹோமங்களைச் செய்தபோதிலும் சூத்திரனுடைய அன்னரசத்தால் வளர்ந்தவனுக்கு ஊர்த்வகதி கிடையாது.

ஸூத்ராந்நம்ஸூத்ரஸம்பர்கம் ஸூத்ரேண துஸஹாஸநம்
ஸூத்ராத்ஜ்ஜாநாகம:கஸ்சித் ஜ்வலந்தமபிபாதயேத். 337

(இ-ள்.) சூத்திரனுடைய அன்னமும் சூத்திரனுடைய சேர்கையும் சூத்திரனோடு சரியாக உட்காருகையும் சூத்திரனிடத்திலிருந்து கல்விப் பயிற்சியும் ஜ்வலிக்கும் புருஷனையும் பாதகியாக்கும்.

யஸ்ஸூத்ர்யாபாசயேந்நித்யம் ஸூத்ராசக்ருஹமேதிநீ
வர்ஜித:பித்ருதேவேப்யோ ரௌரவம்யாதிஸத்விஜ: 338

(இ-ள்.) எந்தத்விஜன் சூத்திர ஸ்த்ரீயினால் பாகம் தினமும் செய்விக்கிறானோ எவனுக்கு பத்நிசூத்திரஸ்த்ரீயோ-அவன் பிதுர்க்கிரியை தேவக்ரியைகளில் நின்றும் நீங்கினவனாய் ரௌரவம் என்கிற நரகத்தையடைகிறான்.

ம்ருதஸூதகபுஷ்டாங்கம் த்விஜம்ஸூத்ராந்நபோஜிநம்
அஹந்தந்நவிஜாநாமி காம்வாயோநிம்கமிஷ்யதி.
க்ருத்ரோ த்வாதஸஜந்மாநி தஸஜந்மாநிஸூகர:
ஸ்வயோநௌஸப்தஜந்மாநி இத்யேவம்மநுரப்ரவித். 339

(இ-ள்.) தீட்டுஉடையவனுடைய அன்னத்தையும் சூத்திரனுடைய அன்னத்தையும் புசிக்கிற த்விஜன் எப்பிறப்பு பிறப்பனோ நானறிகின்றிலேன். பன்னிரண்டு பிறப்புகழுகாகவும் பத்துப்பிறப்பு பன்றியாகவும் ஏழு பிறப்பு நாயாகவும் பிறப்பன் என்று மனுசொன்னார்.

தக்ஷிணார்தம் துயோ விப்ரஸ்ஸூத்ரஸ்யஜுஹுயாத்தவி:
ப்ராஹ்மணஸ்துபவேத்ஸூத்ர ஸ்ஸூத்ரஸ்துப்ராஹ்
மணோபவேத். 340

(இ - ள்.) தக்ஷிணைக்காக எந்தபிராமணன் சூத்திரனுடைய ஹவிஸ்ஸைஹோமஞ் செய்கிறானோ-அந்த பிராமணன் சூத்திரனாகவும் சூத்திரன் பிராமணனாகவுமாய் விடுகிறான்.

மௌநவ்ரதம்ஸமாஸ்ரித்ய ஆஸீநோநவதேத்த்விஜ:
புஞ்ஜாநோஹிவதேத்யஸ்து ததந்நம்பரிவர்ஜயேத். 341

(இ - ள்.) மௌனவிருதத்தை சங்கல்பித்துக் கொண்டு போஜனஞ் செய்கிற த்விஜன்-வார்த்தை சொல்லக்கூடாது. அப்படி வார்த்தைசொன்னால் அந்த அன்னத்தை யெறிந்துவிடவேண்டும்.

அர்த்தர்ம்புக்த்வா துயோவிப்ர ஸ்தஸ்மிந்பாத்ரேஜலம்
பிபேத்
ரூபம்தைவம்சபித்ர்யஞ்ச ஆத்மாநம்சோபபாதயேத் 342

(இ - ள்.) பிராமணன் போஜனம் பாதிசெய்கையில் அந்தபாத்திரத்தில் பாதியன்னத்துடன் ஜலத்தைக்குடித்தால் தான்செய்யும் தேவகிருத்யம் பிதுர்கிருத்யம் இவைகளையும் தன்னையும் அழித்து விடுகிறான்.

புஞ்ஜாநேஷு துவிப்ரேஷு யோக்ரேபாத்ரம்விமுஞ்சதி
ஸமூடஸ்ஸசபாபிஷ்டோ ப்ரஹ்மக்நஸ்சகஹுச்யதே. 343

(இ-ள்.) எந்த பிராமணன் புகுதியில் உட்கார்ந்து புசிக்கையில் பாத்திரத்தைவிட்டு முன்னே எழுந்திருக்கிறானோ அவன் மூடன். அவன் பாபிஷ்டன். பிரம்மஹத்தி செய்தவனோடொத்தவன்.

பாஜநேஷு சதிஷ்டத்ஸு ஸ்வஸ்திகுர்வந்தியேத்விஜா:
நதேவாஸ்த்ருப்திமாயாந்தி நிராசா: பிதரஸ்ததா. 344

(இ-ள்.) பிராமணர்கள் புசித்துக்கொண்டுருக்கையில் போஜனஞ் செய்வித்தவனை யாசீர்வதித்தால் அதினால் தேவர்கள் திருப்தியடைகிறதில்லை. பிதுர்களும் ஆசையற்று விடுகிறார்கள்.

அஸ்நாத்வாநைவபுஞ்ஜீத அஜப்த்வாஜ்யமஹூயச
பர்ணப்ருஷ்டேநபுஞ்ஜீத ராத்ரௌதீபம்விநாததா. 345

(இ-ள்.) ஸ்நானஞ் செய்யாமலும் ஜபம் செய்யாமலும் நெய்யை யாகுதி செய்யாமலும் புசிக்கக்கூடாது. அப்படியே இலையின் பின்புறத்திலும் இரவில் விளக்கில்லாமலும் புசிக்கக்கூடாது.

க்ருஹஸ்தஸ்து தயாயுக்தோ தர்மமேவாநுசிந்தயேத்
போஷ்யவர்கார்த்தஸித்யர்த்தம்ந்யாயவர்தீதுபுத்திமான்.
ந்யாயோபார்ஜிதவித்தேந கர்தவ்யம்ஹ்யாத்மரக்ஷணம்
அந்யாயேநதுயோஜீவேத் ஸர்வகர்ம பஹிஷ்க்ருத: 346

(இ-ள்.) கிரகஸ்த தர்மத்தை யனுஷ்டிப்பவன் தனது போஷ்ய வர்க்கத்தில் தயை யுடையவனுய் அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு நியாய வழியிலிருந்து பரலோக சாதகமான புத்தியுடன் தர்மத்தையே எண்ண வேண்டும். நியாயமாகத் தேடின பொருளைக்கொண்டு தன்னை காப்பாற்ற வேண்டும். அன்னியாயத்தா லெவன் ஜீவிக்கிருனே அவன் எல்லா கர்மத்திலும் விலக்கப்பட்டவன்.

அக்நிசித்கபிலாஸத்ரீ ராஜாபிக்ஷுர்மஹோததி:
த்ருஷ்டமாத்ரா: புநத்யேதே தஸ்மாத்பஸ்யேத
நித்யஸ:. 347

(இ-ள்.) அக்னிசயனஞ் செய்தவனையும் காராம் பசுவையும் சத்திரம் என்கிற யாகத்தைச் செய்தவனையும் அரசனையும் சன்னியாசியையும் சமுத்திரத்தையும் தினம் பார்க்க வேண்டும். இவைகள் பார்த்த பொழுதே பரிசுத்தமாக்குகிறவைகள்.

அரணீம்க்ருஷ்ணமார்ஜாலம் சந்தனம்ஸுமணிம்க்ருதம்
திலாந்க்ருஷ்ணாஜிநம்சாகம் க்ருஹேசைதா
நிரக்ஷயேத். 348

(இ-ள்-) அரணிக்கட்டையையும் கறுப்பு பூனையையும் சந்தனத்தையும் நல்ல ரத்தினத்தையும் நெய்யையும் எள்ளையும் கிருஷ்ணாஜினத்தையும் ஆட்டையும் வீட்டில் ரக்ஷிக்க வேண்டும்.

கவாம்ஸதம்ஸைகவ்ருஷம் யத்ரதிஷ்டத்யயந்த்ரிதம்
தத்க்ஷேத்ரந்தஸகுணிதம் கோசர்மபரிகீர்த்திதம். 349

(இ-ள்.) ஒரு காளையோடுகூடின நூறு கோக்கள் சங் கடப்படாமல் எவ்வளவு இடத்தில் நிற்குமோ அதற்குப் பத்து மடங்கு கொண்ட பூமி கோசர்மம் என்று பெயர் பெறும்.

ப்ரஹ்மஹத்யாதிபிர்மர்த்யோ மநோவாக்காயகர்மஜை:
ஏதத்கோசர்மதாநேந முச்யதேஸர்வகில்பிஷை:. 350

(இ-ள்.) மேற்கூறிய கோசர்மம் என்கிற க்ஷேத்திரத்தை தானஞ் செய்தவன் தன் மனது வாக்கு உடல் இவைகளாலுண்டான பிர்மஹத்தி முதலான எல்லா பாவங்களினல் விடப்படுகிருன்.

குடும்பிநேதரித்ராய ஸ்ரோத்ரியாயவிசேஷத:
யத்தாநம்தீயதேதஸ்மை தத்தாநம்ஸுபகாரணம். 351

(இ-ள்.) அதிக குடும்பத்தையுடையவனும் தரித்திரனும் வேதாத்யயனஞ் செய்தவனுமிருப்பவனுக்கு தானஞ் செய்தால் அத்தானம் செய்தவனுடைய சுபத்துக்குக் காரணமாகும்.

வாபீகூபதடாகாத்யை ர்வாஜபேயஸதைரபி
கவாம்கோடிப்ரதாநேந பூமிஹர்தாவிஸுத்யதி. 352

(இ-ள்.) ஒருவனுடைய பூமியை யபகரித்தவன் நடவாபி கிணர் குளம் முதலியது வெட்டுவதாலும் நூறு வாஜபேய யாகஞ் செய்வதாலும் கோடி கோதானத்தாலுஞ் சுத்தனகிருன்.

அஷ்டாதஸதிநாதர்வாக் ஸ்நாநமேவரஜஸ்வலா
அதஊர்த்வம்த்ரிராத்ரம் ஸ்யாதுஸநாமுநிரப்ரவீத். 353

(இ-ள்.) தூரஸ்திரீ ஸ்நானதின முதற்கொண்டு பதினெட்டு நாள்களுக்குள் ரஜஸ் உண்டானல் ஸ்நானம் பண்ணவேண்டும். அதற்கு மேற்பட்டால் மூன்று நாள் விலகவேண்டுமென்று உசனஸ்முனி சொன்னர்.

யுகம்யுகத்வயம்சைவ த்ரியுகம்சசதுர்யுகம்
சண்டாலஸூதிகோதக்யா பதிதாநாம்யதாக்ரமாத். 354

(இ-ள்.) பதிதர்களுக்கு ஒரு நுகத்தடியும் தூரஸ்திரீகளுக்கு இரண்டும் பிரஸவித்தவளுக்கு மூன்றும் சண்டாளனுக்கு நான்கு நுகத்தடியும் விலகவேண்டும்.

ததஸ்ஸந்நிதிமாத்ரேண ஸசேலம்ஸ்நாநமாசரேத்
ஸ்நாத்வாவலோகயேத் ஸூர்யமஜ்ஞாநாத்ஸ்
ப்ருச்யதேயதி 355

(இ-ள்) மேற்சொன்ன அளவைவிட நெருங்கினல் உடுத்த துணியுடன் ஸ்நானஞ் செய்யவேண்டும். மேற்சொன்னவர்களைத் தெரியாமல் தொட்டால் அப்படி ஸ்நானஞ் செய்வதுடன் சூரியனைப் பார்க்கவேண்டும்.

வித்யமாநேஷுஹஸ்தேஸு ப்ராஹ்மணோஜ்ஞாநதுர்பல:
தோயம்பிபதிவக்த்ரேண ஸ்வயோநேனஜாயதே
த்ருவம். 356

(இ-ள்) தன் கைகளிருக்கையில் மூடனுன பிராமணன் வாயினுல் குனிந்து ஜலத்தைக் குடித்தால் நாயாய்ப் பிறக்கிருன் இது நிச்சயம்.

யஸ்துக்ருத்த: புமாந்ப்ரூயாத் பார்யாயாமாத்ருகம்யதாம்
புநரிச்சதிசேதேநாம் விப்ரமத்யேதுச்ராவயேத்.
ஸ்ராந்த: க்ருத்தஸ்தமோந்தேவா க்ஷுத்பிபாஸா
பயார்தித:
தாநம்புண்யமக்ருத்வாது ப்ராயஸ்சித்தந்திரத்ரயம்.
உபஸ்ஸ்ருஸேத்த்ரிஷவணம் மஹாநத்யோஸ்துஸங்கமே
சீர்ணாந்தேசைவகாம்ததயாத் ப்ராஹ்மணாநபோஜ
யேத்தஸ. 357

(இ-ள்.) எந்தபுருஷன் தன்மனைவியைப்பார்த்து கோபித்துக்கொண்டு உன்னைப் புணர்ந்தால் மாதாவைப் புணர்ந்தது போலென்றுசொல்லி மறுபடி கோபந்தணிந்தவாறே அவளைப் புணர இச்சித்தால் பிராமணர்களின் நடுவில் நான் சிரமத்தினுலோ கோபத்தினுலோ அக்யானத்தினுலோ பசிதாகம் பயமிவைகளால் பீடிக்கப்பட்டோ இப்படி சொன்னேனென்று சொல்லக் கடவன்.

இப்படியே புண்யமான தானத்தைச் செய்கிறேனென்று சொல்லி தவறினவனும் சொல்லக்கடவன். பிறகு மூன்று நாளுபவாஸமிருந்து மகாநதிகள் சேருகிற விடத்தில் மூன்றுவேளையிலும் ஸ்நானஞ்செய்து முடிவில் கோ தானஞ்செய்து பத்து பிராமணர்களுக்கு போஜனஞ் செய்து வைக்கவேண்டும்.

துராசாரஸ்யவிப்ரஸ்ய நிஷித்தாசரணஸ்யச
அந்நம்புக்த்வா த்விஜ:குர்யாத் திநமேகமபோஜநம். 358

(இ - ள்.) விதிக்கப்பட்ட ஆசாரத்தைத் தவிர்ந்தவனும் தகையப்பட்டத்தைச் செய்தவனுமான பிராமணனுடைய அன்னத்தைப் புசித்த பிராமணன் ஒருநாளுபவாஸ மிருக்கவேண்டும்.

ஸதாசாரஸ்யவிப்ரஸ்ய ததாவேதாந்தவேதிந:
புக்த்வாந்நம்முச்யதேபாபா தஹோராத்ராந்த
ராந்நர:. 359

(இ - ள்.) நல்ல ஆசாரத்தோடு கூடினவனும் வேதாந்தங்களை யறிந்தவனுமான பிராமணனுடைய அன்னத்தைப் புசித்தால் அந்த தினத்திலே பாபத்திலிருந்து விடப்படுகிறான்.

ஊர்த்வோச்சிஷ்டமதோச்சிஷ்ட மந்தரிக்ஷம்ருதௌததா
க்ருச்ரத்ரயம்ப்ரகுர்வீத ஆஸௌசமரணேததா. 360

(இ - ள்.) கட்டில் முதலியவற்றில் படுத்துக்கொண்டே மரித்தலாகிய ஆகாச மரணத்திலும் வாந்தி முதலிய மேலெச்சிலிலும், மூத்திரம் முதலிய கீழெச்சிலிலும் ரஜஸ்வலை முதலிய தீட்டுக்களிலும் மரித்தவருக்கு கர்த்தாக்கள் மூன்று க்ருச்ரம் செய்யவேண்டும்.

க்ருச்ரம் தேவ்யயுதம்சைவ ப்ராணாயாமஸதத்வயம்
புண்யதீர்த்தேநார்த்ரசிர ஸ்நாநம்த்வாதசஸங்க்யயா.
த்வியோஜநேதீர்த்தயாத்ரா க்ருச்ரமேகம்ப்ர
கீர்த்திதம் 361

(இ - ள்.) பதினாயிரம் காயத்ரீ ஜபமும் இருநூறு பிராணாயாமமும் புண்ணியதீர்த்தத்தில் ஒருதரம் மூழ்கி

தர்ப்பண ஜபாதிகளைச் செய்து தலையையுலர்த்தி மறு ஸ்நானம் என்கிற கணக்கில் பன்னிரண்டு ஸ்நானமும் இரண்டுயோஜனை தூரமுள்ள தீர்த்தயாத்திரையும் ஒரு கிருச்ரத்திற்கு சமானமாகும்.

க்ருஹஸ்த:காமத குர்யாத்ரேதஸஸ்கலநம்புவி
ஸஹஸ்ரந்துஜபேத்தேவ்யா: ப்ராணாயாமைஸ்த்ரி
பிஸ்ஸஹ. 362

(இ-ள்.) கிரகஸ்தன் காமத்தால் ரேதஸ்ஸை பூமியில் விட்டால் மூன்று பிராணாயாமங்களுடன் ஆயிரம் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும்.

சதுர்வித்யோபபந்நஸ்து விதிவத்ப்ரஹ்மகாதுகே
ஸமுத்ரஸேதுகமநம் ப்ராயஸ்சித்தம்விநிர்திஸேத். 363

(இ-ள்.) நான்குவேதங்களையும் நன்ருகவுணர்ந்தவன் ப்ரம்மஹத்திசெய்தானேயாகில் அவனுக்கு சமுத்திரத்தில் இராமனுல் கட்டப்பட்ட ஸேதுவுக்குப் போவதைப் பிராயச்சித்தமாக விதிக்கவேண்டும்.

ஸேதுபந்தபதேபிக்ஷாம் சாதுர்வர்ண்யாத்ஸமாசரன்
வர்ஜயித்வாவிகர்மஸ்தாந் சத்ரோபாநத்விவர்ஜித:. 364

(இ - ள்.) சேதுவுக்குப் போகும்வழியில் கர்ம்மப்பிரஷ்டர்களை விட்டு மற்ற நான்குவர்ணத்தாரிடத்திலும் பிச்சைவாங்கிக்கொண்டு குடை செருப்பு இவைகளில்லாமல் செல்லவேண்டும்.

அஹம்துஷ்க்ருதக்ர்மாச மஹாபாதககாரக:
க்ருஹத்வாரேஷுதிஷ்டாமி பிக்ஷார்த்தீப்
ரஹ்மகாதுக: 365

(இ - ள்,) நான் செய்யக்கூடாததைச் செய்தவன், மகாபாதகத்தைச் செய்தவன், பிர்ம்மஹத்திசெய்தவன்; பிச்சை வேண்டியவனுக வீட்டுவாசலில் நிற்கிறேன் என்று சொல்லவேண்டும்.

கோகுலேஷுவநேசைவ க்ராமேஷுநகரேஷுச
தபோவநேஷுதீர்த்தேஷு நதீப்ரஸ்ரவணேஷுச. 366

(இ - ள்.) மந்தைவெளிகளிலும் காட்டிலும் கிராமங்களிலும் பட்டணங்களிலும் தபோவனங்களிலும் புண்யதீர்த்தங்களிலும் புண்யநதிகளிலும் மற்ற ஆறுகளிலும் செல்லவேண்டும்.

ஏதேஷு¬க்யாபயந்நேந: புண்யங்கத்வா துஸாகரம்
தஸயோஜநவிஸ்தீர்ணம் ஸதயோஜநமாயதம்.
ராமசந்த்ரஸமாதிஷ்டம் நலஸஞ்சயஸஞ்சிதம்
ஸேதுந்த்ருஷ்ட்வாஸமுத்ரஸ்ய ப்ரஹ்மஹத்யாம்வ்ய
போஹதி 367

(இ - ள்.) மேற்சொன்ன விடங்களில் மேற்சொன்னபடி தன்பாவத்தை பிரஸித்தம் செய்துகொண்டுபோய் பத்துயோஜனை யகன்றும் நூறுயோஜனை நீண்டுமிருக்கிற பரிசுத்தமான சமுத்திரத்தைக்கிட்டி அவ்விடத்தில் ராமனுலேவப்பட்டு நளனென்பவனுல் கட்டப்பட்டதுமான ஸேதுவைப்பார்த்தவுடன் பிர்ம்மஹத்தியைப் போக்குகிருன்.

ஸேதுந்த்ருஷ்ட்வாவிஸ¬த்தாத்மா த்த்வவகா
ஹேதஸாகரம். 368

(இ - ள்.) சேதுவைப் பார்த்தவுடன் சுத்தனுய்ப் பிறகு சமுத்திரத்தில் மூழ்கவேண்டும்.

யஜேதவாஸ்வமேதேந ராஜாதுப்ருதிவீபதி:. 369

(இ - ள்.) பூமிக்கு நாயகனுன அரசனுக விருந்தால் அச்வமேத மென்கிற யாகத்தையும் செய்யலாம்.

புந:ப்ரத்யாகதோவேஸ்ம வாஸார்த்தமுபஸர்ப்பதி
ஸபுத்ரஸ்ஸஹப்ருத்யைஸ்ச்ச குர்யாத்ப்ராஹ்மண
போஜநம்.
காஸ்ச்சைசவைகஸதம்தத்யாத் சாதுர்வேத்யேது
தக்ஷிணும்
ப்ராஹ்மணாநாம்ப்ரஸாதேந ப்ரஹ்மஹாதுவி
முச்யதே. 370

(இ - ள்.) மறுபடி தன்வீடுவந்துசேர்ந்து பிள்ளைகளோடும் வேலைக்காரர்களோடும் பிராம்மண போஜனம்

செய்வித்து விருஷபத்தோடு கூடிய நூறு கோதானம் நான்குவேதம் தெரிந்தவனுக்குக் கொடுத்து பிராமணர்களுடைய அனுக்கிரஹத்தினல் பிர்ம்மஹத்தியில் நின்று விடப்படுகிருன்.

ஸவநஸ்தாம்ஸ்த்ரியம்ஹத்வா ப்ரஹ்மஹத்யாவ்ரதம்
சரேத். 371

(இ-ள்.) யாகத்திலிருக்கிற ஸ்திரீயைக்கொன்றவன் பிர்ம்மஹத்திக்குச் சொன்ன விருதத்தைச் செய்ய வேண்டும்.

மத்யபஸ்சத்விஜ:குர்யாத் நதீங்கத்வாஸமுத்ரகாம்
சாந்த்ராயணேததஸ்சீர்ணே குர்யாத்ப்ராஹ்மண
போஜநம்.
அநடுத்ஸஹீதாங்காஞ்ச தத்யாத்விப்ரேஷு
தக்ஷிணாம் 372

(இ-ள்.) கள்குடித்த த்விஜன் சமுத்திரகாமியான நதியினருகில் சாந்திராயணவிருதத்தை முடித்து பிராமணபோஜநம் செய்வித்து விருஷபத்தோடுகூடிய கோதானத்தை பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

ஸுராபாநம்ஸக்ருத்க்ருத்வா அக்நிவாணும்ஸுராம்
பிபேத்
ஸுபாதயேத்ததாத்மாந மிஹலோகேபரத்ரச. 373

(இ-ள்.) ஒருக்கால் சாராயத்தைக்குடித்தவன் சாராயத்தை அக்னியின் வர்ண முண்டாகும்படி நன்ருகக் காய்ச்சி அதைக்குடிக்கவேண்டும். அதினல் தன்சரீரத்தை விட்டு இந்தலோகத்திலும்பரலோகத்திலும்சுத்தனுவன்.

அபஹ்ருத்யஸுவர்ணந்து ப்ராஹ்மணஸ்யததஸ்வயம்
கச்சேந்முஸலமாதாய ராஜாநம்ஸ்வவதாயது.
ததஸ்ஸுத்திமவாப்நோதி ராஜ்ஞாஸௌமுக்தஏவது
காமதஸ்துக்ருதம்பத்ஸ்யாத் நாந்யதாவதமர்ஹதி. 374

(இ-ள்.) பிராமணனுடைய ஸ்வர்ணத்தைத்தான பகரித்தால் உலக்கையைக் கையிலெடுத்துக்கொண்டு தன்னைக்கொல்வதற்கு அரசனிடத்தில்போகவேண்டும்.

பிறகு அரசன் அந்த உலக்கையாலிவனை ஒருஅடி அடித்தால் அந்த அடியாலிவனிறந்தாலும் விடப்பட்டாலுமிவன் சுத்தனுகிறுன். அறிந்துசெய்த திருட்டுக்கு இந்த வதம் பிராயச்சித்தம் இல்லாவிடிலிது பிராயச்சித்தமாகாது.

ஆஸநாச்சயநாத்யாநாத் ஸம்பாஷாத்ஸஹபோஜநாத்
ஸங்க்ராமந்திஹிபாநி தைலபிந்துரிவாம்பஸி. 375

(இ-ள்.) பாபியுடன் உட்கார்தலாலும் படுப்பதாலும் வண்டி முதலியவைகளில்கூட ஏறிப்போவதாலும் வார்த்தை சொல்வதாலும் கூடபோஜனம் செய்வதாலும் பாவங்கள் ஜலத்தில் எண்ணைத்துளிபோல் பரவுகின்றன.

சாந்த்ராயணம்யாவகஞ்ச துலாபுருஷஏவச
கவாஞ்சைவா நுகமநம் ஸர்வபாபப்ரணுஸநம். 376

(இ-ள்.) சாந்திராயணவிருதமும் யாவகவிருதமும் துலாபுருஷ கிருச்ரமும் பசுக்களைப் பின்தொடர்கிற விருதமும் மேலேசொன்னபாவங்கள் தவிர்த்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம்.

ஏதத்பாராசரம்ஸாஸ்த்ரம் ஸ்லோகபஞ்சஸதாதிகம்
த்ரிஸப்ததிஸமாயுக்தம் தர்மஸாஸ்த்ரஸ்யஸங்க்
ரஹம். 377

(இ-ள்.) இந்த பராசரஸ்மிருதி ஐந்நூற்றி யெழுபத்துமூன்று சுலோகங்களடங்கியது தர்மசாஸ்திரத்திற்கு சங்கிரகமானது.

யதாத்யயநதர்மாணி தர்மஸாஸ்த்ரமிதந்ததா
அத்யேதவ்யம்ப்ரயத்நே நநியதம்ஸ்வர்க்ககாமிநா. 378

(இ-ள்.) வேதாத்யயனத்திற்கு எந்தநியமங்கள் சொல்லப்படுகிறதோ அப்படியே இந்ததர்ம்மசாஸ்திரமும் பிரயத்னத்துடன் ஸ்வர்க்கமடையவேண்டிய புருஷனுல் நியமமாக அத்யயனம் பண்ணத்தகுந்தது.

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ பராசரஸ்மிருதி முற்றிற்று.

# நியமங்களின் முக்கியத்துவம்

ஒருவன் தன் வாழ்க்கையை நல்வழியில் நன்ருக நடத்துவதற்குச் சில நியமங்கள் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்—1. ஆசிரம தர்மங்கள், 2. வர்ண தர்மங்கள், 3. அந்த அந்த வர்ண ஆசிரமங்களுக்குத் தக்கபடி அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள். ஸாமான்ய தர்மங்கள் 'நியமங்கள்' என்ற தலைப்பில் சேரவில்லை. ஆகவே அவற்றைப் பற்றி இங்கே விசாரிக்கவில்லை.

பொதுவாக நியமங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்—1. ஆஹார நியமம், 2. ஸ்நானுதி சௌச நியமம், 3. விரதாதி நியமங்கள் என்று. இவற்றை முக்கியமாக ஒவ்வோர் ஆசிரமத்தில் உள்ளவர்களும் கடைபிடிக்க வேண்டுமென்று நம்முடைய ஸநாதன தர்மத்தில் பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

'ஆஹார சுத்தியினுல் ஸத்துவசுத்தி' என்பதற்கிணங்க ஆஹாரக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தர்மசாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன.

சிராத்தம் முதலான பித்ருதினங்களில் உபவாஸம், ஏகாதசி, ஸ்ரீராமநவமி கோகுலாஷ்டமி சிவராத்திரி முதலான தினங்களில் சுத்த உபவாஸம் அதாவது ஆஹாரமின்மை அன்ருட ஆஹாரத்திலேயே மிதமாக உண்பது இவை யாவும் ஆஹார நியமத்தில் சேர்ந்தவை. இவை பற்றின உபதேசங்கள் தர்ம சாஸ்திரங்களிலும் ஆயுர்வேத நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பிராம்மணர்களுக்கு முக்கியமாக அஹிம்ஸையைக் கொண்ட ஆஹாரம் அடிப்படை. மாம்ஸத்தை அறவே வெறுக்க வேண்டும். இப்போதெல்லாம் பிராம்மணக் குடும்பங்களில் கூடச் சிலவற்றில் புலால் உண்பது ஏற்பட்டுவருவதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன். அரிசியையும் காய்கறிகளையும் சமைப்பதனுல் ஏற்படும் ஹிம்ஸைக்குக் கூடப் பிராயச்சித்தமாகத் தினமும் கிருஹஸ்தர்கள் வைச்வதேவம்' என்ற கர்மாவை அநுஷ்டிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது இதை இப்போது அநுஷ்டிப்பவர்களின் எண்ணிக்கை பெரும்பாலும் குறைவாகிவிட்டது.

மரங்களிலிருந்து தாமாக விழும் பழங்களும் கிழங்கு முதலியவையும் தாம் உன்னதமான ஆஹாரம் என்று சொல்லியிருக்கிறது. இதனால்தான் அரிசியினால் ஆன ஆஹாரத்தை உட்கொள்ளாத தினங்களில் பழங்களை (ஃபல்) ஆஹாரமாகக் கொள்ளவேண்டும் என்று முன்னோர்கள் தீர்மானித்துள்ளனர். பல (फल) ஆஹாரம் தமிழில் பல ஆஹாரமாக மாறிப் பலவித வஸ்துக்களையும் ஒரே சமயத்தில் உட்கொள்வதாக இக்காலத்தில் முடிந்துள்ளது பல ஆஹாரம் உட்கொள்ள வேண்டிய தினங்களில் உளுந்து சேர்ந்த இட்டிலி முதலியவற்றைப் புசிப்பது உசிதமே அல்ல.

வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் கூறியபடி இரண்டு வேளை ஆஹாரத்தைத்தான் தினமும் புசிக்க வேண்டும். ஆஹாரம் மிதமாகவும் ஹிதமாகவும் இருக்க வேண்டும். காய்கறிகளைச் சில தினங்களில் உண்ணக் கூடாது என்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. ஆஹாரப்பையைப் பாதி பாகம் அன்னத்தினாலும், கால் பாகம் ஜலத்தினாலும் நிரப்ப வேண்டும் மிகுதியான கால் பாகத்தை வாயுவின் ஸஞ்சாரத்துக்கு விட்டுவிட வேண்டும். இவ்வாறு வைத்திய நூல்கள் கூறுகின்றன. தினமும் காலையில் எழுந்தவுடன் ஜீர்னசத்தி எவ்வாறு உள்ளது என்பதை அறிந்துகொண்டு அற்றகுத் தக்கவாறு அன்றைய ஆஹாரத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் ஏகாதசி போன்ற விரத தினங்களில் முழுவதும் ஆஹாரம் இல்லாமல்தான் இருக்க வேண்டும். ஏகாதசி விரதத்தை அநுஷ்டிப்பதனால் ஏற்படும் புண்ணியத்தை விளக்கவே ருக்மாங்கதனின் சரித்திரம் காண்கிறது.

சில தினங்கள் ஆஹாரம் இல்லாமலிருப்பது சரீரத்துக்கு ஆரோக்கியம் என்று மேல்நாட்டு அறிஞர்களும் கூறுகிறார்கள். ஆஹாரமின்மையே ஒரு சிகித்ஸை என்றும் அவர்கள் கண்டுள்ளனர்.

சிராத்தாதி காலங்களில் இரவு ஆஹாரமின்மை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'உபவாஸம்' என்று பெயர். சிராத்தத்துக்கு முந்தின தினம் இரவிலும் ஆஹாரம் உண்ணக்கூடாது. அன்றுஇரவே சிராத்தம் செய்பவரின் வீட்டுக்குப் பித்ருக்கள் வந்துவிடுவதனால்

(உபவாஸம்) மறுதினம் அவர்களுக்கு ஹோமம் முதலிய வற்றினுல் திருப்தி செய்து வைத்தபிறகே நாம் உண்ண வேண்டும். ஸங்க்ரமணம் முதலான தர்ப்பண தினங் களிலும், புண்ணிய தினங்களிலும் (உபவாஸம்) இரவு போஜனமின்மையை விதித்திருக்கிருர்கள்.

ஸ்நானம்—ஸ்நானம் ஒரு சுத்தி கர்மாவாக நம் சாஸ் திரங்களில் போற்றப்பட்டுள்ளது. ஸ்நானம் செய்வ தையும் விதிப்படி செய்ய வேண்டும். ஐந்து அங்கங் களுடன் கூடியதாக ஸ்நானத்தைச் செய்ய வேண்டும்.

ஸங்கல்ப: ஸூக்தபடநம் மார்ஜநம் சாகமர்ஷணம் |
தேவதாதர்ப்பணம் சைவ ஸ்நாநம் பஞ்சாங்கமுச்யதே ||

அதாவது ஸங்கல்பம், மார்ஜனம், தர்ப்பணம், ஸூக்தபடனம், வாஸோதக திலோதக தானம் இவ் வைந்தும் 'பஞ்சாங்க' ஸ்நானத்துக்கு ஏற்பட்டவை என்று கூறியிருக்கிறது.

எந்தக் கர்மாவைச் செய்வதற்கும் முன்பாக ஸநானம் செய்து சரீர சுத்தியைப் பெற வேண்டும். பெரியோர் களின் அநுஷ்டானப்படி, கிருஹஸ்தர்களுக்குத் தினமும் இரண்டு முறை ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது.

ப்ராதர்மத்யாஹ்நயோ: ஸ்நாநம்
வாநப்ரஸ்தக்ருஹஸ்தயோ: |

பத்னீ ஸம்யோகத்துக்கும் விதிகள் உண்டு. சாஸ் திரப்படி குறித்த காலத்தில் இதில் நியமத்துடன் நடந்து கொள்பவர்கள் பிரம்மசரியத்துடன் கூடியவர்கள் என்றே சாஸ்திரங்கள் கூறுகின்றன. முறை தவருமல் இதைக் கடைப்பிடிப்பது ஸந்ததிகளின் ஆரோக்கியத் துக்கு மிகவும் இன்றிமையாததாகும்.

தஸ்மாந் மலவத்வாஸஸா ந ஸம்வவேத, ந ஸஹாஸீத, நாஸ்யா அந்நமத்யாத், திஸ்ரோ ராத்ரீர் வ்ரதம் சரேத் |

ஸ்த்ரீகள் ரஜஸ்வலா காலத்தில் மூன்று தினங்களும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் பல உள்ளன. இவை விஸ்தாரமாக வேதத்திலும் தர்ம சாஸ்திரங்களி லும் கூறப்பட்டுள்ளன. அந்த மூன்று தினங்களும் அவர்கள் வீட்டின் உள்ளேயே வசிப்பது என்பது தகாது. அக்காலத்தில் அவர்களிடம் பேசக்கூடாது. அவர்கள் புசித்த மிகுதியை உண்ணக்கூடாது. அவர்கள் ஸ்நானம்

செய்யக்கூடாது. இதுபோல் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப்பிடித்து நடப்பது அவர்களுடைய ஆரோக்கியத்துக்கும், ஸந்ததிகளின் க்ஷேமத்துக்காகவும் ஏற்பட்டதே அல்லாமல் அவர்களை ஹிம்ஸை செய்வதற்காக அல்ல.

தண்டகாரண்யத்தில் ஸ்ரீராமன் பிரவேசித்தபோது, 'அரண்யத்தில் சில நியமங்களை அவசியமாகக் கடைபிடிக்க வேண்டியிருக்கிறதே. ஆகவே, ஆயுதம் எடுத்து அரக்கர்களைக் கொல்வது சரியா?' என்று ஸீதை ஸ்ரீராமனைக் கேட்கிறாள்.

ஆத்மாநம் நியமைஸ் தைஸ்தை: கர்ஸயித்வா ப்ரயத்நத: ।
ப்ராப்யதே நிபுணைர் தர்மோ ந ஸுகால்
லப்யதே ஸுகம் ॥

"பலவித நியமங்களினால் சரீரத்தை வருத்தித் தர்மத்தைப் பெரியோர்கள் அடைகின்றனர். ஸுகத்தினால் ஸுகம் கிடைப்பதில்லை." ஆகவே, நியமத்துடன் கூடின தர்மங்களை அநுஷ்டிப்பதனால்தான் சுகம் ஏற்படும். நியமமற்ற சுக வாழ்க்கையினால் தர்மம் கிடைக்காது என்பதை ஸீதாதேவியின் வாக்கினாலும் அறியமுடிகிறது.

பிராம்மணர்களுக்கும், பொதுவாக ஹிந்துக்கள் எல்லாருக்குமே அந்த அந்த வர்ணங்களுக்கும் அந்த அந்த ஆசிரமங்களுக்குமான தர்மங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றை அவசியமாகக் கடைப்பிடிப்பதனால் சரீர ஆரோக்கியத்தையும், தீர்க்கமான ஆயுளையும் அடைய முடியும் என்பதில் ஐயமில்லை.

இக்காலத்தில் நாகரிக சுகவாழ்க்கை சாஸ்திர விரோதமான பல அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பாகப் பிராம்மணர்களேனும் அறிந்து, சாஸ்திர உபதேசங்களின்படி நியமங்களில் சிலவற்றையேனும் கைவிடாமல் இக்காலத்திலுங்கூட அநுஷ்டித்து சநாதன தர்மத்தைக் காக்க வேண்டும் என்று கோருகிறோம்.

—o—

# ஸ்ரீ மஹாலக்ஷ்ம்யஷ்டோத்தரசத நாமஸ்தோத்ரம்.

1. தேவ்யுவாச-

தேவதேவ மஹாதேவ த்ரிகாலஞ்ஞ மஹேச்வர ।
கருணாகர தேவேச பக்தா நுக்ரஹகாரக ॥



**W. S. Insulators of India Ltd.,**

"DHUN BUILDING"
175/1, Mount Road,
(P. P. 2763)
MADRAS-6000 02
Phone : 810736/39

*Works :*
Porur
St. Thomas Mount
Madras-602104
Telephone : 431811/14

2. அஷ்டோத்தரசதம்லக்ஷ்மயா: ச்ரோதுமிச்சாமி தத்வத: ।
தேவி ஸாது மஹாபாகே மஹாபாக்யப்ரதாயகம் ॥

3. ஸர்வைச்வர்யகரம் புண்யம் ஸர்வபாபப்ரணாசநம் ।
ஸர்வதாரித்ர்யசமநம் ச்ரவணாத் புக்திமுக்திதம் ॥
ராஜவச்யகரம் திவ்யம் குஹ்யாத்குஹ்யதரம் பரம் ।




Phone : Office : 83902
Factory : 433186

**FUEL INJECTION SERVICE**

Diesel Fule Pump Overhaul & Calibration
Reconditioning Nozzles, Atomizer Testing, Etc;
Fabrication & Sheet Metal Pressings

15, STATE BANK STREET, MOUNT ROAD,
MADRAS-600 002

(Factory : L-7 Industrial Estate, Guindy,
MADRAS-600 032

4. துர்லபம் ஸர்வதேவாநாம் சதுஷ்ஷஷ்டிகலாஸ்பதம் ||
பத்மாதீநாம் வராந்தாநாம் நிதீநாம் நித்யதாயகம் |
ஸமஸ்ததேவஸம்ஸேவ்யம் அணிமாத்யஷ்டஸித்திதம் ||
5. ஓமத்ர பஹுநோக்தேந தேவீப்ரத்யக்ஷதாயகம் |
தவ ப்ரீத்யாத்ய வக்ஷ்யாமி ஸமாஹிதமநா: ச்ருணு ||




With the best compliments of :

**ADDISON & CO. LTD.**

**158, Mount Road, Madras-600002**

**Manufacturers of :**

Engineers Cutting Tools
Machine Tools
Machine Tool Accessories
Grey Iron Castings

*Branches at :*

BANGALORE, BOMBAY, CALCUTTA & NEW DELHI

6, அஷ்டோத்தரஸதஸ்யாஸ்ய மஹாலக்ஷ்மீஸ்து தேவதா I
க்லீம் பீஜம் பதமித்யுக்தம் சக்திஸ்து புவநேச்வரீ II
அங்கந்யாஸ: கரந்யாஸ: ச்ராமித்யாதிப்ரகீர்த்தித: II




# RADIO SERVICES

**Krishnan & Krishnan**

10, Mount Road,
(Next to Santhi)
Phone : 86091

24, General Patters Road
(Next to Wellington)
Phone : 88089

MADRAS-600002

7. (த்யாநம்) வந்தே பத்மகராம் ப்ரஸந்நவதநாம் ஸௌ
பாக்யதாம் பாக்யதாம் ஹஸ்தாப்யாம் அபயப்ரதாம்
மணிகணைர்நாநாவிதை ர்பூஷிதாம் I பக்தாபீஷ்டபல
ப்ரதாம் ஹரிஹரப்ருஹ்ம்மாதிபி: ஸேவிதாம் பார்ச்வே
பங்கஜசங்கமுக்யநிதிபிர்யுக்தாம் ஸதா சக்திபி: II




# BHARAT MOTORS

Props : N. R. Private Ltd.

5, GREAMS ROAD, THOUSAND LIGHTS,
MADRAS-600 006.

**Phone** : 86204 Grams : Fibroflex/Bharatcars
**Registered** Office : Mody Chambers, Sandhurst Bridge,

BOMBAY-400 004. Phone : 352113
**Factory** : Industrial Estate-Pettai-Tirunelveli-627010,
Phone : 622

8. ஸரஸிஜநயநே ஸரோஜஹஸ்தே தவளதராம்சுகந்தமால்ய
சோபே! பகவதி ஹரிவல்லபே மநோஞ்ஞே த்ரிபுவன பூதிகரிப்ர
ஸீத மஹ்யம் ||

9. ப்ரக்ருதிம் விக்ருதிம் வித்யாம் ஸர்வபூதஹிதப்ரதாம் |
சிரத்தாம் விபூதிம் ஸுரபிம் நமாமி பரமாத்மிகாம் ||




Phone : 89709

# METAL PRODUCTS CO.,

Dealers in Spare Parts for:

**Trucks:** Perkins Benz, Bedford Ford, Leyland

**Cars:** Ambassador, Fiat, Standard

**Tractors:** International, Ferguson Zetor

**43, General Patters Road,**

**MADRAS-600 002**

10, வாசம் பத்மாலயாம் பத்மாம் சுசிம் ஸ்வாஹாம் ஸ்வதாம்ஸுதாம் ।
தந்யாம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் நித்யபுஷ்டாம் விபாவரீம் ॥

11, அதிதிம்ச திதிம் தீப்தாம் வஸுதாம் வஸுதாரிணீம் ।
நவாமீ கமலாம் காந்தாம் காமாக்ஷீம் க்ரோதஸம்பவாம் ॥




Phone : Office : 82353 Res : 424589

N. SANTHANAM

**K. V. N. Automobiles**

Res : G5-55th Street, Ashok Nagar,
MADRAS-600 083

Office : 60-B, General Patters Road,
MADRAS-600 002

12. அநுக்ரஹப்ரதாம் புத்திம் அநகாம் ஹரிவல்லபாம் ।
அசோகாம் அம்ருதாம் தீப்தாம் லோகசோகவிநாசிநீம் ॥

13, நமாமி தர்மநிலயாம் கருணாம் லோகமாதரம் ।
பத்மப்ரியாம் பத்மஹஸ்தாம் பத்மாக்ஷிம் பத்ம ஸுந்தரீம் ॥




## Central Motors

10, General Patters Road, (Opp. Midland Cinema)
MADRAS-600 002 Phone : 87802

Hippo Damper, Bewer Damper, 680 Engine &
Meadow's Marine Parts Available with us.

14. பத்மோத்பவாம் பத்மமுகீம் பத்மநாபப்ரியாம் ரமாம் ।
பத்மமாலாதரம் தேவீம் பத்மநீம் பத்மகந்திநீம் ॥

15, புண்யகந்தாம் ஸுப்ரஸந்நாம் ப்ரஸாதாபிமுகீம் ப்ரபாம் ।
நமாமி சந்த்ரவதநாம் சந்க்ராம் சந்த்ரஸஹோதரீம் ॥



*With best compliments from :*

**M/s. Ever Best Auto Agencies**

**No 16, State Bank Street,**
**Mount Road MADRAS-600 002.**

Telephone : Office : 810662 Resi : 83865

**For Everything in Automobiles :**
Specialists in service to customers
Manufacturers & Distributors

**Associate concerns :**
**Southern Auto Supplies (Regd.)**
DELHI-6

16. சதுர்புஜாம் சந்த்ரரூபாம் இந்திராம் இந்துசீதளாம் ।
ஆஹ்லாத ஜநநீம் புஷ்டிம் சிவாம் சிவகரீம் ஸதீம் ॥
17. விமலாம் விச்வஜநநீம் புஷ்டிம் தாரித்ர்ய நாசிநீம் ।
ப்ரீத புஷ்கரிணீம் சாந்தாம் சுக்லமால்யாம்பரச்ரியம் ॥




Phone : 82325
Office : 87420

**INDIR**
# AUTOMOBILES

**Specialists in Truck Parts**
**13, General Patters, Road,**
MADRAS-600 002

18. பாஸ்கரீம் பில்வநிலயாம் வராரோஹாம் யசஸ்விநீம் ।
வஸுந்தராம் உதாரங்காம் ஹரிணீம் ஹேமமாலிநீம் ॥

19. தநதாந்யகரீம் ஸித்திம் ஸ்த்ரைண ஸௌம்யாம் சுபப்ரதாம் ।
ந்ருபவேஸ்ம கதாரநந்தாம் வரலக்ஷ்மீம் வஸுப்ரதாம் ॥




With the best compliments from :

Phone : 85263

KAPUR AUTO AGENCIES

41-B, General Patters Road,

MOUNT ROAD, MADRAS-600002

20. சுபாம் ஹிரண்யப்ராகாராம் ஸமுத்ரத நயாம்ஜயாம் ।
நமாமி மங்களாம் தேவீம் விஷ்ணு வக்ஷ:ஸ்த்தலஸ்த்திதாம் ।।
21. விஷ்ணுபத்நீம் ப்ரஸந்நாக்ஷீம் நாராயணஸமாச்ரிதாம் ।।
தாரித்ர்யத்வம்ஸிநீம் தேவீம் ஸர்வோபத்ரவ வாரிணீம் ।।
22, நவதுர்க்காம் மஹாகாளீம் ப்ரும்ஹ விஷ்ணு
சிவாத்மிகாம் ।
த்ரிகாலஞ்ஞாநஸம்பந்நாம் நமாமி புவநேச்வரீம் ।।




**With the best compliments from :**

Phone : **86489**

# Geetha Automobiles

Dealers in Motor Spares

18, General Patters Road, Mount Road,

MADRAS-600002

23. லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ரராஜதநயாம் ஸ்ரீரங்கதாமேச்வரீம்
தாஸீ பூதஸமஸ்ததேவவநிதாம் லோகைக தீபாங்குராம் ।
ஸ்ரீமந்மந்த கடாக்ஷ லப்த விபவப்ரஹ்மேந்த்ர கங்காதராம்,
த்வாம்த்ரை லோக்ய குடும்பிநீம் ஸரஸிஜாம் வந்தே முகுந்த
ப்ரியாம் ।




Phone : 87355

**Mahavir Automobiles**

Specialists in Car Parts

4/8, GENERAL PATTERS ROAD,

MADRAS - 600 002.

24. மாதர் நமாமி கமலே கமலாயதாக்ஷி ஸ்ரீவிஷ்ணுஹ்ருத்
கமலவாஸினி விச்வமாத: । க்ஷீரோதஜே கமலகோமள
கர்பகௌரி லக்ஷ்மீ:ப்ரஸீத ஸததம் நமதா சரண்யே ॥




With the best compliments from :

MEENA AUTO SERVICE

3, STATE BANK STREET, 1st LANE,

MADRAS-600 002

25. த்ரிகாலம்யோஜபேத்வித்வாந்ஷண்மாஸம்விஜ்தேந்த்ரிய:।
தாரித்ர்யத்வம்ஸநம்க்ருத்வாஸர்வமாப்நோத்யயத்நத:॥தேவீ
நாமஸஹஸ்ரேஷு புண்யமஷ்டோத்தரம் சதம் ॥

26. யேநச்ரியமவாப்நோதி கோடிஜந்மதரித்ரத: ।
ப்ருகுவாரே சதம் தீமாந்படேத் வத்ஸாமாத்ரகம் ॥
அஷ்டைச்வர்யமவாப்நோதி குபேர இவ பூதலே ॥




With best compliments from

**Sawhney Trading Co. (P) Ltd.**

75, General Patters Road,

MADRAS-600002.

27, தாரித்ர்யமோசநம் நாம ஸ்தோத்ரமம்பாபரம் சதம் ।
யேநச்ரியமவாப்நோதி கோடிஜந்மதரித்ரத: ॥
புக்த்வாதுவிபுலாந்போகாந்ஸ்யஸ்ஸாயுஜ்யமாப்நுயாத் ।
ப்ராத:காலே படேந்நித்யம் ஸர்வது:கோப்சாந்தயே ॥
படம்ஸ்து சிந்தயேத்தேவீம் ஸர்வாபரணபூஷிதாம் ॥
ஸ்ரீமஹாலக்ஷ்ம்யஷ்டோத்தரசத நாமஸ்தோத்ரம் சம்பூர்ணம்




With best compliments from

Phone : 82325

**Kishin Enterprises**

13, General Patters Road,

MADRAS-600002